HIS HOLINESS DHAKSHINA SHIRDI PEETAM
DWARAKAMAI ASHRAM
Thavathiru. SriLaSri. Dr.A.V.SHANTHIKUMARA SWAMIGAL
'N' Block, Aura Homes, Lake Area 8th Street, 2nd Cross, (Near Mattuthavani), Madurai - 625107
Cell.:99940-23032



ஆசியுரை

"வரைசேரும் முகில் முழவ மயில்கள் பல
நடமாட வண்டுபாட
விரைசேர் பொன்னிதழிதர மென்காந்தள்
கையேற்கு மிழலையாமே"

"மலைகளில் தங்கியுள்ள மேகங்கள் முழவு போல் ஒலிக்க, ஆண்மயில்கள் பல நடனமாட, வண்டுகள் அதற்கேற்றாற் போல் பாட, கொன்றை மரம் தங்கக் கொன்றை மலர்களை பொற்காசு போல் பரிசாக வழங்க, அழகான காந்தள்மலர்கள் கைபோல விரிந்து வாங்குகின்ற திருவீழிமிழலை" என்று திருஞானசம்பந்தப் பெருமான் திருவீழிமிழலையில் பெருமான் திருவருளால் பொற்காசு பெற்றதை இயற்கையோடு இணைத்துப் பாடுகிறார்.

திருஞானசம்பந்தப் பெருமானின் மொழிபொருளை பொன்னேபோல் போற்றி,

"விண்டு மேல் மயிலாட இனிய களுண்டு
காரளிபாட இதழி பொன்விஞ்ச வீசு
விராலிமலையுறை பெருமாளே"

என்று அருணகிரியார் பாடுவது இன்புறத்தக்கதாம்

அருணகிரியார் வயலூரில் தங்கியிருந்தபோது

'இயலும் இசைகளும் நடனமும் வகைவகை சத்யப்படிக்கு இனிது அகஸ்தியர்க்கு உணர்த்தியருள் தம்பிரானே' என நிறைவுறும் 'விகடபரிமள' திருப்புகழைச் சாற்றினார்.

அப்போது முருகன் உவந்து அவர் முன் அற்புதக் கோலத்தோடு எழுந்தருளி அவரது இன்னலைத் தீர்த்து, ஞான உபதேசம் செய்து, நம் விராலிமலைக்கு வா என்று அழைத்தருளினார்.

இதனை,

"……விராலி
மாமலையில் நிற்பம் நீ கருதியுற்று
வா என அழைத்து என் மனதாசை
மாசினை அறுத்து ஞானமுது அளித்த
வாரம் இனி நித்தம் மறவேனே"

என்று, 'தாமரை' திருப்புகழில் பாடுவார். இவ்வரலாற்றை நினைவு கூறும் வகையில் 'இதமுறு விரைபுனலில்',

"வயலியில் அடிமைய குடிமை இனல்அற
மயலொடு மலம் அற அரிய பெரிய
திருப்புகழ் விளம்பு என்முன் அற்புதம் எழுந்து
அருள்குக விராலிமலையுறை குரவ நல்இறைவ"

என்றும் அருளிச் செய்கிறார்.

அத்துணை அரும்பெரும் சிறப்பு வாய்ந்த விராலிமலையில் "அருணகிரிநாதர் அருளிய விராலிமலைத் திருப்புகழ்", 'குகஸ்ரீ இரசபதி அடிகளார் மற்றும் திருப்புகழ் அடிமை S. நடராஜன் ஐயா அவர்கள் விரிவுரையுடன் விராலிமலை திருப்படித்திருவிழா 11ஆம்

ஆண்டில், குகஸ்ரீ குருஜி இராகவன் ஐயா அவர்களின் சீடர்களால் திருச்செந்தூர் திருப்புகழ் சித்திரசபை மூலம், முருகபக்தர்கள் அனைவரும் ஓதி பயன்பெற வேண்டுமாய் வெளியிடப்படுவது குறித்து மகிழ்வடைகிறோம்.

"ஆராயும் நீதி வேலும் மயிலும் மெய்ஞ்
ஞான அபிராம தாப வடிவமும்
ஆபாதனேனும் நாளும் நினைவது பெறவேணும்"

என்று அருணகிரியார் நம்பொருட்டு வேண்டுகிறார்.

அன்பர்கள் அனைவரும் திருப்புகழ் ஓதி மனோலயம் பெற்று, பெருமானின் திருவடியை மறவாமல் திருவுருவத் தியானம் செய்து, வேண்டும் நலங்கள் எல்லாம் பெற வேண்டுமாய் எம் ஸத்குரு சீரடி சாயிநாதனின் அருளைச் சிந்தித்து வேண்டிக் கொள்கிறோம்

"ஆறுமுகந் தோன்றும் அழகிய வேல்
தோன்றுமவன்
ஏறுமயில் தோன்று மெழில்தோன்றும் - சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால்"

ஸாயி ஸ்ம்ருதி:

ஸ்ரீலஸ்ரீ மானூர் சுவாமிகள்
திருக்கோயில், பழநி
17.01.2026

17 Jan'2026

அ. வே. சாந்திகுமார சுவாமிகள்

வாழ்த்துரை

|| ஓம் நமோ பகவதே ருத்ராய ||
நமஸ்தே ருத்ர மன்யவ உதோத இஷவே நம:|
நமஸ்தே அஸ்து தன்வனே பாஹுப்யா முததே நம:||

"ஸ்ரீ ருத்ர பகவானே உமக்கு நமஸ்காரம், உமது கோபத்திற்கு நமஸ்காரம், உமது அம்புக்கு நமஸ்காரம், உமது வில்லிற்கு நமஸ்காரம், உமது கரங்களுக்கு நமஸ்காரம்" என்று வேத மந்திரமான ஸ்ரீருத்ரம் வில்லேந்திய வீரனாக இறைவனைப் போற்றுகிறது.

வில்லும் அம்பும் ஏந்திய இறைவனின் திருக்கோலம் அரியநிலையில் த்ரிபுர ஸம்ஹாரம் செய்த வடிவத்தையும், அர்ஜுனனுக்குப் பாசுபதம் அளித்த போது எளிய நிலையில் வேடர் வடிவாக வந்த கிராத மூர்த்தியையும் காட்டுவதாகும். அம்பிகையும் வேட்டுவச்சியாக சபரிதுர்கை எனும் வடிவம் கொண்டாள்.

ஸ்ரீமந்நாராயணனும் தாயாருடனாகி வேட்டுவ வேட்டுவச்சி வடிவம் தாங்கி கானகத்தில் தனியே தவித்த ஸ்ரீராமானுஜருக்கு காஞ்சிபுரத்திற்கு வழிகாட்டி அருளினர்.

இவ்வரிசையில் ஐமுகச்சிவனுக்கோர் கிராதவடிவம் போல் அறுமுகச்சிவனுக்கும் வேட வடிவம் உண்டு. 'புளிந்த மூர்த்தி' என்று அவ்வடிவத்தை சாத்திரங்கள் போற்றும். வேடர்குலக் கொழுந்தாகிய வள்ளியம்மையாரின் கணவன் என்பதை ஸ்ரீஸுப்ரஹ்மண்ய அஷ்டோத்ர சத நாமாவளி 'ஓம் புளிந்த கன்யா பர்த்ரே நம:' என்று குறிப்பது இங்கு சிந்திக்கத் தக்கது.

வயலூரிலிருந்து விராலிமலை வரும் வேளையில், காட்டில் வழியறியாது நின்ற ஸ்ரீ அருணகிரிநாதருக்கு எம்பெருமான் புளிந்த ரூபமாகிய வேட வேடத்தில் காட்சி தந்து அருளினான்.

இவ்வரலாற்றை எங்கள் ஸ்ரீ குருநாதர் பரமபூஜ்யஸ்ரீ சாந்திகுமார ஸ்வாமிகள் விராலிமலைப் பெருமான் சந்நிதானத்தில் திருமுருகஐயப்பன் ஐயா அவர்களிடம் கூறிய போது, ஐயா அவர்கள், 'மகாடவியில் நிற்பதொர் சகாயக்காரனும்' என்று கூறும் 'திருவேளைக்காரன் வகுப்பைச்' சொல்லி மகிழ்ந்தார்

சம்சாரம் என்னும் இப்பெருங்காட்டில் 'ஐம்புல வேடரின் அயர்ந்து வளர்ந்து' திசை தெரியாமல் நிற்கும் உயிர்களாகிய நமக்கு அக்காட்டினுள்ளே பெருமான் வேட வேடம் கொண்டு 'தம்முதல் குருவுமாய்' எழுந்தருள்வான் எனக் காட்டுவதே இந்த லீலை. இத்திருவிளையாடலால் ஸ்ரீ அருணகிரிநாதரை ஆட்கொண்ட செவ்வேட் பரமன் விராலிமலையில் 'தவத்தினில் உணர்த்தி' அஷ்டமாசித்திகளை தந்தருளினான்.

மந்திரம், மந்திரத்திற்குரிய தேவதை, மந்திரத்தை உபதேசித்த குரு ஆகிய இம்மூன்றினுள்ளும் எவ்வித வேறுபாடுமில்லை என்ற அபேத உண்மையை உணர்வதே உன்னத உபாசனையின் உயர்வு. இவ்வுயர்வை ஸ்ரீ அருணகிரிநாதர்

"உருவேறவே ஜெபித்து ஒருகோடி யோம சித்தி
உடனாக ஆகமத்துகந்து பேணி"

என்று மந்திரத்தையும்,

'புராரி சித்தன் மகனே விராலி சித்ர
மலைமேல் உலாவு சித்த'

என்று மந்திரத்திற்குரிய மூர்த்தியையும்

‘வெப்பு வளை கூனையே நிமிர்த்த தம்பிரானே’

என்று அம்மந்திரமூர்த்தியே திருஞானசம்பந்த மூர்த்தியாய் குருவாய் வந்து அருள்செய்ததையும்நினைந்து, ‘சித்திகள் வழங்கிய சித்தனை’ விராலிமலையுறை பெருமானைப் போற்றிப் பாடுகிறார்.

இத்தகு சிறப்பு வாய்ந்த விராலிமலை திருப்புகழ்ப் பாடல்களுடன், விராலிமலை பற்றிய குறிப்புகளுடன் கூடிய வயலூர் திருப்புகழ்ப் பாடல்களையும் சேர்த்து குகஸ்ரீ இரசபதி அடிகள், திருப்புகழ் அடிமை ஸ்ரீ நடராஜன் ஆகிய பெரியோர்களின் சிறப்பான உரையுடன் ‘அருணகிரிநாதர் அருளிய விராலிமலை திருப்புகழ்’ என்ற இந்நூல் திருப்புகழ் அன்பர்களால் வெளிவருகிறது. ‘குகஉரு கண்டு உருகுக’ என மொழியும் இத்திருப்புகழ் பாடல்களால் விராலிமலைப் பெருமானைத் துதிக்கும் பக்தர்களாகிய நமக்கும் திருவருள் பாலிக்க வேண்டுமாய் ஸ்ரீஸத்குரு நாதன் திருவடிகளை பிரார்த்திப்போமாக!

அன்பன்

ஸ்ரீ ராஜசியாமளா நவராத்ரி — **பா. தத்தாத்ரேயன்**

19.01.2026 — (தட்சிண சீரடி பீடம்:

மதுரை - 625107 — தவத்திரு. சாந்திகுமார சுவாமிகளின் சீடன்)

விராலிமலைத் திருப்படி விழா
விராலிமலைத் திருப்புகழ் புத்தகப் பதிப்பு
அணிந்துரை

முருகா சரணம்!

திருப்புகழ் அன்பர்களுக்குப் பழனிப் பித்தனின் பணிவான நமஸ்காரங்கள்!

எல்லாம் வல்ல எம்பெருமான் பழனியாண்டவனின் பெருங்கருணையும், நம் குருநாதர் அருணகிரிப் பெருமானின் திருப்புகழ் என்ற மகா மந்திரத்தில், விராலிமலை வள்ளலின் பெரும்புகழ் பாடும் 16 திருப்புகழ் மணிகளையும் ஒருசேர ஓர் புத்தக வடிவில் கொணர எண்ணிய பெருமக்களின் எண்ணத்தையும் முயற்சியையும் நான் முதலில், அவர்கள் திருப்பாதம் தொட்டு வணங்கி மகிழ்கிறேன். எவ்வளவு அரிய, அழகான முயற்சி?

புதுக்கோட்டை மாவட்டத்தில், திருச்சியிலிருந்து சுமார் 28 கி.மீ தொலைவில் அமைந்துள்ள ஓர் அற்புதத் தலமே விராலிமலை. மயில்களின் சரணாலயமாகவும் உள்ள இத்தலத்தில், மலையின் உச்சியிலும், மலைக்குச் செல்லும் வழியிலும் மயில்கள் ஏராளமாக உள்ளன. சோலைகள், மயில்கள் மற்றும் சுனைகளையும் கொண்ட இந்தக் கவின் கொஞ்சும் மலைத்தலத்தில், பல்வேறு முனிவர்களும், தேவர்களும் மரங்களாக விரவி எம்பெருமான் முருகனை வழிப்பட்டதால், விரவி மலை என்று அழைக்கப்பட்டு, பின்பு அதுவே மருவி, விராலி மலையாயிற்று என்பர் .அகத்தியர், வசிஷ்டர் போன்ற முனிவர்கள் இங்கு தவம் செய்து முக்தி அடைந்ததாகக் கூறப்படுகிற திருத்தலம். இது சுமார் 1500 வருடப் பழைமை வாய்ந்த கோயில்.

இங்கு எம்பெருமான், விராலிமலை வள்ளல், ஆறுமுகங்களுடன் பத்து அடி உயரத்தில் அசுர மயிலில் அமர்ந்தபடி, அற்புதமாகக் காட்சி தருகிறார். காணக் கண் கோடி நிச்சயம் வேண்டும்!

நம் குருநாதர் அருணகிரிப் பெருமானுக்கு எம்பெருமான் அருளிய திருத்தலங்களில் இதுவும் ஒன்று. திருச்சியில் உள்ள வயலூர் தலத்துக்கு வந்த அருணகிரிநாதரிடம்... 'விராலிமலைக்கு வா' என்று முருகப்பெருமான் அழைக்க... அந்த மலையைத் தேடிச் சென்றார் நம் அருணை அண்ணல். விராலி மலைக்கு வழி தெரியாமல் அருணையார் தவிக்க, அப்போது வேடன் ரூபத்தில் வந்து விராலி மலைக்கு வழி சொல்லி அழைத்துச் சென்று முருகப்பெருமான் அடையாளம் காட்டி அருளினார் என்கிறது இத்தலத்துத் தலபுராணம். அதுமட்டுமின்றி, அஷ்டமாசித்தியை அருணகிரிநாதருக்கு இத்தலத்தில் உள்ள முருகப்பெருமான் வழங்கியதால் இத்தலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இன்றளவும் கருதப்படுகிறது. இன்றும் எம்பெருமான் முருகவேள் அன்னையருடன் நம் குருநாதருக்கு காட்சி தந்து, அட்டமா சித்திகளை அருளிய இடத்தை நாம் கண்டு தரிசிக்கலாம்.

"உனது அருள் கை வர உயர் பத்தி வழியும் பரம முத்தி நெறியும் தெரிவது ஒரு நாளே" என்றும் "பராபர மநோலய சமாதி அநுபூதி பெற நினைவாயே" என்றும் "உபதேச குருபர சம்ப்ரதாயமொடு ஏயு நெறியது பெறுவேனோ?" என்றும் "இளமை கிழம் படும் முன் பதம் பெற உணர்வேனோ" என்றும் "பரம ஞானவூர் பூத அருளாயோ?" என்றும் "ஆராயு நீதி வேலு மயிலு மெய்ஞ் ஞானாபிராம தாப வடிவமும் ஆபாதனேனு நாளும் நினைவது பெறவேணும்" என்றும் "துரால்புகழ் பராதின கராவுள பராமுக துரோகரை தராசையுற்றடைவேனோ?" என்றும் "மாபாவி காளி தானேனு நாத மாதா பிதாவும் இனி நீயே" என்றும் "காவல் என விரைய ஓடி உனது அடிமை காண வருவது இனி எந்த நாளோ?" என்றெல்லாம் விராலிமலை வள்ளலிடம் நம் குருநாதர் உருகி, மேலும், "இரு தனங்களின் மேல் துயில் கூரினும் அம்புய தாள் துணை மறவேனே" என்றும் "நீ தோற்றி மு(ன்)னாளும்

அடிமையை ஈடேற்றுதலால் உன் வலிமையை மறவேனே” என்றும் விராலிமலையானிடம் மருவித் தஞ்சம் அடைந்த அனுக்கிரகங்கள் எல்லாம் ஒருசேரக் காணப்பெறும் 16 விராலிமலைத் திருப்புகழ் பாடல்கள் தாங்கி வெளிவரும் இந்நூலை அன்பர்கள் நித்தம் ஓதி என்பெருமானின் பேரருளுக்கும் பெருங்கருணைக்கும் பாத்திரம் ஆக அவன் அருளை வேண்டுகிறேன்.

இந்த அற்புதப் படிவிழா எம்பெருமான் அருளால் இனிதே நடந்தேறவும் எம்பெருமான் திருத்தாளை இறைஞ்சுகின்றேன்.

திருப்புகழ் வல்லவர் சீர்பாத தூளி என் சென்னியதே!

பழனி ஆண்டவர் திருவடிகளே சரணம்!

குருநாதர் அருணகிரிப் பெருமானின் திருவடிகளே சரணம்!

முருகா சரணம்!

அன்பன்,

பழனிப் பித்தன் (முனைவர் செந்தில்கண்ணன் முத்து, ஹாங்காங்)

12.01.2026

திருப்புகழ் தொண்டன் குகஸ்ரீ குருஜி ராகவனின்
சீடர்கள் சமர்ப்பிக்கும்
11-வது ஆண்டு விராலிமலை படிவிழாப் பற்றி....

குருஜி குகஸ்ரீ ராகவன் அவர்கள் 1958-ம் ஆண்டில், தில்லி மாநகரில் அன்பர்களுக்கு திருப்புகழ் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். திருப்புகழ்ப் பாக்களை சந்தங்களுடனும் தாளக்கட்டுடனும் அழகிய ராகங்களில் இசை அமைத்து, விளக்கமாக கற்றுத் தந்தார். அவரிடம் திருப்புகழ் கற்றுக்கொண்ட சீடர்கள் பணி நிமித்தம் பல நகரங்களுக்கும் நாடுகளுக்கும் சென்ற போதும், சென்ற இடங்களில் எல்லாம் திருப்புகழ் கற்றுக் கொடுக்கும் பணியை தொடர்ந்தனர். இன்றும் தொடர்கின்றனர்.

குருஜி அவர்கள் "திருப்புகழ் அன்பர்கள்" என்ற அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி "திருப்புகழ் இசை வழிபாடு" என்ற புத்தகத்தையும் வெளியிட்டார். 503 திருப்புகழ் பாடல்கள், கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, வேல் / மயில் / சேவல் விருத்தங்கள், திருஎழு கூற்றிருக்கை, அபிராமி அந்தாதி, அபிராமி பதிகம் அனைத்தும் அப்புத்தகத்தில் அடக்கம். மேற்கூறிய அனைத்தும் ஒலிநாடாவில் பதிவு செய்து வருங்கால சந்ததியினர் பயனுறும் வகையில் 34 கேசட்டுகளாக வெளியிட்டார்கள். சஷ்டி, கிருத்திகை போன்ற விசேஷ நாட்களில் திருப்புகழ் அன்பர்கள் ஒன்று சேர, கூட்டுபிரார்த்தனையாக செய்து வரும் வழிபாடு இன்றும் குருஜி கற்றுத்தந்த வண்ணமே தொடர்கிறது.

படிவிழா

ஆங்கில வருடத்தின் முதல் நாளில் ஆங்கிலேயத் துரைகளை சென்று, கண்டு, வாழ்த்திய நம் மனிதர்களை கண்டு "நம்துரை இருக்கநமக்குஎதற்குஆங்கிலேயத்துரை" என்ற எண்ணத்தினால் எழுந்தது "திருத்தணிப் படிவிழா" 1917-ம் ஆண்டில் வள்ளிமலை சுவாமிகள் வருடத்தில் கடைசி நாளில், படிக்கு ஒரு திருப்புகழ் பாடிச், சென்று,

திருத்தணிகை ஆண்டவரை வழிபடும் வழக்கத்தினை தொடங்கி வைத்தார். உலக மக்கள் நலமுடன் வாழ, தணிகையின் 365 படிகளிலும், திருப்புகழ் பாடிய வண்ணமே மேலே சென்று, தணிகேசனைப் பிரார்த்திக்கும், "திருப்புகழ் திருப்படிவிழா" தொடங்கிற்று.

இன்றும் தில்லி, மும்பை, புனே, சென்னை, ஹைதராபாத் போன்ற நகரங்களில் வருடத்தில் முதல் மாதத்தில் படிவிழாக்கள் சிறப்பாக நடந்து வருகிறது.

2016 ஆம் ஆண்டு ஜனவரி ஞாயிறு அன்று குருஜியின் பிரதம சீடரான களக்காடு திரு என். எஸ். மணி - திருப்புகழ் மணி அவர்கள் மற்ற சீடர்களோடு இணைந்து அருணகிரிநாதரின் அபிமான க்ஷேத்திரமான விராலிமலையில் படிவிழா சிறப்பாக நடைபெற செய்தார்கள். அத்திருப்பணியின் தொடர்ச்சியே 8.2.2026 அன்று விராலிமலையில் "திருப்படி திருவிழா".

படிவிழா அன்று அதிகாலை 5.30 மணி அளவில் திருப்புகழ் இசைத்தபடி "விராலி கிரிவலம்" வந்து பின்னர் மலை அடிவாரத்தில் சித்த புருஷர் ஸ்ரீ ஆறுமுக சாமி அதிஷ்டானத்தில், அறுபடை வீடு திருப்புகழ், ஸமர்ப்பிப்பர்.

பாதி மலையில் அமைந்த சந்தானக்கோட்டில் இருந்து திருப்புகழ் பாடியபடி மலையேறி, உற்சவர் முன் இசை வழிபாடு நடக்கும். அபிஷேக, ஆராதனைகளும் திருப்புகழும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும். பின் மூலவர் சன்னதியிலும் அபிஷேக, ஆராதனைகள், சண்முக அர்ச்சனை மகா தீபா ஆராதனையுடன் நிறைவு பெறும் இவ்விழாவின் இறுதியில், அனைவருக்கும் பிரசாதம் விநியோகிக்கப்படும்.

7.2.2026 சனி அன்று மதியம் மூன்று மணி அளவில் அடிவார சித்த புருஷர் ஸ்ரீ ஆறுமுக அதிஷ்டானத்தில் விராலிமலை "திருப்புகழ் - விரிவுரையுடன்" என்ற புத்தக வெளியீடும் தொடர்ந்து திருப்புகழ் இசை வழிபாடும்

அருணகிரி குகையில் சுப்ரமணிய மந்திர சம்மேளன த்ரிஸதி அர்ச்சனை செய்யவும், திருவருளும், குருவருளும் கூட்டுவித்துள்ளது.

காவல்துறை அதிகாரி திரு செந்தில் மாறன் அவர்களும் திரு பாஸ்கரன் ஐயா, ஆலய அதிகாரிகள் மற்றும் குருக்கள் அனைவரும் எங்களுக்குப் பலவிதத்திலும் உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு நல்குவதாலேயே விழா மிகச் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது. அவர்கள் தத்தம், குடும்பங்களுடன் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வு வாழ விராலி சித்தன் சண்முகப் பெருமானை வணங்குகிறோம். வருகிற ஆண்டுகளிலும் வெகு விமர்சையாக இங்ஙனே நடக்க வேணுமாய் விராலி வித்தகனிடம் வேண்டி நிற்போம்.

குருஜி ராகவன் அவர்களின் சீடர்கள்

18.1.2026

விராலிமலை

அருணைமுனி, அருணையில் அறுமுகனால் ஆட்கொள்ளப்பட்டு, திருவருளில் திளைத்திருக்குங்கால், "செய்ப்பதிவருக"என்றஆணைகேட்டு, செய்ப்பதி - மீதே தொண்டு பட்டுத்தெண்டனிட்டுக்கண்டு, பற்றத் தண்டை வர்க்க துங்க ரத்தப் பங்கயம் தருவாயே என்ற வேண்டுகோளுக்கிணங்க, செவ்வேட்பரமன் செவிசாய்க்கிறார். வயலிநகருறை சரவணன், கருணை வாரி கூர் ஏக முகமும், வீரமாறாத கழலும், அக்குக்குடக்கொடியும், நீப, வேல் வாகும் காட்டி, வரசத்தி மேலானபரவத்து,"விராலிமலையில் நிற்பம், நீ கருதியுற்று வா, என அழைத்து, ஞானஅமுது ஊட்டி மல மாசுவீட்டி, கனிவாய் மலர்ந்து அருளியவுடன், விராலிமலை வரும் அருணைமுனிக்கு மகாஅடவியில் சகாயக்காரனாய், சந்தானகோட்டில், இஷ்ட காம்யங்களை அளிக்க வல்ல புண்ணியத்தானமான சந்தானகோட்டில்

வழிஅருளின்பேறு காட்டி,ஷண்முகக்ஷடாட்ஷரனாய் என்றும் நிலையாக நிற்கின்றார்.பதினாறு திருப்புகழ்பாக்களை தனதாக்கிக் கொண்ட விராலி வித்தகனின் ஆறுமுகமலரையும் ,ஈராறுதோள்களையும்,இருதாள் களையும், இருபுறமும் உறை தேவியரையும்,அயில்வேலுடன், அழகுமயிலையும்; ஆண்மையும்,ஞானமும் உடைய அபிராமனை திருவோலக்க வர்ணனையினால் மேலும் அழகுற விவரிக்கிறார் குருநாதர். வயலிநகரையும்,விராலிமலையும் இணைத்தே [911,908] இரு திருப்புகழ்பாடியவர் ,பெரிய திருப்புகழ் பாடு என்ற ஆணையால்74 சீர் கொண்ட, "விகட பரிமளம் " போலவே விராலியிலும்,"இதமுறு"(74சீர்)பெரிய திருப்புகழில் விராலி சித்தனை பாடி உள்ளார் .நாமும் மநோலய சமாதி அனுபூதி பெற, திருவருளைப் பெற அவர் திருத்தாள் பணிவோம்.

திருப்படித் திருவிழாவின் போது நாம் மனமகிழ்ந்து இத்திருப்புகழ் பதினாறையும் ஓதி பயன் பெறுவோம்.

செந்திலாண்டவன் அடிமை.
18.01.2026

பொருளடக்கம்

சீரான கோல கால 1

பாதாள மாதி லோக 15

இலாபமில் 20

நிராமய புராத 24

இதமுறு விரைபுனல்.....35

உ ருவேற வேஜெ பித்து 50

எதிரெதிர் 55

ஐந்து பூதமு 60

கரதல முங்குறி 70

கரிபுராரி காமாரி 75

காமாத்திர மாகி.....80

கொடாதவனை 85

மாயா சொரூப.....95

மாலாசை கோப 100

தாமரையின் மட்டு 104

குருதி கிருமிகள்.....108

சீரான கோல கால

சீரான கோல கால நவமணி
மாலாபி ஷேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவை செயுமுக .... மலராறும்

சீராடு வீர மாது மருவிய
ஈராறு தோளு நீளும் வரியளி
சீராக மோது நீப பரிமள இருதாளும்

ஆராத காதல் வேடர் மடமகள்
ஜீமூத மூர்வ லாரி மடமகள்
ஆதார பூத மாக வலமிட முறைவாழ்வும்

ஆராயு நீதி வேலு மயிலுமெய்ஞ்
ஞானாபி ராம தாப வடிவமும்
ஆபாத னேனு நாளு நினைவது .... பெறவேணும்

ஏராரு மாட கூட மதுரையில்
மீதேறி மாறி யாடு மிறையவர்
ஏழேழு பேர்கள் கூற வருபொரு ளதிகாரம்

ஈடாய வூமர் போல வணிகரி
லூடாடி யால வாயில் விதிசெய்த
லீலாவி சார தீர வரதர..... குருநாதா

கூராழி யால்முன் வீய நினைபவ
னீடேறு மாறு பாநு மறைவுசெய்
கோபால ராய னேய முளதிரு ..... மருகோனே

கோடாம லார வார அலையெறி
காவேரி யாறு பாயும் வயலியில்
கோனாடு சூழ்வி ராலி மலையுறை ..... பெருமாளே.

சொற்பிரிவு

சீரான கோல கால நவ மணி
மால் அபிஷேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவை செயும் முக மலர் ஆறும்

சீராடு வீர மாது மருவிய
ஈராறு தோளும் நீளும் வரி அளி
சீராகம் ஓதும் நீபபரிமள இரு தாளும்

ஆராத காதல் வேடர் மடமகள்
ஜீமூதம் ஊர் வலாரி மடமகள்
ஆதார பூதமாக வலமிடம் உறைவாழ்வும்

ஆராயும் நீதி வேலு, மயிலும்
மெய்ஞ் ஞான அபிராம தாப வடிவமும்
ஆபாதனேனும் நாளும் நினைவது பெறவேணும்

ஏராரு மாட கூட மதுரையில்
மீது ஏறி மாறி யாடு மிறையவர்
ஏழ் ஏழு பேர்கள் கூற வரு பொருள் அதிகாரம்

ஈடாய ஊமர் போல வணிகரில்
ஊடாடி ஆல வாயில் விதி செய்த
லீலா விசார தீர வரதர குருநாதா

கூராழியால் முன் வீய நினைபவன்
ஈடேறுமாறு பாநு மறைவு செய்
கோபாலராயன் நேயம் உள திரு மருகோனே

கோடாமல் ஆரவார அலை எறி
காவேரி ஆறு பாயும் வயலியில்
கோனாடு சூழ் விராலி மலை உறை பெருமாளே

பதவுரை

சீரான கோல கால நவமணி = சிறப்பானதும் நிறை ஒளி நிரம்பியதுமான ஒன்பது ரத்னங்களை வரிசையாக ஊன்றி வைத்துள்ள,

மாலாபிஷேக பார = சுய மகிமை உடைய முடியைச் சூடியதும் (அபிஷேகம் = தலை, பாரம் = முடி)

வெகுவித தேவாதி தேவர் சேவை செயும் முக மலர் ஆறும் = அளவில்லாத வானவர்கள் அவர்களது முதல்வர்களான அதிபர்கள், முதலினோர் சேவிப்பதுமான ஆறு திரு முக மலர்களையும்

சீராடு வீர மாது மருவிய ஈராறு தோளும் = விளங்கும் சிறப்புடைய வீர லக்ஷிமி தழுவிய பன்னிரு திருத் தோள்களையும்,

நீளும் வரியளி சீராக மோது நீப பரிமள இருதாளும் = உடலில் நீண்ட ரேகைகளை உடைய வண்டுகள் ஸ்ரீராகம் பாடும் கடப்ப மலரின் மணம் கமழும் இரு திருவடிகளையும்,

ஆராத காதல் வேடர் மடமகள் = அடங்காத காதலை உடைய மறவர் இன மகளான வள்ளியார்,

ஜீமூதம் ஊர் வலாரி மடமகள் = முகில்களை வாகனமாகக் கொண்டவனும், வலன் எனும் அவுணனை அழித்தவனுமான இந்திரனின் இளம் குமரியான தேவயானையார் (எனும் இரு தேவிமார்களை),

ஆதார பூத மாக வலம் இடம் உறை வாழ்வும் = உலகை உய்விக்கும் ஆதார சக்திகளாக வலத்திலும் இடத்திலும் வைத்திருக்கும் வாழ்வையும்,

ஆராயு நீதி வேலும் மயிலும் = நியதியை ஆய்கின்ற ஞான சக்தியாகிய வேலாயுதத்தையும், மாபெரும் விந்து ரூப மயிலையும்

மெய்ஞ் ஞான அபிராம தாப வடிவமும் = சத்து சித்துமான ஆர்வத்தைப் பெருக்கும் அழகு மயமான திரு மேனியையும் (தாபம் = அளவற்ற வேட்கை),

ஆபாத னேனு நாளு நினைவது பெறவேணும் = அளவற்ற தீவினையேனாகிய அடியேனும் எந்நாளும் தியானிக்கும் படியான பரம அருளைப் பாலிக்க வேணும்,

ஏராரு மாட கூட மதுரையில் மீது ஏறி = பொலிவு மிக்க நான்மாடக் கூடல் எனும் பயனான மதுரைப்பதியின் மேல் (எடுப்பான வெள்ளியம்பலத்தில் ஏறி),

மாறி ஆடும் இறையவர் = கால் மாறி ஆடிய எங்குமான இறைவன் அருளியதும்,

ஏழு ஏழு பேர்கள் கூற வரு பொருள் அதிகாரம் = 49 புலவர்கள் உரை கூற விரிவான பல நுட்பங்கள் வெளியான இறைவனார் அகப் பொருள் எனும் நூலின் (அதிகாரம் = அதிகரித்தலை உடையது)

ஈடாய ஊமர் போல வணிகரில் ஊடாடி = மூலத்திற்கு பொருத்தமான உரையை ஆய்ந்து அறிவிக்க ருத்ர ஜென்ம செட்டியாராய் நல மிகு புலவர்கள் நடுவிலிருந்து கம்பீர மெய்ப்பாடு காட்டி,

ஆல வாயில் விதி செய்த லீலா = திரு ஆலவாய் திருக் கோவிலில் (நக்கீரர் உரையே பொருளான உரை என்று தீர்ப்பு அளித்து புனிதத் திருவிளையாடல் புரிந்தவரே,

விசார தீர, வரதர, குருநாதா = விஷேச சாரம் புரியும் தீரனே, வரம் வழங்கும் வன்மையனே, குரு முதல்வராக குலவுபவனே,

முன் கூராழியால் பாநு மறைவு செய் = முன்பு சக்ராயுதத்தால் மா பெரும் பருதியை ஈய நினைபவன் ஈடேறு மாறு தன்னிடம் பக்தி செலுத்திய அர்ச்சுனன் உய்யுமாறு செய்த

கோபாலராயன் நேயம் உள திரு மருகோனே = இடையர் தலைவனான கண்ணன் அன்பு கொண்ட திருமகளின் மருகனே,

கோடாமல் ஆர வார அலை எறி = என்றும் ஓயாமல் ஆரவாரித்து அலைகள் மோதுகின்ற,

காவேரி ஆறு பாயும் வயலியில் = காவேரி நதி பாய்ந்து வளம் செழிக்கும் வயலூரிலும்,

கோனாடு சூழ் விராலி மலை உறை பெருமாளே = கோனாட்டை முற்றுகை இட்டது போல் சூழ்ந்த விராலி மலையிலும் தங்கி அரிய பெருமையை ஆள்பவனே

குகஸ்ரீ ரசபதி அவர்களின் விளக்க உரை

கடம்ப மரங்களே நிறைந்தது ஒரு காடு. அதன் கிழக்கில் இருந்தது மணவூர். அரசர் குலசேகரர் அப்பதியை ஆண்டவர். மன்னர் நண்பர் தனஞ்சயச் செட்டியார். காலை மணி எட்டு வேர்த்து விறுவிறுத்து செட்டியார் வேந்தர் முன் ஓடி வந்தார். அரசர் பெரும, வர்த்தகக்காரணமாக வெளி ஊருக்குச் சென்றேன். மீண்டேன். வழியிடைப்பட்டது ஒரு கடம்ப வனம். சூரியன் அஸ்தமித்தான். எங்கும் இருள் சூழ்ந்தது. மருண்டது மனம். இரவு மணி எட்டு. கண்ணிற்கு எட்டிய தூரத்தில் பளபளத்தது ஒரு ஒளி. அங்கு விரைந்தேன். என்ன அதிசயம். எட்டு
யானைகள், அவைகளின் மேல் ஒரு விமானம். அதனில் லிங்க உருவில் இறைவன்.

தூய மேனியர் பலர் தொடர்ந்து வந்தனர்.வரத சிவத்தை நான்கு யாமத்திலும் வழிபட்டனர். இரவு முழுவதும் அந்த ஈடுபாட்டில் இருந்தேன். என்ன அற்புதம், கண்ணிமைக்கும் நேரத்தில் இருந்தவர் மறைந்தனர். ஆஹா, அவர்கள் அமரர்கள் என்று அதன் பின் அறிந்தேன். அதைத் தங்கட்கு அறிவிக்க நினைத்தேன். நேரே இங்கு வந்தேன், என்று இன்பக் கண்ணீரை செட்டியார் இறைத்தார். செய்தி கேட்ட மன்னரின் மெய் சிலிர்த்தது. அன்று முழுவதும் அரசருக்கு அதே நினைவு. காட்டில் இருக்கும் பெருமானைக் கருதியபடியே கண்

உறங்கினார். இரவு மணி 1, எல்லாம் வல்ல சித்தர் எதிர் நின்றார். "எண்ணுவது போதாது, செயலில் இறங்கு, ஒரு நகரை அங்கே உருவாக்கு, வசிப்பவர் வாழ்வடைய பாண்டியா, மகத்தான ஒரு ஆலயம் அமைக்க மறவாதே" என்றார். வேந்தர் திடுக்கிட்டு விழித்தார். வியர்த்தது மேனி. அமல பரமா, விமல, முதலே, என்று கூவிய கரம் கொண்டு கும்பிட்டார்.

எழுந்தார், பரிஜனங்களுடன் விரைந்தார், கடம்ப வன கண்ணுதலைக் கண்டார். அடியற்ற மரம் போல் அடியில் விழுந்தார். ஏத்தி போற்றி இறைஞ்சினார். ஏவலரை ஏவினார். காட்டை அழித்தார். எப்படி நகரை அமைப்பது ? இந்த ஏக்கம் மனதில் எழுந்தது. என்ன அதிசயம். கனவில் வந்த சித்தர் நனவில் எதிரில் வந்து நின்றார்.

ஆலயம், கொடிமரம், மண்டபம், வீதிகள், சாலைகள், முதலியவற்றை இன்ன இன்ன இடத்தில் இவைகளில் உள்ளபடி அமைத்து வழிபாட்டு முறைகளை வகுத்து வை என்று ஆகம மந்திர சிற்ப நுட்பங்களை அளித்தார். திடீரென்று மறைந்தார். அரசரும் பிறரும் அதிசயித்து வணங்கினர்.நம்பர் அருளை நம்பி ஆலயத்தை முதலில் அமைத்தார். வருண முறைப்படி வீதிகளை வகுத்தார். ஏரிகள், குளங்கள், கிணறுகளை எழுப்பினார்.

விமலர் திருச்சடை மின்னியது. சடையிலிருந்து புது மதி பொங்கியது.திவலைகள் பரவி எங்கும் படர்ந்தன. சின்மயத் திருவடி சேர்ந்தவர் சிவமாவது போல மதுர அமுதம் விரவிய அப்பதி மதுரை எனும் பெயர் எய்தியது.

அருளாளர்கள் பலர் மதுரையில் அவதரித்தனர். எங்கும் இறை வழிபாடு எழுந்தது. அதனால் வளம் பல எங்கும் வளர்ந்தன. போக தாக மருளான பொன்னுலக

வாழ்வை நிந்தித்தல், சிவனார் அருளை சிந்தித்தல். இதுவே அப்பதி வாழ் மக்கள் நிலை. இந்திரன் இதனை அறிந்தான். இறுமாந்து எழுந்தான். மதுரையை அழித்து விடுங்கள் என்று எடுப்பான மேகங்களை ஏவினான். அல்லோல கல்லோலமாக இடியும் மின்னலும் எழுந்தன. பெய்த பெருமழையைக் கண்டு அஞ்சி மக்கள் அலறினர்.

இறைவன் முடி மேல் இருக்கும் கங்கையில் ஏராளமான மேகங்கள். அவைகளுள் நான்கு மேகங்களை நம்பர் ஏவினார். விண்ணில் அவைகள் விரைந்தன. நான்கு மாடக் கூடங்கள் போல் விளங்கின. பட படத்த மழை நீரைப்பருகின. அது கண்ட அமரர் தலைவன் அஞ்சினான். ஓடி விண்ணில் ஒளிந்தான். நீடித்த மழையும் நின்றது. சிவ முகில்கள் சிவனார் திருமுடியில் சேர்ந்தன. அச்சம் அகன்ற அனைவரும் ஆண்டவனை ஆராதித்தனர். அன்று முதல் அப்பதி நான்மாடக் கூடல் என அரியதொரு நாமத்தை அடைந்தது.

பாவலர் ஒருவர் பாண்டிய நாட்டிற்கு வந்தார். பாண்டியன் ராஜசேகரனைப் பார்த்தார்.எங்கள் நாடு சோழநாடு என்றார். அப்படியா? சோழ மன்னர் சுகமா? என்றார் பாண்டியர். எக்குறையும் அவர்க்கு இல்லை. அவர் 64 கலைகளையும் அறிந்தவர். 63 கலைகளை நீர் அறிந்தவர். பரதக்கலையில் உமக்கு பழக்கம் இல்லை. எனவே எங்கள் அரசர் உம்மைவிட ஏற்றம் பெற்றவர். என்றார். சீச்சீ, என்ன மோசமான பேச்சு! மன்னர் ராஜசேகரர் அது கேட்டு வருந்தினார். உள்ளதை தைரியமாக உரைத்தார் என்று ஓரளவு மனம் அமைதி கொண்டது. அவரை வழி அனுப்பினார். பரதக் கலையை முதிர்ந்த வயதில் முயன்று பயின்றார். தெளிவு மிகுந்து அதில் தேறினார். ஸ்ரீமீனாட்சி திருமணத்தில் புலிக்கால் முனிவரும் பாம்புக்காலரும் விரும்பி அன்னாருக்கு

விண்ணப்பித்தபடி வெள்ளியம்பலம் மதுரையில் விளங்கியது. அங்குள்ள ஆனந்தக் கூத்தரை அன்பு வெள்ளம் கரை புரள பாண்டியன் சிந்தை மகிழ்ந்து நாளும் சேவிப்பர்.

மற்றவர் கண்ணுக்கு அது சிலா ரூபம். பாண்டியர் பக்திக்கு அது தெய்வமேயான திருவுருவம். ஒருநாள் வழிபாட்டில் மன்னர் ஊன்றி இறை திருவுருவை உணர்ந்தார். மானின் துள்ளலும் மயிலின் சாயலும் வெளிப்பட அங்கமெல்லாம் பல நுட்பம் காட்டி, ஆட பாதம் இரண்டும் ஊன்றி, (பரதம் பயின்ற நமக்கு எவ்வளவு சிரமமாய் இருந்தது). அனாதி காலம் தொட்டு எம்பெருமான் ஆடுகின்றாரே என்று எண்ணும் போது அவர் இதயம் பதைபதைத்தது.

ஒரு கால் தூக்கினீர். ஓயாது ஆடுகிறீர். நோகாதா, தாள் நோகாதா ?. ஆட்டம் நின்றால் அகில சராசரமும் அழிந்துவிடும். அதனை அடியேன் அறிவேன். ஊன்றிய திருவடியை உயர்த்தும். உயர்த்திய திருவடியை ஊன்றி ஆடும் உமாபதே! என்று கலகல என கண்ணீர் பெருக்கி கதறினார். அதை அறிந்த வெள்ளி அம்பலவர் காவலர் விரும்பியபடி கால் மாறி ஆடும் கற்பகம் ஆயினர். அதுகண்டு பூமாரி சொரிந்தது பொன்னுலகம்.

ஏராரு மாட கூட மதுரையில்
மீதேறி மாறி ஆடு இறைவர்

என்று புளகிதம் எய்தி அன்பர்கள் போற்றி புகழ்ந்தனர்.
தனிப்பொருள் தந்தார்

சண்பகப் பாண்டியர் ஒருநாள் சங்கப் புலவர்களை சந்தித்தார். பொருள் அல்லாதவற்றைப் பொருள் என்று உரைப்பது மருள். வீணான அம்மருள் விலக இன்பப்பொருள் இலக்கணத்தை இயற்றுங்கள் என்று வேண்டினார்.

அரசே, மண், பெண், பொன்னைத்தான் பொருள் என்று மதித்துளது நம் மனம். அது மருள் தான். மெய்ப்பொருளை மெய்ப்பொருள் தான் அறிவிக்க வேண்டும் என்று பாவலர்கள் பதில் கூறினர். வேந்தர் சிறந்த புலவர்களுடன் சென்றார். முதல்வர் திருமுன் முறையிட்டார். சுந்தரேசர் வாழ்விக்கும் சுவடி ஒன்றை பலிபீடத்தில் வைத்தார். காவலர் முதலானோர் கண்டனர். மகிழ்ந்தனர். எடுத்தனர், படித்தனர். அந்தணர் வகுத்த எண்வகை மணத்துள் இது களவு மணம். சொற்பிரபஞ்ச பொருள், பிரபஞ்ச சூழ்நிலை கடந்து ஆணவாதி அகன்று அரிசாதி வர்க்கம் தாண்டி அந்தரங்க சந்திப்பு பலதாம் நடத்தி அருள் நிழல் எய்தி, சாந்தி மகோட்சவ சால்பு காணல் எனும் நுட்பங்களை கந்தர்வம் எனும் பெயரால் ஒரு கதை போல் போகிறது புனித அதன் போக்கு. (60 சூத்திரங்களைக் கொண்ட, “சிவ ஜீவ சம்மந்தம்”).

அகப் பொருளான அப்பாற்கடலை கவிஞர் தம் மதி கொண்டு கடைந்தனர். எவரும் தத்தம் உரையே ஏற்றம் என்றனர். மூலமுதலே, அருளாளா, நீர் தந்த மூலத்திற்கு உரிய உரை எந்த உரை ??? அருளுக ஐயா, என்று அரசர் அழுது வேண்டினர்.

அன்பனே, வணிகர் வீதியில் உப்பூரி குடிகிளார் மைந்தர் ஒரு ஊமை. பெயர் ருத்திர ஜென்மன். 10 வயது பாலன். முருகனின் அம்சமானவன். பல உரைகளை அவன் முன் படித்தால் அவனே தீர்ப்பளிப்பான் என்று ஆலயத்தில் பிறந்தது அசிரீரி.

ஒரு காலத்தில் பிரளயத்தால் அழிந்தது உலகம். உலகம் மீண்டும் உருவான போது மதுரைக்கு உரிய நாற்பங்கு எல்லையை நம்பர் திருமுடிப் பாம்பு ஒன்று வாயுள் வாலை கவ்வி வட்டமிட்டு காட்டியது

வம்ச சேகரப் பாண்டியர் அங்கு தலைநகர் அமைக்க அன்று முதல் மதுரை ஆலவாய் எனும் பெயரை எய்தியது. அந்த ஆலவாய் எனும் கோவிலுக்கு ஊமைப்பிள்ளையை அழைத்து வந்தனர். ஆறு கலச பீடத்தில் அமர்த்தி அர்ச்சித்தனர். ஒவ்வொருவராக தத்தம் உரையை ஒப்பித்தல் ஆயினர்.

சிலர் உரையைக் கேட்டு சிரித்தது ஊமை. சிலர் உரைக்குத் திருமேனியைச் சொரிந்து கொண்டது. பலரது விதண்ட உரைகளை வெறுத்தது. கபிலர் பரணர் உரைகளில் களிப்பை சில இடங்களில் காட்டியது. மதுரைக் கணக்காயர் மகனார் நக்கீரர். அவர் உரையில் உள்ள சொற்களை, பொருட்சுவைகளை முழுதும் உணர்ந்து அனுபவித்தது. கரகம்பம், சிரகம்பங்களை பல இடங்களிலும் காட்டியது. பொருளின் மதிப்பை உறைத்துக் காட்டிய மாற்றுறைக்கல்லாகருத்திர ஜன்மரை உலகம் இன்றும் உணர்கிறது.. இறையனார் அகப் பொருள் என்பது அந்நூலின்பெயர்.

ஏழு பேர்கள் கூற வருபொருளதிகாரம்
ஈடாய ஊமர் போல வணிகரில்
ஊடாடி ஆலவாயில் விதி செய்த லீலா

என்ற உணர்ந்து, இவ்வரலாறை ஓதும் போதே கல்லான மனமும் கரைகிறதே!

விதியை விதித்தாய். ஓம் பொருட்டு மெய்யுரை செய்தாய். தீர்த்த உரை இது என்று தீர்ப்பளித்தாய். விசார தீர வரதர குருநாதா என்று உணர்வு உன்னை நோக்கி விரைகிறதே.

ஆழியை ஏவி பருதியை மறைத்து விஜயனைக் காத்த பரந்தாமர் மருகர் நீர். திருமகள் விலாசம் திகழ்பவர் நீர். உணர்ந்தோம். கோபாலராயரது திருமருகோனே என்று கூவி உம்மைக் கும்பிடுவோம்.

வற்றாத ஜீவ நதி காவேரி. முப்போகமும் தருவேன், கனிவோடு மக்களைக் காப்பேன் எனும் குறிப்பு வெளிப்பட ஆரவாரித்து அலைவீசுகின்ற அந்த ஆறு வாவிப் பாய்ந்து வளம் பெறுகின்ற ஊர் வயலூர். மருத நிலமான இன்ப அத் திருப்பதியில் இருக்கின்றீர். கொங்கு நாட்டில் உள்ளது கோனாடு. அந்நாட்டின் நடுவில் விண்ணளாவி உளது விராலி மலை. அக்குறிஞ்சியையும் மருதத்தையும் இடமாகக் கொண்டு பரமம் எனும் பெரிய பொருளான நீர் தடத்த திருவுருவில் பெரியோன் என்பது, பெரிது இன்ப வடிவமாக எழுந்தருளி இருக்கின்றீர்.

அகில அண்டங்களுக்கு அதிபர் நீர். அதை உமது மணிமகுடங்களே அறிவிக்கின்றன. அவைகளை எவரும் தாங்க முடியாதே. அது அத்தனை பாரம். அத்தனை மகிமை. அதனை அறிகிறேன். அத்திருமுடிகளைச் சுமந்த உமது திருமுக மலர்கள். ஆஹா என்ன அற்புதம்.

வீரமகளின் விலாசமாய் பயனளிக்கும் உமது திருத்தோள்கள் பன்னிரண்டு. வண்டுகள் மொய்க்காத மலர்கள் செண்பகம் என்பர். அத்தெய்வீக மலர்கள் அர்ச்சனை முறையில் அருளார் திருவடிகளில் அமர்ந்து அழகு செய்கின்றன. வேத தேவதைகள் வண்டுகளாய் ஸ்ரீராகம் பாடி உமது இரு திருக்கால்களையும் இறைஞ்சியபடியே இருக்குமே.

இறையனார் அகப் பொருளில் களவு, கற்பு எனும் இரு இயல்புகள் இருக்கின்றன. களவியல் விளைவிற்கு உதாரணமாக இருமையில் ஒருமை உண்டாக்கும்

அடங்காத தமது வேட்கையை வலத்திலிருந்து காட்டுகிறார் வள்ளியார். கற்பியல் தாகத்தை இடத்திலிருந்து தேவயானையார் எண்ண வைக்கிறார். அகில உலகையும் தாங்கும் அந்த ஆதார சக்திகள் இருவரும் உமக்கு இருபுறத்தும் தழுவி உளர். அத்துடனே வளமார்ந்த அத்வைத வாழ்வு.

இறையும் உயிரும் இணையும் இயலை நினைப்பூட்டுகிறது அந்த நிலை. இறையனார் அகப்பொருள் சுருதி அனுபவம். வள்ளி தேவயானை சமேத வாழ்வு ப்ரத்யட்ச பிரமாணம்.ஊன்றி இதை உணராமல் பெற்றோர் மற்றோர் உடன்பாடின்றி கண்ட இடத்தில் காமித்து சுதந்திரபுத்தியில் சுகிப்பது தமிழர் மதம். இதற்கு எடுத்துக் காட்டு இறையனார் அகப் பொருள் என்று எவரேனும் எண்ணுவாரேல் திருவார் குமாரா, நீர் தான் அவரைத் திருத்த வேண்டும்.

விதி விலக்குகளை அறிவிக்கும் புத்தகம் வேதம். அந்த நியதிகளை எவ்வளவு பின்பற்றுகிறது ஆன்மா. பாழும் ஆணவம் தான் அறிவை எப்படி எப்படி பாதிக்கிறது. அந்த இருள் அகல எவ்வெவ்வகையில் முன் வந்து உயிர் முயலுகிறது என்று, பேசா உருவில் வேலும் பேசும் உருவில் மயிலும் சிறக்க ஆய்வு செய்யும்மே.

விந்து தத்துவ மயிலில் விளங்கி எடுப்பான ஞான வேலை ஏந்தி சத்தும் சித்துமான அழகிய உமது திருவுருவம் தாடம் தந்து ஆன்மாக்களை தழுவிக் கொள்ளுமே.

அபராதியான அடியேன் வாழ்க்கையில் விரயம் ஆகாதபடி மகுடம் அணி ஆறுமாமுகம், பன்னிருதிருத்தோள்கள், இருசூடிகள், இருதேவியருடன் மயிலில் ஏறி வேல் ஏந்திய மெய் ஞான வேட்கை மேவ வைக்கும் உமது கேசாதி பாதங்களை என்றும் அடியேன்

எண்ண அருள். பொன்னோ, பொருளோ, விண்ணோ பிறவோ வேண்டா. பெரும, இந்தத்தியானம் ஒன்றே போதும் என்று வினயம் மிகுந்து விண்ணப்பித்தபடி.

பாதாள மாதி லோக

பாதாள மாதி லோக நிகிலமு
மாதார மான மேரு வெனவளர்
பாடீர பார மான முலையினை .... விலைகூறிப்

பாலோடு பாகு தேனெ னினியசொ
லாலேய நேக மோக மிடுபவர்
பாதாதி கேச மாக வகைவகை .... கவிபாடும்

வேதாள ஞான கீனன் விதரண
நாதானி லாத பாவி யநிஜவன்
வீணாள்ப டாத போத தவமிலி .... பசுபாச

வ்யாபார மூடன் யானு முனதிரு
சீர்பாத தூளி யாகி நரகிடை
வீழாம லேசு வாமி திருவருள் .... புரிவாயே

தூதாள ரோடு காலன் வெருவிட
வேதாமு ராரி யோட அடுபடை
சோராவ லாரி சேனை பொடிபட .... மறைவேள்விச்

சோமாசி மார்சி வாய நமவென
மாமாய வீர கோர முடனிகல்
சூர்மாள வேலை யேவும் வயலியி .... லிளையோனே

கூதாள நீப நாக மலர்மிசை
சாதாரி தேசி நாம க்ரியைமுதல்
கோலால நாத கீத மதுகர .... மடர்சோலை

கூராரல் தேரு நாரை மருவிய
கானாறு பாயு மேரி வயல்பயில்
கோனாடு சூழ்வி ராலி மலையுறை .... பெருமாளே.

சொற்பிரிவு

பாதாளம் ஆதி லோக நிகிலமும்
ஆதாரமான மேரு என வளர்
பாடீர பாரமான முலையினை விலை கூறிப்

பாலோடு பாகு தேனின் இனிய
சொலாலே அநேக மோகம் இடுபவர்
பாதாதி கேசமாக வகை வகை கவிபாடும்

வேதாள ஞான கீனன்
விதரண நா தான் இலாத பாவி அநிஜவன்
வீணாள் படாத போத தவமிலி பசுபாச

வ்யாபார மூடன் யானும் உனது இரு
சீர்பாத தூளியாகி நரகிடை
வீழாமலே சுவாமி திருவருள் புரிவாயே

தூதாளரோடு காலன் வெருவிட
வேதா முராரி ஓட அடுபடை
சோரா வலாரி சேனை பொடிபட மறைவேள்விச்

சோமாசிமார் சிவாய நம என
மாமாய வீர கோரமுடன் இகல்
சூர்மாள வேலை ஏவும் வயலியில் இளையோனே

கூதாள நீப நாக மலர்மிசை
சாதாரி தேசி நாமக்ரியை முதல்
கோலால நாத கீத மதுகரம் அடர்சோலை

கூர் ஆரல் தேரு நாரை மருவிய
கானாறு பாயும் ஏரி வயல் பயில்
கோனாடு சூழ் விராலி மலை உறை
பெருமாளே.

பதவுரை

பாதாள ஆதி லோக நிகிலமும் = பாதாளம் முதலிய உலகங்கள் யாவற்றிற்கும்,

ஆதாரமான மேரு என வளர் = ஆதாரமான மேரு மலை போல வளர்ந்துள்ள,

பாடீர பாரமான முலையினை விலை கூறி = சந்தனம் பூசியுள்ள பருத்த கொங்கைகளை
விலைக்கு விற்று,

பாலோடு பாகு தேனென = பால், சக்கரைப் பாகு, தேன் போல,

இனிய சொலாலே அநேக மோகம் இடுபவர் = இனிய பேச்சுக்களால் மிகுதியாக காமத்தை ஊட்டுபவர் (ஆகிய வேசியரின்),

பாதாதி கேசமாக வகை வகை கவி பாடும் = பாதம் முதல் கூந்தல் வரை உள்ள உறுப்புகளை வித விதமாக வர்ணித்து பாடல் இயற்றும்,

வேதாள, ஞான கீனன் = பேய் போன்றவன், ஞானமற்றவன்,

விதரண நா தான் இலாத பாவி = பகுத்தறிவு கூடிய பேச்சுக்களற்ற பாவி,

அநிஜவன் = பொய்யன்,

வீணாள் படாத போத தவமிலி = வாழ் நாள் வீண் போகாமலிருக்க ஞானத்தவம் செய்யாதவன்,

பசுபாச வ்யாபார மூடன் = தன் உயிரைப் பற்றியும் உலக விஷயங்கள் சம்பந்தமாக வினைகள்
புரிந்து வியாபாரம் செய்யும் அறிவிலி,

யானும் உனது இரு சீர்பாத துளி ஆகி = இப்படிப்பட்டஅடியேனும் உனது இரு சிறந்த திருவடிகளின் துகளாகி நிற்கும் பாக்கியம் அடைந்து,

நரகிடைவிழாமலே சுவாமி திருவருள் புரிவாயே = நரகிற்கு போகாமல், என்னை உடையவனே,
திரு அருள் செய்ய வேண்டும்

தூதாளரோடு காலன் வெருவிட = தன்னுடைய தூதர்களுடன் எமராஜன் பயப்படவும்,

வேதா முராரி ஓட = பிரமனும் திருமாலும் அஞ்சி ஓடவும்,

அடுபடை சோரா வலாரி சேனை பொடிபட = நன்றாக போர் புரிய வல்ல தேவ சேனைகள் அயர்ந்து போக, இந்திரனதுமெய்க்காப்பாளரான படை அழியவும்,

மறைவேள்விச் சோமாசிமார் சிவாய நம என = வேத முறைப்படி வேள்விகளும் சோம யாகம் செய்யும் மறையோர்கள் பஞ்சாட்சரத்தை ஜெபித்து துதிக்கவும்,

மாமாய வீர கோரமுடன் = மாயப் போர் செய்யும் வீரமும் கொடூரமும் சேர்ந்து,

இகல் சூர்மாள, வேலை ஏவும் வயலியில் இளையோனே = சமர் புரியும் சூரபத்மன் அழிய,வேலாயுதத்தைச் செலுத்திய இளையோனே, வயலூர்க் குமாரனே,

கூதாள நீப நாக மலர் மிசை = கூதாள மலர், கடப்ப மலர், சுர புன்னை மலர் இவைகள் மேல் அமர்ந்து

சாதாரி தேசி நாமக்ரியை முதல் = பண்களாகிய சாதாரி, தேசி, நாதநாமக்ரியை முதலான,

கோலால நாத கீத மதுகரம் அடர்சோலை = கம்பீரமாக ஒலி இசைகள் பாடும் வண்டுகள் நிறைந்த பொழில்களும்,

கூர் ஆரல் தேரு நாரை மருவிய = வெகுவாக ஆரால் மீன்களை ஆய்ந்து தேடும் நாரை முதலிய தண்ணீர் பறவைகள் நிறைந்த,

கானாறு பாயும் ஏரி வயல் பயில் = காட்டாறு பாய்கின்ற ஏரிகளும் வயல்களும் நெருங்கி உள்ள

கோனாடு சூழ் விராலி மலை உறை பெருமாளே = கோனாடு கோட்டத்தில் உள்ள விராலிமலையில் விளங்கும் பெருமாளே.

இலாபமில்

இலாபமில் பொலாவுரை சொலாமன தபோதன
ரியாவரு மிராவுபக .... லடியேனை

இராகமும் விநோதமு முலோபமு டன்மோகமு
மிலானிவ னுமாபுருஷ .... னெனஏய

சலாபவ மலாகர சசீதர விதாரண
சதாசிவ மயேசுரச .... கலலோக

சராசர வியாபக பராபர மநோலய
சமாதிய நுபூதிபெற .... நினைவாயே

நிலாவிரி நிலாமதி நிலாதவ நிலாசன
நியாயபரிபாலஅர .... நதிசூடி

நிசாசர குலாதிப திராவண புயாரிட
நிராமய சரோருகர .... னருள்பாலா

விலாசுகம் வலாரெனு முலாசவி தவாகவ
வியாதர்கள் விநோதமகள் .... மணவாளா

விராவுவ யலார்புரி சிராமலை பிரான்மலை
விராலிமலைமீதிலுறை .... பெருமாளே.

சொற்பிரிவு

இலாபம் இல் பொலா உரை சொலா மன தபோதனர்
யாவரும் இராவு பகல் அடியேனை

இராகமும் விநோதமும் உலோபமுடன் மோகமும்
இலான் இவனும் மாபுருஷன் என ஏய

சலாப அமலாகர சசீதர விதாரண
சதாசிவ மயேசுர சகலலோக

சராசர வியாபக பராபர மநோலய
சமாதி அநுபூதி பெற நினைவாயே

நிலாவிரி நிலாமதி நிலாத அநில அசன
நியாய பரிபால அர நதி சூடி

நிசாசர குலாதிபதி ராவண புயாரிட
நிர் ஆமய சரோருகரன் அருள்பாலா

வில் ஆசுகம் வலார் எனும் உலாச இத ஆகவ
வியாதர்கள் விநோத மகள் மணவாளா

விராவு வயலார்புரி சிராமலை பிரான்மலை
விராலி மலை மீதில் உறை பெருமாளே

பதவுரை

இலாபமில் பொலா உரை சொலா மன தபோதனர் = பயனற்ற கேடான பேச்சுக்களைசொல்லாத உள்ளம் படைத்த தவ முனிவர்கள்,

யாவரும் இராவு பகல் அடியேனை = அனைவரும் இரவிலும் பகலிலும் அடியேனைக் குறித்து(இவன்)

இராகமும் விநோதமும் உலோபமுடன் மோகமும் = ஆசை, சிற்றின்ப விளையாட்டில் ஈடுபாடு, ஈயாத துர்க்குணம், காம மயக்கம் (இவைகள்),

இலான் இவன் மாபுருஷன் என ஏய = இல்லாதவன் இவன் ஒரு சத்புருசன் எனச் சொல்வது பொருந்தும் படி,

சலாப அமலாகர சசீதர விதாரண = இன் சொல்லும் பரிசுத்தமும் கூடியவரே, சந்திர சூடியே, கொடை வள்ளலே,

சதாசிவ மயேசுர = அனுக்ரக மூர்த்தியே, பெரும் தெய்வமே,

சகலலோக சராசர வியாபக = எல்லா உலகங்களிலும் உள்ள அசையும் அசையா பொருளினிடத்தில் நீக்கமற நிறைந்திருப்பவனே, பராபர மநோலய சமாதி அநுபூதிபெற

நினைவாயே = பரம் பொருளே மனம் ஒடுங்கிய சமாதி அநுபூதி நிலையை நான் பெற நீ கருத்தில் நினைக்க வேண்டும். (1. சமாதி மனோலயம் வந்து தாராய், 2. குரங்கை ஒத்து உழல்வேனோ மனோலயம் என்று சேர்வேன், 3. மவுன பஞ்சர மனோலய சுகம் தருவாயே)

நிலாவிரி நிலாமதி = சந்திரிகை ஆகி விரிந்து ஒளி வீசும் மதியையும்

நிலாத அநில அசன = ஓரிடத்தில் நில்லாது அலைகின்ற காற்றை உணவாகக் கொள்ளும் (அநிலம் = காற்று, அசன = உணவு)

நியாய பரிபால அர, நதி சூடி = பூமியில் நீதியைக் காப்பதுமான ஆதிசேட சர்ப்பத்தையும் கங்கையையும் சூடினவரும்

நிசாசர குலாதிபதி ராவண புயாரிட = அரக்கர் குல அதிபனான இராவணனின் தோள்களுக்கு தீங்கை உண்டு பண்ணினவரும்

நிர் ஆமய சரோருகரன் அருள்பாலா = பிறவி நோய் அற்றவரும் தாமரையில் வீற்றிருப்பவருமான (பதும நன்மலரது மருவிய சிவன் - தேவாரம்) சிவபெருமான் அருளிய குழந்தையே

வில் ஆசுகம் வலார் எனும் உலாச இத ஆகவ வியாதர்கள் விநோத மகள் மணவாளா = வில் அம்பு கொண்டு போர் புரிவதில் திறன் படைத்தவர்கள் எனும் பெருமையினால் களிப்பு கொண்ட இன்பத்துடன் போரிடும் வேடர்களின் அற்புத மகளாம் வள்ளியின் மணவாளனே (ஆசுகம் = அம்பு, ஆகவ = போர் புரியும்)

விராவு வயலார்புரி சிராமலை பிரான்மலை விராலிமலை மீதில் உறை பெருமாளே = பொருந்தியுள்ள வயலூர், திருச்சிராப்பள்ளி, பிரான் மலை (கொடுங்குன்றம் மற்றும் விராலிமலையிலும் உறைகின்ற பெருமாளே

நிராமய புராத

நிராமய புராதன பராபர வராம்ருத
நிராகுல சிராதிகப் .... ப்ரபையாகி

நிராசசி வராஜத வராஜர்கள் பராவிய
நிராயுத புராரியச் .... சுதன்வேதா

சுராலய தராதல சராசர பிராணிகள்
சொரூபமி வராதியைக் .... குறியாமே

துரால்புகழ் பராதின கராவுள பராமுக
துரோகரை தராசையுற் .... றடைவேனோ

இராகவ இராமன்முன் இராவண இராவண
இராவண இராஜனுட் .... குடன்மாய்வென்

றிராகன்ம லராணிஜ புராணர்கு மராகலை
யிராஜசொ லவாரணர்க் .... கிளையோனே

விராகவ சுராதிப பொராதுத விராதடு
விராயண பராயணச் .... செருவூரா

விராவிய குராவகில் பராரைமு திராவளர்
விராலிமலைராஜதப் .... பெருமாளே.

சொற்பிரிவு

நிர் ஆமய புராதன பராபர வர அம்ருத
நிர் ஆகுல சிராதிகப் ப்ரபையாகி

நிர் ஆச சிவராஜ தவராஜர்கள் பராவிய
நிர் ஆயுத புராரி அச்சுதன்வேதா

சுராலய தராதல சர அசர பிராணிகள்
சொரூபம் இவர் ஆதியைக் குறியாமே

துரால் புகழ் பராதின கராவுள பராமுக
துரோகரை தர ஆசை உற்று அடைவேனோ

இராகவ இராமன் முன் இராவண இராவண
இராவண இராஜன் உட்குடன்மாய்வு என்று

இராக மலர் ஆள் நிஜ புராணர் குமரா கலை
இராஜ சொல் அ வாரணர்க்கு இளையோனே

விராகவ சுராதிப பொராது தவிரா அடு
விர அயண பராயணச் செரு ஊரா

விராவிய குரா அகில் பராரை முதிராவளர்
விராலிமலை ராஜதப் பெருமாளே.

பதவுரை

நிர் ஆமய = பிறவி நோய் இல்லாதவரும்,

புராதன = அநாதி நித்யம் ஆனவரும்,

பராபர = மேம்பட்டதெற்கெல்லாம் மேம்பட்டவரும்,

வராம்ருத = அமிர்தம் போன்று வரங்களை அருள்பவரும்,

நிர் ஆகுல = எத்துன்பமும் இல்லாதவரும்,

சிராதிகப் ப்ரபையாகி = சிரத்தின் மேல் மிக்க பேரொளிப் பிழம்பாய் பிரகாசிப்பவரும்

நிர் ஆச = ஆசை என்பது அணுவளவும் இல்லாதவரும்,

சிவராஜ தவராஜர்கள் பராவிய = சிவராஜ யோகிகளான தவராஜ சிரேஷ்டர்கள் வழிபடுகின்ற

நிர் ஆயுத புர அரி = ஒரு ஆயுதமும் இல்லாமல் முப்புரம் எரி செய்த முதல்வருமானவரும்,

அச்சுதன் வேதா = அழிவற்ற திருமாலாகவும் பிரம்மனாகவும்,

சுராலய தராதல சர அசர பிராணிகள் சொரூபம் இவர் = தேவர் உலகத்திலும் நில உலகத்திலும் உள்ள இயங்குவன நிலைத்து நிற்பனவாக உள்ள உயிர்களின் சொரூபத்தில் தோய்ந்துள்ள

ஆதியைக் குறியாமே = மூல முதன்மையைத் தியானிக்காமல்

துரால் புகழ் = உபயோகமில்லாத புகழுடன்,

பராதின = அடிமை வாழ்வு ஆகி,

கரா உள பராமுக துரோகரை தர(ரை) ஆசை உற்று அடைவேனோ = எங்கேயோ பராக்கு பார்ப்பவர் போல் இருந்து (திடுக் கென்று பற்றும் திருட்டு முதலை உள்ளம் கொண்ட துரோகிகளை அநியாய உலக ஆசையால் உறவாடுவேனோ? அப்படி ஆகேன்)

இராகவ இராமன் முன் = இரகு குல திலகமான ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி முன்பு,

இராவண இராவண = இரவின் வண்ணமாகிய கருநிறத்தைக் கொண்ட,

இராவண இராஜன் உட்குடன் மாய்வு என்று = இராவணேஸ்வரன் அஞ்சி மரணம் அடைய அருள் என்று (உட்குடன் = பயந்து)

இராக மலர் ஆள் நிஜ புராணர் குமரா = அன்பனாகி அர்ச்சித்த மலர்களை ஏற்று மெய்யை நிறைவுள மைந்தா!

கலை இராஜ சொல் அவாரணர்க்கு இளையோனே = அருள் நூல்கள் மேன்மையுடன் அறிவிக்கும் அநாதி, நித்ய தந்தி முகவர்க்கு தம்பியே

விராகவ, சுராதிப = எழுந்து பெருகும் வேட்கை இல்லாதவனே, வானோர் தலைவா,

பொராது தவிராது அடு = போர் செய்யாது இலக்கு தவறாமல் சண்டை செய்யும்,

விர அயண பராயணச் செரு ஊரா = வெல்லும் வீர அறிவிப்பை இடையறாது விளம்பும் திருப்போரூர் தெய்வமே,

விராவிய குரா அகில் பராரை முதிரா வளர் = குராமலர்களும் அகில் மரங்களும் கலந்து அடி பருத்து முதிர்ந்து வளர்ந்துள்ள

விராலி மலை ராஜதப் பெருமாளே = விராலி மலையில் வீற்றிருக்கும் உக்ரமூர்த்தமாக உயர்ந்தவனே

குகஶ்ரீ ரசபதி அவர்களின் விரிவுரை

திடச் சித்தம் உடையவன் தீர்க்கவாகு. அவன் மகன் ரகு. ஒருசமயம் ரகு விஸ்வஜித் எனும் வேள்வியை நடத்தினான். நிறைந்த பொருள் கரைந்தது. பெரியோருக்கு அழகு வறுமையிலும் செம்மை. அதை ரகு அனுசரித்திருந்தான். கருணை நிறைந்த அந்தணர் கவசர். அவர் ஒருநாள் ரகுவிடம் வந்தார். அவர் திருவடிகளை வழிபட மண் பாத்திரத்தில் நீர் கொணர்ந்தார். அது கண்ட கவசர் திரும்பினார். சுவாமி, ஏன் போகிறீர்? வந்த காரணம் தெரிந்தது இல்லையே என்று வழி மறித்தான் ரகு. அரசே, குரு காணிக்கை செலுத்த, கோடிப் பொன் வேண்டும். வள்ளலான உன்னிடம் அதை எதிர் பார்த்தேன். உன் நிலையை உணர்ந்தேன். வருந்தித் திரும்புகிறேன் என்றார் வந்தவர்.

சுவாமி, வந்தவரை வெறும் கையாக அனுப்புவது என் வழக்கத்தில் இல்லை இங்கேயே இரண்டொரு வாரம் இரும். கோடிப் பொன்னைக் கொடுத்து அனுப்புவேன். என் மேல் ஆணை. இதற்கு முன் நீர் போகக் கூடாது என தடை செய்தான். அவர்க்கு பொன் அளிக்க மன்னன் போர் கோலம் பூண்டான். புனித வட திசை நோக்கி புறப்பட்டான். தனக்கென வாழான், பிறக்கென வாழும் ரகுவின் குணமறிந்து, குபேரன் வளரும் செல்வத்தை அவன் பெரும் கருவூலத்தில் நிரப்பினான்.அரசர் ஏவலர் அதை அறிந்தனர். ஓடிச் சென்றனர். ரகுவைத் தடுத்து நிறுத்தினர். உற்றது உரைத்தனர். மன்னன் ரகுவின் மனம் மகிழ்ந்தது. அரண்மனைக்குத் திரும்பினான். கொடுத்த வாக்கின் படி கவசர்க்கு கோடிப் பொன்னுக்கு மேலும் கொடுத்து அனுப்பினான். அந்த ரகுவின் மைந்தன்

அஜன். அஜன் மைந்தன் தசரதன். தசரத குமாரன் ராமன். போதுமா வரலாறு?.

பிறரைக் காக்கும் எண்ணம் கொண்ட ரகுவின் வழியில், அந்த ரகுவிற்கு இணையானவன் ஆதலால், இராமன் இராகவன் என பெயர் பெற்றான். அப்புனித புண்ணிய ராமனை எதிர்த்தான் ஒருவன்.அவன் கருத்த நிறத்தன். அரக்கர் தலைவன். பயங்கரமான அழுகுரல் ஒலியினன். அதனால் இராவணன் எனும் பெயர் எய்தியவன். அஞ்சா நெஞ்சத்தினன். அவன் அழிய வேண்டும். உலகம் அதனால் உய்யும் என எண்ணிய ராமன் அரிய மலர்களால் சிவபெருமானை அர்ச்சித்தான். பரம அவ்வழிபாட்டை ஏற்று பேரருள் பாலித்தவர்,சத்தானவர், நிறைந்து எங்கும் நிலைத்த இறைவர். அப்பெருமான் அருளிய உம்மை, இராகவ இராமன் முன் இராவண இராவண இராவண இராஜன் உட்குடன்மாய்வு என்று இராக மலர் ஆள் நிஜ புராணர் குமரா எனக் கூவி எழுந்து கும்பிடுகிறோம். (பூரணர் என்பது புராணர் என மருவியது).

(சலந்தரனை மாய்க்க சக்கரம் பெற திருவீழிமிழலையில் கண்ணை ஈந்து ஆழி பெற்ற வரலாறு இங்கு சரியாகப் பொருந்தும் என்பது அடியேனின் தாழ்வான அபிப்பிராயம். இன்னொரு திருப்புகழிலும் மா கடோர சலந்தரன் நொந்து வீழ உடல் தடியும் ஆழி தா என அம்புயமலர்கள் தச நூறு தாள் இடும் பகல் ஒரு மலர் இலாது கோ அணிந்திடு மாலுக்கு உதவிய மகேசர்என்று இவ்வரலாற்றைப் பாடுகிறார். பங்கயம் ஆயிரம் பூவினில் ஓர் பூகுறைய தம் கண் இடந்தான் சேவடி சாத்தலுமே சங்கரன் எம்பிரான் சக்கரம் மாற்கு அருளியது எங்கும் பரவி நாம் தோள் நோக்கம் ஆடாமோ - திருவாசகம். ஆதி சங்கரரின் சிவானந்த லஹரியில் 82-ம் பாட்டு,

த்வத்பாதே நயனார்ப்பணஞ்ச க்ருதவான் த்வத் தேஹ - பாகோ ஹரி: - திருப்புகழ் அடிமை நடராஜன் அவர்களின் கருத்து)

கண்டதை எல்லாம் கலை என்று கூறி மாபெரும் அதன் மதிப்பை உலகம் மறந்துளது. ஓத அரியது, எவரும் உணர எளியது, கலைச் செய்தி ஊன்றி உணர்வார்க்கு அக் கலையால் ஓதறிய ஒரு செய்தி உளது. அதை கலை இராஜ சொல்என்கிறோம்.சொல்லாதவார்த்தையைசொன்னாண்டி தோழி என்றார் பிறரும் (வள்ளலார்). நாள்தோறும் கணபதி வழிபாடு எங்கும் நடைபெறுகிறது. வழிபாட்டில் ஒருமை மனம் வாய்க்குமேல் அந்த ஒருமொழியை கணபதி உணர்த்துவதை உணரலாம்.அவ்வளவு பரம உபகாரியானவர் ஆனைமுக அத்தர். அநாதி நித்யர் ஆதலின் அவாரணர் என்று அவரை அனுபவிக்கிறோம். அத்துணை சிறந்த ஏகம்பருக்கு இளையவர் நீர் அதனால் தான், கலை இராஜ சொல் அ வாரணர்க்கு இளையோனே என்று ஆர்வத்தோடு உம்மை அழைக்கிறோம்.

எப்பற்றும் இல்லாத நின்னை விராகவ என்கிறோம் (ராகம் = விருப்பம், வி = இன்மை). அமுதிற்கு சுரை என்று பெயர். அதை உண்டவர் சுரர்.என்றும் இளமையும் மணம் கமழ் நிலையும் இமையா விழியும் ஒளிமிகு உடலும் உடைய அந்த அமரர் வழிபடும் உம்மை சுராதிப, என்னாமல் வேறு என்னென்று, பெரும! சொல்லுவது?.

என்றுமே நீர் போர் புரிந்தது இல்லை. சூரபத்மனுக்கு பெருவாழ்வு கொடுத்தீர். மற்றவையும் மறக்கருணையின் திருவிளையாடலே. உமது சங்கல்பம் இலக்கும் தவறுவது இல்லை. அத்தகைய வீரம் உமது அறிவிப்பு. பரம! அக்குறிப்பை என்றும் பாராயணம் செய்கிறது ஒரு பதி. அதனால்தான் அத்தலம் என்றும் திருப்போரூர் என திகழ்கிறது. அதில் அமைதியாக எழுந்தருளி இருக்கும் உம்மை, பொராது தவிரா அடு விர அயண பராயணச் செரு ஊரா என்று போற்றி எம் மனம் பூரிக்கின்றது. (அயணம் = அறிவிப்பு).

குரு மூர்த்தம் ஆன போது குரா மலர் சூடுவீர். போக மூர்த்தம் ஆகிற போது அகில் மண மேனியர் ஆகின்றீர். அந்த அருமை அறிந்தே எங்கும் குரா மரங்களும் அகில் மரங்களும் அடி பருத்துவானோங்கி வளர்ந்த தலம் விராலிமலை.வயலூரில் உம்மை வழிபட்டு இருந்தேம். எளிய! எம் முன் எழுந்தருளி விராலி மலைக்கு வா என்றீர், வரத குமார, நீர் அறிவித்த படியே வந்துளன்."அறிவித்தல் அன்றி அறியா உளங்கள்" என்று சாத்திரங்கள் கூறும். அருமையான இவ்வரலாற்றின் மூலம் உலகம் உணரும் அல்லவா. இராஜதம் என்பது முக்குணங்களில் ஒன்று. மற்றவை தாமசம், சாத்வீகம். உம்மிடம் உள்ள அவைகளின் அருமையே தனி. அக்குணம் உம்மில் இல்லையேல் சொரூபமே அன்றி உம்மை உருவத்திரு மேனியில் உணர இயலுமோ ?. ஊக்கம், அறிவு, வீரம், தருமம், தானம், கல்வி, கேள்வி, தவம் எனும் எட்டும் உடையது இராஜதம். அதனால்தான் உம்மை ராஜதப் பெருமாளே என உணர்ந்து போற்றுகிறது உலகம். அத்துடன் நாலந்த வேதத்தின் பொருளோனே நான் என்று மார் தட்டும் பெருமாள் என வீரிட்டு கூவி விளிக்கலாம் அல்லவா ?

காரணம் பற்றிய நோய் ஒன்று கரும வழி வந்த பிணி ஒன்று. காரணத்திற்கு மருந்து உண்டு. கருமத்திற்கு மருந்து இல்லை. இந்த இரண்டையும் அனுபவிப்பவர்கள் நாங்கள். அருளே திரு மேனியரான உமக்கு அந்த இரு நோய்களும் இல்லை அதனால் நிராமயன் ஆயினை. (ஆமயம் = நோய், நிர்-இன்மை). பழையனின் பழையன் பழம் பொருள் யாவற்றையும் கடந்த பழம் பொருள் நீர் அதனால் புராதனன் என்று உம்மைப் புகழ்கிறோம். பரம் என்பது சிவ ஞானம், அபரம் என்பது கலைஞானம் இந்த இருஞானமும் உமது சொரூபம். அதனால் தான் பராபரா (பர அபரா என்று பகர்கின்றனர் மேலோர். மேலானவரில்

மேலானவர் என்றும் இதற்குப் பொருள் உண்டு. இன்ப வரம் தரும் நீர் வராம்ருத (வர அம்ருத!) வாய்திறந்தால் வம்பு, உறவில் துன்பம், நட்பில் நட்டம், எப்புறம் திரும்பினாலும் ஏராளமான தொல்லை. இது எங்கள் தலைவிதி. எத்துன்பமே இல்லா உம்மை நிராகுல (நிர் + ஆகுல, ஆகுல = துன்பம்) என்கிற போதே மாபெரும் எம் வேதனைகள் யாவும் மறைந்திடுகின்றதே.

எண் சாண் உடம்பில் சிரம் பிரதானம் அதன் உச்சியிலிருந்து 12 அங்குலத்திற்கு மேல் துவாத சாந்த நிலம் உள்ளது. அங்கு பேரொளிப்பிழம்பாய் பிரகாசிக்கும் உம்மை சிர அதிக பிரபையாய் உள்ளீர் என்று உணருகிறோம் (பிரபை = ஒளி மயம்).

பற்று நீங்க மேலோர் பல வகைகளில் முயன்றனர். அதன் பின் 60 நாழிகை பாராயணம் செய்தனர். அதன் பின் 60 நாழிகை ஆறெழுத்தை உருவேற்றினர். அதன் பின் அயர்ச்சி.அயர்ச்சியில் மவுனம். நாள்தோறும் இந்த நடை இதன்வழி ஓடி மீளும். சுவாசம் தானே ஒடுங்கும் இது தான் சிவராஜயோகம். இந்த சாதகரே சிவராஜயோக தவராஜர் எனப்பெறுவர்.

துருத்தி எனும்படி கும்பித்து வாயுவை சுற்றி முறித்து அருத்தி உடம்பை ஒறுக்கில் என்னாம் சிவ யோகம் என்னும் குருத்தை அறிந்து முகம் ஆறு உடை குருநாதன் சொன்ன கருத்தை மனத்தில் இருத்துங்கள் முத்தி கை கண்டதே, கண்டீர் எனும் அலங்காரமாக ஒரு இடத்தில் அறிவித்தும் இருக்கிறேன்.

தவிராது

பொராது தவறாது அடு விராயணர் ஆன உம்மை ஆராதித்ததின் பயனாக எப்படையும் ஏந்தாமல் சிரித்து புரத்தை எரித்தவர் நீலகண்டர். மேற் சொன்ன சிவராஜ தவராஜர்கள் அந்த நீலகண்டரையே தியானிக்கின்றனர். அதனால் தான்

சிவராஜ தவராஜர்கள் பராவிய நிர் ஆயுத புராரி என்கிறோம்.

கை குவித்தவரை கை விடாத திருமால் அச்சுதன் என்று அறியப் பெறுகிறார். (அச்சுதன் = கைவிடாதவர்). ஓயாது வேதம் ஓதும் பிரம்ம தேவர் வேதா என விளம்பப்படுகிறார். ஸ்ரீகண்டர் திருமால், பிரம்ம தேவர் எனும் மூர்த்திகள் மூவரில் கலந்து இருந்து நலமாக அவர்கள் தொழிலை நடத்துகின்றீர். அது கருதியே புராரி அச்சுதன் வேத சொரூபா எனப் புகலுகின்றோம் யாம். அவ்வளவு தானா?

சுர ஆலயம் எனும் பொன்னுலகம், தராதலம் எனும் மண்ணுலகம் இவைகளில் உள்ள இயங்குவன நிலைத்து நிற்பனவான உயிர்கள் என்றும் உயிர்த்துக் கொண்டே இருக்கின்றன பிராண ஓட்டம் உடைய அவைகளை பிராணிகள் என்றே பேசுகிறோம். திரி மூர்த்திகள் உயிர்ப்பிற்கு மூலமாக அவைகளில் இருந்து உயிர்ப்பிப்பவர் நீர். இதனால் தான் உம்மை பிராணிகள் சொரூபம் இவர் ஆதி என்று மறைகள் பேசுகின்றன.

நிராமய, புராதன, பராபர, வராம்ருத,..,நிராகுல, சிராதிக ப்ரபையாகி, நிராச, சிவராஜ தவராஜர்கள் பராவிய நிராயுத புராரி அச்சுதன் வேதா, சுராலய தராதல சராசர பிராணிகளில் உமது சொரூப ஆட்சி உளது. அச்சொரூப வித்திலிருந்து விளைந்தது உம் தடத்த திரு உருவம். அதனால் தான் சொரூபம் இவர் ஆதி என்று சொல்லுகிறோம். (இவர்தல் = மேலிருந்து (வர்தல் = மேலிருந்து எழுந்து விளங்குதல், ஆகி அநாதி சொரூபம் = ஆதி திருவுருவம்). சொரூபம் அறிவால் அறிய இயலாதது. எச்சாதனைக்கும் ஆரம்பத்தில் வேண்டப் பெறுவது திருவுருவே ஆக, உமது திருவுருவம் குறியைக் குறியாது குறித்தறியும் நிலையைக் கொண்டு உயர்ந்துளர் பெரியோர்.

படித்தவன், அறிவாளி, பேச்சாளன், எழுத்தாளன், தர்மிஷ்டன் என்று பிறர் புகழ்தலை உவகையோடு வரவேற்பது உலக வழக்கு. ஐயோ, அந்த புகழ்கள் அனைத்தும் குப்பையில் கொண்டு போடுவதற்கே உரியன. அது துரால் புகழ் (துரால் = குப்பைக் கூளம்) அது தானா

முதலையின் சாதுத்தனம் மோசமானது. அம்முதலை போன்ற மனமுடையவர் அளவிலர். காரியம் முடிந்த பின் காலை வாரிவிடும் துரோகிகளும் அரிய இவ்வுலகில் அதிகரித்துளர்.யாதாயினும் ஆகுக. வளர வேண்டும், உலகில் வாழ வேண்டும் எனும் இச்சையால் அவர்களோடு உறவு வேண்டேன். புனித உம்மையே புகலடைவேன் என்று விம்மி, பொருமி விண்ணப்பித்தபடி.

இதமுறு விரைபுனல்

இதமுறு விரைபுனல் முழுகி யகில்மண
முதவிய புகையினி லளவி வகைவகை
கொத்தலர்க ளின் தொடையல் வைத்துவளர்
கொண்டலென

அறலென இசையளி யெனந ளிருளென
நிறமது கருகிநெ டுகிநெ றிவுபட
நெய்த்துமுசு வின்திரிகை யொத்தசுருள்
குந்தளமும்

இலகிய பிறையென எயினர் சிலையென
விலகிய திலதநு தலும திமுகமும்
உ ற்பலமும் வண்டுவடு விற்கணைய மன்படரு
.... முனைவாளும்

இடர்படு கவுநடு வனும்வ லடல்பொரு
கடுவது மெனநெடி தடுவ கொடியன
இக்குசிலை கொண்டமதன் மெய்த்தவநி
றைந்தவிழி

தளவன முறுவலு மமுத குமுதமும்
விளைநற வினியமொ ழியுமி னையதென
ஒப்பறுந கங்கள்விரல் துப்பெனவு றைந்துகமு

கிடியொடி படவினை செயும்வின் மதகலை
நெடியக வுடியிசை முரலு சுரிமுக
நத்தனைய கண்டமும்வெண் முத்துவிளை
விண்டனைய .... எழில்தோளும்

விதரண மனவித னமதை யருள்வன
சததள மறைமுகி ழதனை நிகர்வன
புத்தமிர்து கந்தகுடம் வெற்பெனநி ரம்புவன

இமசல ம்ருகமத களப பரிமள
தமனிய ப்ரபைமிகு தருண புளகித
சித்ரவர மங்கலவி சித்ரவிரு துங்ககன

விகலித மிருதுள ம்ருதுள நவமணி
முகபட விகடின தனமு முயர்வட
பத்திரமி ருந்தகடி லொத்தசுழி யுந்தியுள
.... மதியாத

விபரித முடையிடை யிளைஞர் களைபட
அபகட மதுபுரி யரவ சுடிகைய
ரத்நபண மென்பவழ குற்றவரை யும்புதிய

நுணியத ளிரெனவு லவிய பரிபுர
அணிநட னபதமு முடைய வடிவினர்
பொற்கலவி யின்பமதி துக்கமென லன்றியவர்

விரகினி லெனதுறு மனம துருகிய
பிரமையு மறவுன தருள்கை வரவுயர்
பத்திவழி யும்பரம முத்திநெறி யுந்தெரிவ
.... தொருநாளே

தததத தததத தத்த தததத
திதிதிதி திதிதிதி திதிதி திதிதிதி
தத்ததத தத்ததத தித்திதிதி தித்திதிதி

டகுடகு டிகுடிகு டகுகு டிகுடிகு
டிகுடிகு டகுடகு டிகுகு டகுடகு
தத்ததிமி டங்குகுகு தித்திதிமி டிங்குகுகு

தமிதமி தமிதக தமித திமிதக
திமிதிமி செககண திமித திகதிக
தத்திமித தந்திமித தித்திமிதி திந்திமிதி
.... யெனவேதான்

தபலை குடமுழவு திமிலை படகம்
தபுதச லிகைதவில் முரசு கரடிகை
மத்தளித வண்டையற வைத்தகுணி துந்துமிகள்

மொகுமொகு மொகுவென அலற விருதுகள்
திகுதிகு திகுவென அலகை குறளிகள்
விக்கிடநி ணம்பருக பக்கியுவ ணங்கழுகு

சதிர்பெற அதிர்தர உததி சுவறிட
எதிர்பொரு நிருதர்கள் குருதி பெருகிட
வப்புவின்மி தந்தெழுப தற்புதக வந்தமெழ
.... வெகுகோடி

மதகஜ துரகர தமுமு டையபுவி
யதலமு தல்முடிய இடிய நெடியதொர்
மிக்கொலிமு ழங்கஇரு ளக்கணம்வி டிந்துவிட

இரவியு மதியமு நிலைமை பெறஅடி
பரவிய அமரர்கள் தலைமை பெறஇயல்
அத்திறல ணங்குசெய சத்திவிடு கந்ததிரு

வயலியிலடிமைய குடிமை யினலற
மயலொடு மலமற அரிய பெரியதி
ருப்புகழ்வி ளம்புவென்மு னற்புதமெ முந்தருள்கு
.... கவிராலி

மலையுறை குரவந லிறைவ வருகலை
பலதெரி விதரண முருக சரவண
உ ற்பவக்ர வுஞ்சகிரி நிக்ரகஅ கண்டமய

நிருபவி மலசுக சொருப பரசிவ
குருபர வெளிமுக டுருவ வுயர்தரு
சக்ரகிரி யுங்குலைய விக்ரமந டம்புரியு

மரகத கலபமெ ரிவிடு மயில்மிசை
மருவியெ யருமைய இளமை யுருவொடு
சொர்க்கதல மும்புலவர் வர்க்கமும்வி ளங்கவரு
.... பெருமாளே.

சொற்பிரிவு

தனதன தனதன தனன தனதன
தனதன தனதன தனன தனதன
தத்ததன தந்ததன தத்ததன தந்ததன

தனதன தனதன தனன தனதன
தனதன தனதன தனன தனதன
தத்ததன தந்ததன தத்ததன தந்ததன

தனதன தனதன தனன தனதன
தனதன தனதன தனன தனதன
தத்ததன தந்ததன தத்ததன தந்ததன தனதான

இதம் உறு விரை புனல் முழுகிய அகில் மணம்
உதவிய புகையினில் அளவி வகை வகை
கொத்து அலர்களின் தொடையல் வைத்து வளர்
கொண்டல் என

அறல் என இசை அளி என நள் இருள் என
நிறம் அது கருகி நெடுகி நெறிவு பட
நெய்த்து முசுவின் திரிகை ஒத்த சுருள் குந்தளமும்

இலகிய பிறை என எயினர் சிலை என
விலகிய திலத நுதலு(ம்) மதி முகமும்
உற்பலமும் வண்டு வடு வில் கணை யமன்
படரு(ம்) முனை வாளும்

இடர் படு(க்)கவு(ம்) நடுவனும் வல் அடல் பொரு
கடுவதும் என நெடிது அடுவ கொடியன
இக்கு சிலை கொண்ட மதன் மெய்த் தவநிறைந்த விழி

தளவன முறுவலும் அமுத குமுதமும்
விளை நறவு இனிய மொழியும் இனையது என
ஒப்பு அற நகங்கள் விரல் துப்பு என உறைந்து
கமுகு
இடி ஒடி பட வினை செயும் வில் மத கலை
நெடிய கவுடி இசை முரலும் சுரி முக
நத்து அனைய கண்டமும் வெண்முத்து விளை

விண்டு அனைய – எழில் தோளும்
விதரண(ம்) மன விதனம் அதை அருள்வன

சத தள மறை முகிழ் அதனை நிகர்வன
புத்த அமிர்து கந்த குடம் வெற்பு என நிரம்புவன
இமம் சலம் ம்ருகமத களப பரிமள

தமனிய ப்ரபை மிகு தருண புளகித
சித்ர வர மங்கல விசித்ர இரு துங்க கன
விகலித மிருதுள ம்ருதுள நவ மணி

முக பட விகடின தனமும் உயர் வட
பத்திரம் இருந்த அகடில் ஒத்த சுழி உந்தி உள
மதியாத
விபரிதம் உடை இடை இளைஞர் களை பட

அபகடம் அது புரி அரவ சுடிகைய
ரத்ன பணம் என்ப அழகுற்ற அரையும் புதிய
நு(ண்)ணிய தளிர் என உலவிய பரிபுர(ம்)

அணி நடன பதமும் உடைய வடிவினர்
பொன் கலவி இன்பம் அதி துக்கம் எனல் அன்றி அவர்
விரகினில் எனது உறு மனம் அது உருகிய

பிரமையும் அற உனது அருள் கை வர உயர்
பத்தி வழியும் பரம முத்தி நெறியும் தெரிவது
ஒரு நாளே

தததத தததத தத்த தததத
திதிதிதி திதிதிதி திதிதி திதிதிதி
தத்தத்த தந்தத்த தித்திதிதி திந்திதிதி

டகுடகு டிகுடிகு டகுகு டிகுடிகு
டிகுடிகு டகுடகு டிகுகு டகுடகு
தத்ததிமி டங்குகுகு தித்திதிமி டிங்குகுகு

தமிதமி தமிதக தமித திமிதக
திமிதிமி செகக்ண திமித திகதிக
தத்திமித தந்திமித தித்திமிதி திந்திமிதி
எனவேதான்

தபலை குட முழுவு திமிலை படகம் அது
அபுத ச(ல்)லிகை தவில் முரசு கரடிகை
மத்தளி தவண்டை அறவைத் தகுணி துந்துமிகள்

மொகுமொகு மொகு என அலற விருதுகள்
திகுதிகு திகு என அலகை குறளிகள்
விக்கிடநிணம் பருக பக்கி உவணம் கழுகு

சதிர் பெற அதிர் தர உததி சுவறிட
எதிர் பொரு நிருதர்கள் குருதி பெருகிட
அப்புவின் மிதந்து எழுபது அற்புத கவந்தம் எழ
வெகு கோடி

மத கஜ துரக ரதமும் உடைய புவி
அதல முதல் முடிய இடிய நெடியது ஒர்
மிக்க ஒலி முழங்க இருள் அக்கணம் விடிந்து விட

இரவியும் மதியமும் நிலைமை பெற அடி
பரவிய அமரர்கள் தலைமை பெற இயல்
அத்திறல் அணங்கு செய சத்தி விடு கந்த

திருவயலியில் அடிமைய குடிமை இ(ன்)னல் அற
மயலொடு மலம் அற அரிய பெரிய
திருப்புகழ் விளம்பு என் முன் அற்புதம் எழுந்தருள்
குக விராலி

மலை உறை குரவ நல் இறைவ வரு கலை
பல தெரி விதரண முருக சரவண
உற்பவ க்ரவுஞ்ச கிரி நிக்ரக அகண்ட மய

நிருப விமல சுக சொருப பரசிவ
குருபர வெளி முகடு உருவ உயர் தரு
சக்ர கிரியும் குலைய விக்ரம நடம் புரியு(ம்)

மரகத கலபம் எரி விடு மயில் மிசை
மருவியெ அருமைய இளமை உருவொடு
சொர்க்க தலமும் புலவர் வர்க்கமும் விளங்க வரு
பெருமாளே

பதவுரை

இதம் உறு விரை புனல் முழுகி = சுகம் தரும் வாசனை நீரில் குளித்து,

அகில் மண முதவிய புகையினில் அளவி = அகிலின் நறுமணம் வீசும் புகையை உடலுக்குக் காட்டி,

வகை வகை கொத்து அலர்களின்தொடையல் வைத்து வளர் கொண்டல் என = விதவிதமான மலர் கொத்துக்களின் மாலைகளை வரிசையாக வைத்து நிறைந்த கரு மேகம் போலவும்,

அறல் என இசை அளி என நள் இருள் என = கரு மணல் போன்றும், ரீங்காரம் செய்யும் வண்டு கூட்டம் போன்றும், நடுநிசி போன்றும்,

நிறமது கருகி நெடுகி நெறிவு பட = கரு நிறம் உடையதாய் நீண்டு வளர்ந்துள்ளதாய், சுருண்டவடிவுள்ளதாய்,

நெய்த்து முசுவின் திரி கை ஒத்த சுருள் குந்தளமும் = பளபளப்புள்ளதாய் கருங்குரங்கின் சுருள் உற்ற கை போல சுருண்ட கூந்தலும்,

இலகிய பிறை என எயினர் சிலை என = விளங்கும் சந்திர பிறை போன்றதும், வேடர்களின்வில்லைப் போன்றதும்,

விலகிய திலத நுதலும் மதி முகமும் = விசாலமான பொட்டணிந்த நெற்றியும் சந்திர முகமும்,

உற்பலமும் வண்டு வடு வில் கணை யமன் படரு முனை வாளும் = நீலோற்பலம், வண்டு, மாவடு, வில், அம்பு, எமன் போல் கொடூரமும், பாய்ந்து வரும் கூர் வாள் இவைகளை ஒத்து)

இடர்படு கவு நடுவனும் வல அடல் பொரு = துன்பம் உண்டாக்கவும் எமனை விட அதிக வலிமை பெற்ற

கடுவது மென நெடி அடுவ கொடியன = விஷத்தைப் போன்று நீண்ட நேரம் துன்பம் தருவதாய் பொல்லாதவையாய்,

இக்கு சிலை கொண்ட மதன் மெய் தவ நிறைந்த விழி = கரும்பு வில்லை கொண்ட மன்மதனுடய உண்மைத் தவத்தின் பலனாய்க் கிடைத்த கண்களும்,

தளவன முறுவலும் அமுத குமுதமும் = முல்லை அரும்பு போன்ற பற்களும், அமுதம் பெருகுவதாய் குமுத மலர் போன்ற வாயிலிருந்து,

விளை நறவின் இனிய மொழியும் = வெளிப்படுகின்ற தேன் போல் தித்திக்கின்ற பேச்சும்

இனையது என ஒப்பறு நகங்கள் விரல் துப்பு என உறைந்து = இதற்கு நிகரானது என்று சொல்ல முடியாத நகங்களும் விரல்கள் பவளம் போன்று விளங்க,

கமுகு இடி ஒடி பட, வினை செயும் வில் மத கலை = (கழுத்துக்கு சமானம் இல்லாததால்) பாக்கு மரம் வெட்கி இடிபட்டு ஒடிந்து போகவும், தொழில் செய்யும்

மன்மதனின் வில்லின் பெருமையை எடுத்துச் சொல்லும் மன்மத நூலின்,

நெடிய கவுடி இசை முரலு சரி முக நத்தனைய கண்டமும் = நீண்ட கவுடிப் பண்ணை ஒலிக்கும் சுரிமுக சங்கிற்கு ஒத்த கழுத்தும்

வெண் முத்து விளை விண்டு அனைய எழில் தோளும் = வெண்முத்துக்கள் உண்டாகின்ற மூங்கில் போன்ற அழகிய தோள்களும், (விண்டு = மூங்கில்)

விதரண மன விதனம் அதை அருள்வன = விவேகம் உள்ள மனதிற்கு துயரத்தைத் தருவதும்,

சத தள மறை முகிழ் அதனை நிகர்வன = நூறு இதழ் தாமரையின் மொட்டைப் போன்றதும்

புத்தமிர்து கந்தகுடம் வெற்பு என நிரம்புவன = புதிய அமிர்தம் நிறைந்த மகிழத்தக்க குடம் போன்றதும், மலை போல் பூரித்து நிற்பனவும்,

இமசல ம்ருகமத களப பரிமள = பன்னீர், கஸ்தூரி, கலவைச் சாந்து இவைகளின் நறுமணம் வீசுவதாய்,

தமனியப்ரபைமிகுதருணபுளகித=பொன்னொளி வீசுவதாய் இளமைச் செருக்கு கொண்டனவாய்,

சித்ர வர மங்கல விசித்ர இரு துங்க கன = அழகு, சிறப்பு, மங்கள, அதிசயம் மிக்கதாய் இரண்டு உயர்ந்த பெருமை பூண்ட விகலித, மிருதுள ம்ருதுள, தொய்வு இல்லாத, மிக்க மென்மை உள்ளதாய்,

நவமணி முகபட விகடின தனமும் = நவரத்ன மாலைகளையும் மூடி இருக்கும் அலங்கார வஸ்திரங்களையும் கொண்ட அகலம் வாய்ந்த கொங்கைகளையும்,

உயர் வட பத்திரம் இருந்த அகடில் ஒத்த சுழி உந்தி = உயர்ந்த ஆலிலை போன்ற வயிற்றில் பொருந்தியுள்ள சுழியுள்ள தொப்புளும்,

உள மதியாத விபரிதமுடைய இடை இளைஞர் களைபட = சித்தத்தில் ஆராயாத மாறுபட்ட கருத்தை உடையதாய் அந்த வஞ்சக எண்ணத்தில் மாட்டிக் கொண்ட இளைஞர்கள் சோர்வு அடைய,

அபகடம் அது புரி அரவ சுடிகைய = தீய செயல்கள் புரிகின்ற பாம்பின் தலை உச்சியிலுள்ள ரத்ந பணம் என்ப அழகுற்ற அரையும் ரத்ன படம் என்று கூறத்தக்க அழகுடைய அல்குலும்

புதிய நுணிய தளிர் எனவும் உலவிய பரிபுர = புதிய நுண்ணிய தளிர் போன்றதாய் நடமாடுகின்ற சிலம்பை

அணி நடனபதமும் உடைய வடிவினர் = அணிந்த நடனத்திற்கு ஏற்ற பாதங்களைக் கொண்ட உருவத்தர்களாகிய (வேசியர் தரும்)

பொற்கலவி இன்பம் அதி துக்கம் எனல் அன்றி = சுகமான புணர்ச்சி இன்பம் உண்மையிலேயே பெரிய துன்பத்தைத் தரும் என்கிற உணர்தலோடு,

அவர் விரகினில் எனதுறு மனமது உருகிய பிரமையும் அற = அப் பொதுமகளிரின் தந்திர செயல்களின் என்னுடைய மனம் நெகிழும் மயக்கமும் அடியோடு நீங்க,

உனது அருள் கை வர = நின் அருள் கை கூடி வர,

உயர் பத்தி வழியும் பரம முத்தி நெறியும் தெரிவது ஒருநாளே = உயர்ந்த பக்தி மார்க்கமும், மேலான முத்திப் பேறும் எனக்குப் புலப்படும் மங்களகரமான தினம் ஒன்று வருமா ???

தததத தததத தத்த தததத திதிதிதி திதிதிதி திதிதி திதிதிதி தத்தத்த தந்தத்த தித்திதிதி திந்திதிதி டகுடகு டிகுடிகு டகுகு டிகுடிகு டிகுடிகு டகுடகு டிகுகு டகுடகு தத்ததிமி டங்குகுகு தித்திதிமி டிங்குகுகு தமிதமி தமிதக தமித திமிதக திமிதிமி செககண திமித திகதிக தத்திமித தந்திமித தித்திமிதி திந்திமிதி எனவே தான் = தததத தததத தத்த தததத திதிதிதி திதிதிதி திதிதி திதிதிதி தத்தத்த தந்தத்த தித்திதிதி திந்திதிதி டகுடகு டிகுடிகு டகுகு டிகுடிகு டிகுடிகு டகுடகு டிகுகுடகுடகு தத்ததிமி டங்குகுகு தித்திதிமி டிங்குகுகு தமிதமி தமிதக தமித திமிதக திமிதிமி செக்கண திமித திகதிக தத்திமித தந்திமித தித்திமிதி திந்திமிதி என்று பலத்த ஒலிகளுடன்

தபலை குடமுழவு திமிலை படகம் = தபலா, குடமுழா, திமிலை, சிறு பறை,

அபுத சலிகை தவில் முரசு கரடிகை = முன்னில்லாத புது வகையான சலிகை (சல் என ஒலிக்கும் ஒருவகை பறைமேளம், முரசு, கரடிகை (கரடி கத்துவது போன்று ஓசை எழுப்பும் வாத்தியம்)

மத்தளி தவண்டை அற வைத் தகுணி துந்துமிகள் = நிரம்ப வாசிக்கப்படும் தகுணிச்சம், பேரிகைகள், \

மொகுமொகு மொகுவென அலற = மொகுமொகு மொகு என பேரொலி எழுப்ப,

விருதுகள் திகுதிகு திகு என = வெற்றிச் சின்னங்கள் திகு திகு திகு என்று முழங்க,

அலகை குறளிகள் விக்கிட நிணம் பருக = பேய்களும், குட்டிச் சாத்தான்களும் விக்கல் வரும் அளவிற்கு மாமிசத்தை சாப்பிட

பக்கி உவணம் கழுகு சதிர் பெற அதிர் தர உததி சுவறிட = பட்சிகளான கருடனும் கழுகும் அதிர்ஷ்டம் அடைந்தோம் என்று ஆரவாரம் செய்ய, கடல் வற்றிப் போக,

எதிர் பொரு நிருதர்கள் குருதி பெருகிட = எதிர்த்த அசுரர்களின் ரத்தம் பெருகி வரும்

அப்புவின் மிதந்து எழுபது அற்புத கவந்தம் எழ = அந்த குருதி ஜலத்தில் மிதந்து 70 கணக்கான ஆச்சரியம் தரும் அளவற்ற தலையில்லா முண்டங்கள் வர,

வெகுகோடி மத கஜ துரக ரதமும் உடைய புவி = கோடிக்கணக்கான மதயானைகளையும், குதிரை, ரதங்களையும் கொண்ட பூமி

அதல முதல் முடிய இடிய = அதல முதலாகிய கீழ் உலகங்கள் ஏழும் கலங்கி அதிர்ச்சி அடைய,

நெடியதொர் மிக்கொலி முழங்கஇருள் அக்கணம் விடிந்து விட = நீண்ட பெரிய சத்தம் கிளம்பி சூரபத்மனால் உலகிற்கு ஏற்பட்டிருந்த பெரும் துன்பமான இருட்டு அக்கணமே அகல,

இரவியு மதியமு நிலைமை பெற = சூரியனும் சந்திரனும் தத்தம் நிலைகளில் தொழில் செய்ய,

அடி பரவிய அமரர்கள் தலைமை பெற = திருவடியைத் துதித்த தேவர்கள் மேலான பதவியை அடைய,

இயல் அத்திறல் அணங்கு செய சத்தி விடு கந்த = பொருந்திய அந்த வீரலட்சுமி திகழும் வெற்றி வேலை செலுத்திய கந்தனே,

திரு வயலியில் அடிமைய குடிமை இனல் அற = வயலூர் தலத்தில் அடியேனின் உலகப் பிறப்பின் துன்பங்கள் நீங்க

மயலொடு மலமற = அநித்தியத்தை நித்தியம் என எண்ண வைக்கும் மருளும், மும் மலங்களும் நீங்க,

அரிய பெரிய திருப்புகழ் விளம்பும் என் முன் அற்புதம் எழுந்தருள் குக = அருமையான பெரிய திருப்புகழ் பாடிய என் கண் எதிரில் அற்புத காட்சி கொடுத்த குகனே, (அருணகிரியார் வயலூரில் இருந்த போது விகட பரிமள எனும் பெரிய பாட்டை வயற்பதி ஆண்டவனுக்கு சமர்ப்பித்தார். அதனால் பேருவகை அடைந்த எம்பிரான், அவர் முன் தரிசனம் தந்து அவரது துன்பங்களை நீக்கி ஞானோபதேசம் செய்து விராலி மலைக்கு வா என அழைத்தார். - விராலி மா மலையில் நிற்பம். நீ கருதி உற்று வா என அழைத்து என் மனது ஆசை மாசினை அறுத்து ஞானமும் அளித்த வாரமும் நித்தம் மறவேனே - மேலும் வயலூர் பாடலில், சிவதத்வ ப்ரசித்தி தன்னை, முத்திக்கு வாசலை கேட்கிறார். இங்கு பக்தி வழியும் முத்தி நெறியும் வேண்டுகிறார்.)

விராலி மலை உறை குரவ நல் இறைவ = விராலி மலை மேல் எழுந்தருளி இருக்கும் ஆச்சார்யனே, மேன்மைத் தெய்வமே,

வருகலை பலதெரி விதரண முருக சரவண உற்பவ = உலகில் உள்ள அனைத்து கலைகளையும் அறிந்த கருணை முருகனே (கலா விநோதவா) சரவணப் பொய்கையில் உதித்தவனே (சரத்தே உதித்தாய்)

க்ரவுஞ்சகிரி நிக்ரக = க்ரவுஞ்ச மலையை அழித்தவனே,

அகண்டமய நிருப விமல சுக சொருப பரசிவ குருபர = எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அரசே, பரிசுத்த சுக மூர்த்தியாகிய சிவ பெருமானின் குருநாதனே,

வெளிமுகடு உருவ உயர் தரு சக்ரகிரியும் குலைய விக்ரம நடம்புரியும் = அண்ட கோளத்தின் வெளி எல்லைகளையும் தாண்டி உயர்ந்துள்ள சக்ரவாளகிரியும் நடுக்கமுறவீர நடனம் புரியும்,

மரகத கலபம் எரி விடு மயில் மிசை மருவியெ = பச்சைத் தோகை ஒளிரும் மயில் மேல் அமர்ந்து

அருமைய இளமை உருவொடு சொர்க்கதலமும் புலவர் வர்க்கமும் விளங்கவரு பெருமாளே = அற்புதமான இளமையோடு விண்ணுலகும் அமரர் கூட்டமும் பொலிவு அடையும் படி எழுந்தருளிய பெருமாளே

உ ருவேற வேஜெ பித்து

உ ருவேற வேஜெ பித்து வொருகோடி யோம சித்தி
யுடனாக ஆக மத்து .... கந்துபேணி

உ ணர்வாசை யாரி டத்து மருவாது வோரெழுத்தை
யொழியாது வூதை விட்டி .... ருந்துநாளும்

தரியாத போத கத்தர் குருவாவ ரோரொ ருத்தர்
தருவார்கள் ஞான வித்தை .... தஞ்சமாமோ

தழலாடி வீதி வட்ட மொளிபோத ஞான சித்தி
தருமாகி லாகு மத்தை .... கண்டிலேனே

குருநாடி ராச ரிக்கர் துரியோத னாதி வர்க்க
குடிமாள மாய விட்டு .... குந்திபாலர்

குலையாமல் நீதி கட்டி யெழுபாரை யாள விட்ட
குறளாக னூறில் நெட்டை .... கொண்டஆதி

மருகா புராரி சித்தன் மகனே விராலி சித்ர
மலைமே லுலாவு சித்த .... அங்கைவேலா

மதுரா புரேசர் மெய்க்க அரசாளு மாறன் வெப்பு
வளைகூனை யேநி மிர்த்த .... தம்பிரானே.

சொற்பிரிவு

உரு ஏறவே ஜெபித்து ஒருகோடி யோம சித்தி
உடனாக ஆகமத்து உகந்து பேணி

உ ணர்வு ஆசை யாரிடத்து மருவாது ஓரெழுத்தை
ஒழியாது ஊதை விட்டிருந்து நாளும்

தரியாத போத கத்தர் குருவாவர் ஓர் ஒருத்தர்
தருவார்கள் ஞான வித்தை தஞ்சமாமோ

தழலாடி வீதி வட்டம் ஒளி போத ஞான சித்தி
தருமாகில் ஆகும் அத்தை கண்டிலேனே

குருநாடு ராசரிக்கர் துரியோதனாதி வர்க்க
குடிமாள மாய விட்டு குந்திபாலர்

குலையாமல் நீதி கட்டி எழுபாரை ஆள விட்ட
குறளாகன் ஊறில் நெட்டை கொண்ட ஆதி

மருகா புராரி சித்தன் மகனே விராலி சித்ர
மலை மேல் உலாவு சித்த அங்கை வேலா

மதுராபுரேசர் மெய்க்க அரசாளு மாறன் வெப்பு
வளை கூனையே நிமிர்த்த தம்பிரானே.

பதவுரை

உரு ஏறவே = உருப் போடும் எண்ணிக்கையை மிகவும் அதிகமாக்கி (நெட்டுருப் போட்டு),

ஜெபித்து = உபதேசம் பெற்ற மூல மந்திரத்தை ஜெபம் செய்து, (ஜெப எண்ணிக்கை ஏற ஏற சஞ்சித வினைகள் ஜெபத் தீயால் எரிபட்டுப் போகும் என்பார்கள். மேலும் மந்திரத்தின் மூல தெய்வம் நேரில் காட்சி கொடுக்கும். கோடிக் கணக்கான ராம மந்திரத்தை ஜெபித்த தியாகையருக்கு ஸ்ரீராம தரிசனம் கிட்டிய வரலாறு அனைவரும் அறிந்ததே.)

ஒருகோடி யோம சித்தி = சிவாக்னியில் ஒப்பற்ற கோடிக் கணக்கான சிவ வேள்வியால் வரும் சித்தி, அற்றாங்கு எரி ஓம்பி, ஓமத்தீ வழுவார்கள் கூர் சிவ லோகத்தே தரு மங்கை பாலா, பூ மென் கோதை உமை ஒரு பாகனை ஓமம் செய்து உணர்மின்காள் - அப்பர்)

உடனாக = கைவரப் பெற்று,

ஆகமத்து உகந்து பேணி = சிவாகமத்தை விருப்புடன் ஓதி,

உணர்வு ஆசை யாரிடத்து மருவாது = சுட்டறிவையும் பற்றையும் யாரிடத்தும் வைக்காமல்,

ஓரெழுத்தை ஒழியாது = பிரணவ மந்திரத்தை விடாது தியானித்துக் கொண்டு,

ஊதை விட்டிருந்து = யோக முறைப்படி பிராணவாயுவை உள்ளடக்கி (பிராணவாயு ஒடுங்குவதால் ஐம்புலங்களின் சஞ்சாரமும் ஒடுங்கும். மிக ஓடும் சுவாசமது தான் ஐம்புலனோடும் சுபானமுறு ஞானத் தபோதனர்கள் - கடாவினிடை திருப்புகழ்)

நாளும் தரியாத போத கத்தர் = இந்த முறைகளை தினந்தோறும் கடைபிடிக்காத ஞானம் அற்றவர்கள்

குருவாவர் ஓர் ஒருத்தர் = இப்படிப்பட்டவர் குருவிற்கு வேண்டிய தகுதி இல்லாதவர்கள் ஞானம் புகட்ட வருவார்கள்

தருவார்கள் ஞான வித்தை தஞ்சமாமோ = அந்த ஞான உபதேசம் நமக்கு பற்றுக் கோடு ஆகுமா?

தழலாடி வீதி = நெற்றிப் புருவ மத்தியில் இடைஉறா நாட்டம் வைப்பதால் கிடைக்கும்,

வட்டம் = லலாட சக்ரத்தில்,

ஒளி போத ஞான சித்தி = ஒளி வீசும் ஞான மெய்யறிவு மயமான சித்தியை,

தருமாகில் ஆகும் அத்தை கண்டிலேனே = கொடுக்கும் என்றால் அப்பேர்ப்பட்ட பேற்றை நான் அடையவில்லையே.

குருநாடு = சந்திர வம்சத்தில் பிறந்த குரு என்பவரால் அரசாளப்பட்டு குரு நாடு எனப் பேர் பெற்ற தேசத்தை,

ராசரிக்கர் = அரசாட்சி செய்த,

துரியோதனாதி வர்க்க குடிமாள = துரியோதனன் முதலியோரின் வாழ்வு அழியும் படி,

மாய விட்டு = பகலை இரவாக்கியது, விதுரன் வில்லை ஒடிக்கச் செய்தது, பீஷ்மர் துரோணர்களை தந்திரமாக மாள்வித்தது போன்ற மாயச் செயல்களை புரிந்து,

குந்திபாலர் குலையாமல் நீதி கட்டி எழுபாரை ஆள விட்ட = குந்தி தேவியின் புத்திரர்களான தர்மபுத்திரர்களான பஞ்ச பாண்டவர்கள் அழிவடையாமல் காத்து தருமம் நிலை பெறுமாறு ஏழு உலகங்களை அவர்கள் அரசாளும் படி செய்தவரும்,

குறளாகன் = மாபலியை அடக்க வாமன வடிவில் வந்தவனும்,

ஊறில் நெட்டை கொண்ட ஆதி மருகா = குற்றமில்லாத திரிவிக்ரம அவதாரம் எடுத்த ஆதி மூர்த்தியாம் திருமாலின் மருகனே,

புராரி சித்தன் மகனே = திரிபுரங்களுக்கு பகையாய் அவற்றை எரித்த சித்த மூர்த்தியின் மகனே, (மதுரையில் எல்லாம் வல்ல சித்தனாய் வந்தது யாவரும் அறிந்ததே. திரிபுரங்களை எரித்ததும் சித்து வேலை தானே)

மேல் உலாவு சித்த = அழகிய விராலி மலையில் உலாவுகின்ற சித்தரே (இங்கு அருணகிரியாருக்கு அஷ்ட மா சித்திகளை கொடுத்தார்),

அங்கை வேலா = அழகிய கையில் வோயுதத்தைத் தரித்தவனே விராலிசித்ரமலை

மதுராபுரேசர் மெய்க்க அரசாளு மாறன் வெப்பு வளைகூனையே நிமிர்த்த தம்பிரானே = மதுரை சொக்கநாதரின் சைவ சமயம் விளங்க அங்கு மன்னனாய் இருந்த பாண்டியரின் சுரநோயை நீக்கி அவனுடைய உள்ளக் கூனையும் உடல் கூனையும் சரியாக்கிய தம்பிரானே.

எதிரெதிர்

எதிரெதிர்கண் டோடி யாட்கள் களவதறிந் தாசை
பூட்டி
இடறிவிழும் பாழி காட்டு .... மடமாதர்

இறைவைகொளுங் கூவல் மூத்த கறையொழுகுந்
தாரை பார்க்கி
லிளமைகொடுங் காத லாற்றில் .... நிலையாத

அதிவிகடம் பீழ லாற்ற அழுகிவிழும் பீற லூத்தை
அடையுமிடஞ் சீலை தீற்று .... கருவாயில்

அருவிசலம் பாயு மோட்டை அடைவுகெடுந் தூரை
பாழ்த்த
அளறிலழுந் தாம லாட்கொ .... டருள்வாயே

விதுரனெடுந் த்ரோண மேற்று எதிர்பொருமம்
பாதியேற்றி
விரகினெழுந் தோய நூற்று .... வருமாள

விரவுஜெயன் காளி காட்டில் வருதருமன் தூத னீற்ற
விஜயனெடும் பாக தீர்த்தன் .... மருகோனே

மதியணையுஞ் சோலை யார்த்து மதிவளசந் தான
கோட்டின்
வழியருளின் பேறு காட்டி .... யவிராலி

மலைமருவும் பாதி யேற்றி கடிகமழ்சந் தான கோட்டில்
வழியருளின் பேறு காட்டு .... பெருமாளே.

சொற்பிரிவு

எதிர் எதிர் கண்டு ஓடி ஆட்கள் அளவு அறிந்து
ஆசை பூட்டி
இடறி விழும் பாழி காட்டு மடமாதர்

இறைவை கொளும் கூவல் மூத்த கறை ஒழுகும்
தாரை பார்க்கில்
இளமை கொடும் காதல் ஆற்றில் நிலையாத

அதிவிகடம் பீழல் ஆற்ற அழுகி விழும் பீறல் ஊத்தை
அடையும் இடம் சீலை தீற்று கருவாயில்

அருவி சலம் பாயும் ஓட்டை அடைவு கெடும் தூரை
பாழ்த்த
அளறில் அழுந்தாமல் ஆட்கொடு அருள்வாயே

விதுரன் நெடும் த்ரோணம் ஏற்று எதிர்பொரும்
அம்புஆதி ஏற்றி
விரகின் எழுந்து ஓய நூற்று வரும் மாள

விரவு ஜெயன் காளி காட்டில் வரு தருமன் தூதன் நீற்ற
விஜயன் நெடும் பாக தீர்த்தன் மருகோனே

மதி அணையும் சோலை ஆர்த்து மதி வள சந்தான
கோட்டின்
வழி அருளின் பேறு காட்டிய விராலி

மலை மருவும் பாதி ஏற்றி கடி கமழ் சந்தான கோட்டில்
வழி அருள் இன்பேறு காட்டு பெருமாளே

பதவுரை

எதிர் எதிர்கண்டு ஓடி ஆட்கள் அளவு அறிந்து ஆசை பூட்டி = தம்மை நோக்கி எதிரே வருபவர்களைப் பார்த்து ஓடிச் சென்று ஆடவர்களின் பொருள் நிலையை திருட்டுத் தனமாக தெரிந்து கொண்டு அவருக்கு ஆசையை ஊட்டி,

இடறி விழும் பாழி காட்டு மடமாதர் = அவர்களின் வாழ்க்கைப் பாதையில் தடுமாறி விழுந்து துன்புறும் படி பாழும் கிணற்றைக் காட்டும் பொது மகளிரின்,

இறைவை கொளும் கூவல், மூத்த கறை ஒழுகும் தாரை = இறைக்கின்ற கூடை உடைய கிணறு, பழைய அழுக்கு நீர் (சூதக நீர்) சொட்டும் ஓட்டை,

பார்க்கில் இளமை கொடும் காதல் ஆற்றில் நிலையாத அதிவிகடம் பீழல் = யோசித்துப் பார்த்தால் இளம் பருவத்துக் காதல் நதியில் நிலையற்ற பயங்கரமாக துன்பம் தரும் இடம்,

ஆற்ற அழுகி விழும் பீறல் = மிகவும் அழுகிப் போகும் கிழிபட்ட இடம்,

ஊத்தை அடையும் இடம், சீலை தீற்று கருவாயில் = கசுமாலம் சேரும் இடம், சேலையால் மூடப்பட்ட கரு வெளிவரும் துவார வாயில்,

அருவி சலம் பாயும் ஓட்டை, அடைவு கெடும் தூரை = அருவி போல் சிறு நீர் வழியும் துவாரம், தகுதியற்ற அடிப்பாகம்,

பாழ்த்த அளறில் அழுந்தாமல் ஆட்கொடு அருள்வாயே = இப்பேர்ப்பட்டகேடுகெட்டயோனியாகிய சேற்றில், நான் விழுந்து மூழ்காமல் ஆட்கொள வேண்டும்.

விதுரன் நெடும் த்ரோணம் ஏற்று எதிர் பொரும் அம்புஆதி ஏற்றி = விதுரன் தனது பெரிய வில்லை எடுத்து எதிர்த்து போர் புரிய அதன் பாணங்களை நிரப்பி,

விரகின் எழுந்து ஓய நூற்று வரும் மாள விரவு ஜெயன் = சமர் செய்யும் சாமர்த்தியம் இல்லாமல் நின்று போகவும், துரியோதனன் முதலான நூறு சகோதரர்களும் மடிய தந்திரம் செய்த வெற்றிக் கோமகன்,

காளி காட்டில் வரு தருமன் துதன் = துர்க்கையின் இடமாகிய இடும்பா வனத்தில் தரும புத்திரனுக்காக தூது போனவன், .

நீற்ற விஜயன், நெடும் பாக தீர்த்தன் மருகோனே = பாசுபதாஸ்திரம் அடைய வேண்டி உடல்முழுவதும் விபூதி தரித்து (தவம் செய்த) அர்ச்சுனனுக்கு சிறந்த தேர்பாகனான தூய மூர்த்தியாகிய கிருஷ்ணனின் மருகனே,

மதி அணையும் சோலை ஆர்த்து, அதி வள, சந்தான கோட்டின் வழி அருளின் பேறு காட்டிய = சந்திரன் வந்து தொடும் அளவிற்கு உயர்ந்த சோலைகள் நிரம்பிய, மிகுந்த வளப்பம் உடைய, (தெய்வத்தருக்கள் ஐந்தில் ஒன்றான) சந்தான விருட்சம் போல், தன்னை வணங்குபவர்களுக்கு வேண்டிய வரங்களை அருளும்,

விராலி மலை மருவும் பாதி ஏற்றி கடி கமழ் சந்தான கோட்டில் = விராலி மலையின் சேர்ந்து இருக்கும் பாதி தூரம் வரை வரச்செய்து தெய்வீக மணம் கமழும் சந்தான கோடு எனும் மலைப்பாறையில்,

வழி அருளின் பேறு காட்டு பெருமாளே = தம்மை அடைந்த அடியாருக்கு முத்தி மார்க்கத்திற்கு வழி காட்டும் பெருமையனே

இது அருணகிரியாரின் சுய அனுபவம் என ஊகிக்கலாம்

ஐந்து பூதமு

ஐந்து பூதமு மாறு சமயமு
மந்தர வேதபு ராண கலைகளும்
ஐம்ப தோர்வித மான லிபிகளும் .... வெகுரூப

அண்ட ராதிச ராச ரமுமுயர்
புண்ட ரீகனு மேக நிறவனும்
அந்தி போலுரு வானு நிலவொடு .... வெயில்காலும்

சந்த்ர சூரியர் தாமு மசபையும்
விந்து நாதமு மேக வடிவம
தன்சொ ரூபம தாக வுறைவது .... சிவயோகம்

தங்க ளாணவ மாயை கருமம
லங்கள் போயுப தேச குருபர
சம்ப்ர தாயமொ டேயு நெறியது .... பெறுவேனோ

வந்த தானவர் சேனை கெடிபுக
இந்த்ர லோகம்வி பூதர் குடிபுக
மண்டு பூதப சாசு பசிகெட .... மயிடாரி

வன்கண் வீரிபிடாரி ஹரஹர
சங்க ராஎன மேரு கிரிதலை
மண்டு தூளெழ வேலை யுருவிய .... வயலூரா

வெந்த நீறணி வேணி யிருடிகள்
பந்த பாசவி கார பரவச
வென்றி யானச மாதி முறுகுகல் .... முழைகூடும்

விண்டு மேல்மயி லாட இனியக
ளுண்டு காரளி பாட இதழிபொன்
விஞ்ச வீசுவி ராலி மலையுறை .... பெருமாளே.

சொற்பிரிவு

ஐந்து பூதமும் ஆறு சமயமு
மந்த்ர வேத புராண கலைகளும்
ஐம்பதோர்விதமான லிபிகளும் – வெகுரூப

அண்டர் ஆதி சராசரமும் உயர்
புண்டரீகனு மேக நிறவனும்
அந்தி போலுருவானு நிலவொடு – வெயில்காலும்

சந்த்ர சூரியர் தாமும் அசபையும்
விந்து நாதமும் ஏக வடிவம்
அதன்சொரூபம் அதாக வுறைவது – சிவயோகம்

தங்கள் ஆணவ மாயை கரும
மலங்கள் போய் உப தேச குருபர
சம்ப்ரதாயமொடு ஏயு நெறியது – பெறுவேனோ

வந்த தானவர் சேனை கெடிபுக
இந்த்ர லோகம் விபூதர் குடிபுக
மண்டு பூத பசாசு பசிகெட – மயிடாரி

வன்கண் வீரி பிடாரி ஹரஹர
சங்கராஎன மேரு கிரிதலை
மண்டு தூளெழ வேலை யுருவிய – வயலூரா

வெந்த நீறணி வேணி யிருடிகள்
பந்த பாச விகார பரவச
வென்றியான ச மாதி முறுகுகல் – முழைகூடும்

விண்டு மேல்மயி லாட இனியகள்
உண்டு காரளி பாட இதழிபொன்
விஞ்ச வீசு விராலி மலையுறை – பெருமாளே.

பதவுரை

ஐந்து பூதமும் = மண், நீர், தீ, காற்று, விண் எனும் பூதங்கள் ஐந்தும்,

ஆறு சமயமும் = சைவம், வைணவம், கணாபத்யம், கௌமாரம், சாத்தேயம், சௌரம் எனும் ஆறு சமயங்களும்,

மந்த்ர வேத புராண கலைகளும் = ஏழு கோடி மந்திரங்களும், வித்தையான ஞான புராணங்களும் பதினெட்டு புராணங்களும், 64 கலைகளும்

ஐம்பதோர் விதமான லிபிகளும் = 51 வகையான அட்சரங்களும்,

வெகு ரூப அண்டர் = அளவிலா உரு மாற்றங்களை உடைய வானவரும்,

அதி சர அசரமும் = யுகந்தோறும் வரும் இயங்கு பொருட்களும் அசையாப் பொருட்களும் ஆன ஆன்மாக்களும்,

உயர் புண்டரீகனும் = உயர்ந்த மேக நிறவனும் கருமுகில் வண்ண திருமாலும்,

அந்தி போல உருவானும் = மாலை வான் போன்று செந்நிறமுடைய உருத்திரனும்,

நிலவொடு வெயில் காலும் சந்த்ர சூரியர் தாமும் = நுட்ப நிலவுடன் வெப்ப வெயில் பரப்பும் மதியும் பருதியும்

சபையும் = உதடுகள் அசையாமல் ஜெபிக்கும் அஜபா மந்திரமும் விந்து நாதமும் ஒலியும் ஒளியுமான விந்து நாத தத்துவங்களான (யாவும்)

ஏக வடிவம் = ஒருங்கு இசைந்த பரம் பொருளின் திருமேனி

அதன்சொரூபமதாக உறைவது சிவயோகம் = அப்பரம் பொருளின் சொரூபமாக ஊடுருவி உறைப்பேறி சிறந்ததாக இருக்கும் சிவ யோகத்தை,

தங்கள் ஆணவ மாயை கருமம மலங்கள் போய் உப தேச குருபர சம்ப்ரதாயமொடு = தம்தம் ஆணவ, மாய, கருமம் ஆகிய நீங்கா மும் மலங்கள் நீங்கி உபதேசிக்கும் பரமாச்சார்ய அநுட்டான வழிமுறைகளுடன்

ஏயும் நெறியது பெறுவேனோ = பெரிதும் கலக்கும் அவ்வழியை அடியேன் பெறக் கடவேனோ

வந்த தானவர் சேனை கெடி புக = அளவின்றி வந்த அவுணர் படையினரின் ஆன்மா அஞ்சி பாதாளம் அடையவும்,

இந்த்ர லோகம் விபுதர் குடி புக = அறிவு மிக்க உயிர்கள் வானுலகம் எய்தி வாழவும்,

மண்டு பூத பசாசு பசி கெட = அடர்ந்துள்ள பூதங்களும் பிசாசுகளும் அவுணர் உடல்களை உண்டு பசியாறவும்

மயிடாரி வன்கண் வீரி பிடாரி ஹரஹர சங்கரா என = உக்ர எருமை முக அசுரனை அழித்த துர்க்கையும் கருமை உக்ர வீரியான காளியும், பீடைகளை அழிக்கும் பெருமித சக்தியும் (பிடாரி) அசுரர்களை அழித்தவரே (ஹர ஹர) தடுமாறுகின்ற உயிர்களின் இளைப்பைத் தவிர்ப்பவரே (சங்கரா) என்று துதிக்கவும்

மேரு கிரி தலை மண்டு தூள் எழ வேலை உருவிய வயலூரா = மேருகிரியின் உச்சி வரை பெரும் புழுதி பெறவும், (இவ்வளவும் ஏக காலத்தில் நேர ஞான சக்தியான வேலாயுதத்தை ஏவிய வயலூர் பெரும,

வெந்த நீறு அணி வேணி இருடிகள் = நீத்த மந்திராக்னியில் நீற்றிய புனித திருநீற்றினை பூசி மகத்தான ஜடையை உடைய மாபெரும் முனிவர்கள்,

பந்த பாச விகார பரவச = கட்டுப்படுத்தி விகாரப்படுத்தும் ஆசைப் பெருக்கில் அவசம் அடையும் சூழ்நிலையை

வென்றியான சமாதி முறுகு கல் முழை கூடும் = வெற்றி கொள்வதற்கான சமாதி கூடி இருக்கும் முதிர்ந்த கற்குகைகள் ஏராளமாக உள்ள,

விண்டு மேல் மயில் ஆட = மலை மேல் மயில்கள் அழகிய தோகை விரித்து ஆடவும்,

இனிய கள் உண்டு கார் அளி பாட = கரு வண்டுகள் மதுரமான தேனைப்பருகி பண் பாடவும்,

இதழி பொன் விஞ்ச வீசு விராலி மலை உறை பெருமாளே = கொன்றை மரங்கள் (பாட்டிற்கும் ஆடுதலுக்கும் பரிசளிப்பது போல) பொன்னிற இதழ்களை பெரிதும் பொழியும் விராலி மலையில் வீற்றிருந்து பேராட்சி செய்யும் பேரிறைவா!

குகஶ்ரீ இரசபதி அவர்கள் அருளிய விரிவுரை

தாற்றுக்கோல் தாங்கிய வேளாளர்களாலும், துலாக் கோல் கொண்ட வைசீயர்களாலும், செங்கோல் கொண்ட வேந்தர்களாலும், ஒற்றைக்கோல், முக்கோல் ஏந்திய அந்தணர்களாலும் நாட்டில் தர்மம் நடமாடும்.

வேளாளர், வைசியர்கள், வேந்தர்கள், அந்தணர்கள் இந்நால்வர் கோல் மூலம் நாட்டில் தர்மம் நடமாடியது. நேர்மை தவறினால் நாட்டில் மழை தடுமாறும். விளைவு குறையும் வளமை குன்றும் வறுமை வளரும். மாறுபட்டு மக்கள் மல்லாடுவர். ஒருவரை ஒருவர் ஏய்த்துப் பிழைப்பர். இதனால் உலகம் அல்லோல கல்லோலம் ஆகும். கோல்களால் விளைந்த குறை தவிர்க்க, விமலன் திருக்கரத்து வேல் வெளிப்படும். அக்கோல்களுக்கு இயல்பான அறிவு இல்லை. அவற்றை உடையவர்களால் மதிப்பு அடையும். வேலோ ஞான மயம். நித்திய, சத்திய, நிக்ரக, அனுக்ரக, தெய்வ மயம் அது. அதன் செயலால் பாவ இருள் பாதாளத்து மறையும். ஆகம புண்ணியம் உயர்ந்து வாழும். இது சுருதி சொல்லும் செய்தி.

தனு என்பவன் பெற்ற பிள்ளைகட்கு தானவர் என்று பெயர். இவர்கள் தன் பெயருக்கு ஏற்ப வெறும் தேகாபிமானிகள். மேற்சொன்ன நான்குகோலும் தவறப்பட்ட ஒருகாலத்தில் தொல்லை தரும் தானவர்களே எங்கும் தோன்றினர்.தாழ்ந்தோரை உயர்த்தினர். உயர்ந்தோரைத் தாழ்த்தினர். சிறந்த புலமைக்கு மக்கள் செவி கொடுத்திலர். கூத்தாடிகளே எங்கும் கும்மாளம் கொட்டினர். அவர்கள் வருகைக்குத்தான் எங்கும் வரவேற்பு. அவர்கள் வாக்கிற்குத் தான் செல்வாக்கு. ஆன்மீக உணர்வினர்களும் நுனிப்புல் மேய்ந்து நுடங்கி நடங்கினர். தருமம் இங்ஙனம் தலைகீழான செய்தியை அறிந்து, அறியாமை இருளை அகற்ற ஞான வேலை

நீ ஊடுருவ ஏவினை. அதன் தெரிசன ஆக்கத்தால், வந்த தானவர் சேனை கெடி புக இந்த்ர லோகம் விபுதர் குடிபுக நேர்ந்தது. (விபுதர் = விஷேச அறிவினர்). இதனால் தேவர்களுக்கு புலவர் என்ற பெயரும் உண்டு.

அவுண உடல்களை பூத பைசாசங்கள் தின்று தீர்த்தன. இனி அசுர நாற்றமே இல்லை. உலகில், என்ற நிலைமை எய்தியது. இந்த அற்புத நேரத்தில் போர்களத்தில் வீர சக்திகள் புகுந்தனர். இடர்படு பிறவியின் இளைப்பாற்றுவானை சங்கரா எனக் கூவி அழைத்துக் கும்பிட்டனர். இது தாய்க்குல அழைப்பு. சேய்க்குலமான நமக்கு ஒரு சமிக்ஞை. இவ்வளவு சேதியும் ஏக காலத்தில் விளைய செயல் செய்தனை. நன்செய் நிலங்கள் நல்வளம் நல்கின அதனால் வயலூர் எனும் பெயர் வாய்த்த பதியில் எழுந்தருளி இருக்கும் தெய்வமே, வேலை உருவிய வயலூரா என்று வாயார உம்மை வாழ்த்துவம்.

தாய், தந்தை, மக்கள், சுற்றம் யாவும் ஈஸ்வர லீலையின் பிம்பங்கள். இது தான் முழு உண்மை. இந்த எண்ணம் எழாதபடி கர்மம் கண்னை மறைத்தது. மாயை மனதை மயக்கியது. பாழும்இருளை ஆணவம் பரப்பியது. அவைகளின் சாகசங்களால் இவர்கள் ஆக்கையின் சுகத்திற்கு அமைந்தவர்கள் எனும் நினைப்பு எழுந்தது. இதனால் இடர்கள் யாவும் எழுந்தன. இனி இங்கு இருந்தால் அதோ கதி தான் என்று உணர்ந்த உத்தமர்கள் ஓடினர். எவரும் வராத இடம் தேடினர். புனித குகைகளில் புகுந்தனர். பூதி அளிக்கும் விபூதியைத் தரித்தனர். பந்த பாசத்தில் பரவசம் உண்டு. அது விகாரப் பரவசம் அதனால் உடல் பலவீனம், மனோ பலவீனம், அறிவு மெலியல், ஆத்ம சக்தி யாவும் அப்பரவச அனுபவம். வீணான அதை வெல்லும் வெற்றியே வெற்றி. அது

கருதியே அவர்கள் குகைக்குள் புகுந்தனர். அங்கு இருந்தே அவர்கள் தத்துவ லய சமாதி, விகர்ப்ப சமாதி, நிர்விகர்ப்ப சமாதி, சஞ்சார சமாதி, ஆரூட சமாதிகளை முறையே பயின்று முன்னேறினர். இறுதியில் மோன சமாதி கூடி முறுவலிக்கின்றனர். அந்த, வெந்த நீறணி வேணி இருடிகள் பந்த பாச விகார பரவச வென்றியான சமாதி கூடி இருக்கும் இவர்கள் தவமே இன்று வரை இவ்வுலகத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. அவர்கள் தவ ஒளி வெளி உலகில் வியாபித்து அஃறிணைக்கும் அளிக்கும். அவர்கள் தவமிருக்கும் குகைக்கு மேற்பட்ட மலை உச்சியில் மயில்கள் அழகிய தம் தோகைகளை விரித்து ஆடும். கருவண்டுகள் தேன் பருகிய களிப்பில் பண்களை ஆடலுக்குத் தக்கபடி பாடும். பாடல் ஆடல்கட்கு பரிசளிப்பது போல் பொன் இதழ்களை கொன்றை மரங்கள் பொழியும். இந்த இயற்கைக் காட்சியை எந்நூல்களும் ஓதும். அழகிய இந்த விராலிமலை மேல் நிலையாக எழுந்தருளி இருக்கும் எம் பெருமானே, வினயமோடு அடியேன் செய்யும் விண்ணப்பம் கேட்டருளும்.

இவ்வைந்து பூதக் கூட்டம் இவ்வுலகம். இங்கு ஆறு சமயங்கள், உம்மை ஆய்வு செய்கின்றன. நம, ஸ்வாஹா, ஸ்வதா, வசட்டு, வெளசட், பட், கும்பட்டு எனும் ஏழு வகை முடிவு கொண்ட மந்திரங்கள் உமது பெருமையையே நவில்கின்றன. பதினெட்டு புராணங்களும் உமது தடத்த சொரூப லட்சணங்களையே சொல்லுகின்றன. ஆதாரங்கள் ஆறிலும் அகரம் முதல் ஷகாரம் வரையிலான 51 அட்சரங்கள் உமது அனுபவ உறுப்பாகவே அமைந்துள்ளன. உதடு அசையாது ஒலிக்க உள்ள அஜபா எனும் ஹம்ச மந்திரம் சிவோக நுட்பத்தைச் சிந்திக்கத் தூண்டும். அமுத போகத்தை விண்ணில் அருந்து கின்றார் வானோர். அகில உலகிலும் அசையும் பொருட்களுக்கு அளவில்லை. அசையாப் பொருட்களும்

அடர்ந்து காண ஆவது இல்லை. வரையரை இன்றி அவை வளர்ந்திருக்கின்றன. பார் அனைத்தையும் பிரமன் படைக்கிறான். கருமுகில் வண்ணர் காக்கிறார். அந்தி நிறத்து உருத்திரர் இறப்பில் வரும் இளைப்பை ஆற்றுகின்றார்.

தட்ப ஒளி பரப்பி சந்திரன் வானில் தவழ்கிறான். வெப்ப ஒளியில் விரிந்து கதிரேசன் விளங்குகிறான். 95 - ம் தத்துவம் விந்து. இறுதித் தத்துவம் நாதம். அடே அப்பா! எண்ணிப் பார்க்க எவரால் இயலும்? இப்படி அகண்டாகாரமான யாவும் உமது சொரூபம் என்று உணருகின்ற போதே உள்ளம் குளிர்கின்றதே. ஏகமான அச்சொரூபத்தில் இணைந்து இருப்பது சிவயோகம். பேஷ், அந்நிலை எய்த முயலுவது தான் ஆத்ம தருமம். இந்நிலை எம்மால் படித்து எய்த இயலுவதா ?. எந்த மேடையில் இது குறித்து வாய் திறக்க இயலும் ?.

மும்மலம் அகன்ற முத்தர்கள் எங்கும் உளர். அவர்களை அறிய முடியாத அநியாயத்தை யாரிடம் சொல்லி ஆற்றுவது ? அந்த பரம்பரை உபதேச பரமாச்சார்யர்கள் காட்டும் சம்ப்ரதாய மார்க்கம் சாலச் சிறந்தது

குட்டிகளோடு கரடியை ஆற்று வெள்ளம் அடித்துச் செல்ல அவைகள் தம் ஆடும் குட்டியுமாம் என்று அறிவு மயங்கிய கோனார் குபுக்கென்று ஆற்றில் குதித்து தாவிச் சென்று அவைகளைத் தழுவினாராம். தக்க புணை கிடைத்தது என்று கரடியும் அவரைத் தழுவியது. ஒருவரை ஒருவர் பற்றாது இருந்தால் ஒருவேளை கரடியும் கரையில் ஒதுங்கி பிழைப்பதும் ஆகும். அங்ஙனம் இன்றி விடேன் விடேன் என்று தழுவிய கரடியும் பிழைக்கவில்லை. கோனாரும் இறந்து தொலைந்தார்.

மும்மல வெறியில் முதிர்ந்த குரவர்கள் பித்தர்கள் போல் பிதற்றித் திரியும் சீடர்களுக்கு காட்டும் உபதேசம் இவ்வரலாறு போல் தான் ஆகும்.

அங்ஙனம் இன்றி, மேற்சொன்ன சதாச்சாரியர்கள் தாள் மலர் சார்ந்து அவர்கள் புகட்டும் அனுபவ நெறியில் அடியேன் கலக்கும் பேறு என்று பெறுவேனோ?

கரதல முங்குறி

கரதல முங்குறி கொண்ட கண்டமும்
விரவியெ ழுந்துசு ருண்டு வண்டடர்
கனவிய கொண்டைகு லைந்த லைந்திட .... அதிபாரக்

களபசு கந்தமி குந்த கொங்கைக
ளிளகமு யங்கி மயங்கி யன்புசெய்
கனியித முண்டுது வண்டு பஞ்சணை .... மிசைவீழா

இரதம ருந்தியு றுங்க ருங்கயல்
பொருதுசி வந்துகு விந்தி டும்படி
யிதவிய வுந்தியெ னுந்த டந்தனி .... லுறமூழ்கி

இனியதொ ரின்பம்வி ளைந்த ளைந்துபொய்
வனிதையர் தங்கள்ம ருங்கி ணங்கிய
இளமை கிழம்படு முன்ப தம்பெற .... வுணர்வேனோ

பரத சிலம்புபு லம்பு மம்பத
வரிமுக எண்கினு டன்கு ரங்கணி
பணிவிடை சென்றுமு யன்ற குன்றணி
.... யிடையேபோய்ப்

பகடியி லங்கை கலங்க அம்பொனின்
மகுடசி ரந்தச முந்து ணிந்தெழு
படியுந டுங்கவி ழும்ப னம்பழ .... மெனவாகும்

மருதமு தைந்தமு குந்த னன்புறு
மருக்கு விந்தும லர்ந்த பங்கய
வயலியில் வம்பவிழ் சண்ப கம்பெரி .... யவிராலி

மலையில் விளங்கிய கந்த என்றுனை
மகிழ்வொடு வந்திசெய் மைந்த னென்றனை
வழிவழி யன்புசெய் தொண்டு கொண்டருள்
..... பெருமாளே.

சொற்பிரிவு

கரதலமும் குறி கொண்ட கண்டமும்
விரவி எழுந்து சுருண்டு வண்டு அடர்
கனவிய கொண்டை குலைந்து அலைந்திட அதிபார

களப சுகந்தம மிகுந்த கொங்கைகள்
இளக முயங்கி மயங்கி அன்பு செய்
கனி இதழ் உண்டு துவண்டு பஞ்சணை மிசை வீழா

இரதம் அருந்தி உறும் கரும் கயல்
பொருது சிவந்து குவிந்திடும் படி
இதவிய உந்தி எனும் தடந்தனில் உற மூழ்கி

இனியதொர் இன்பம் விளைந்து அளைந்து பொய்
வனிதையர் தங்கள் மருங்கு இணங்கிய
இளமை கிழம் படு முன் பதம்பெற உணர்வேனோ

பரத சிலம்பு புலம்பும் அம்பத,
வரி முக எண்கினுடன் குரங்கணி
பணிவிடை சென்று முயன்ற குன்று அணி
இடையே போய்ப்

பகடி இலங்கை கலங்க அம்பொனின்
மகுட சிரம் தசமும் துணிந்து எழு
படியும் நடுங்க விழும் பனம்பழம் என ஆகும்

மருதமும் உதைந்த முகுந்தன் அன்புறு
மருக, குவிந்து மலர்ந்த பங்கய
வயலியில் அம்பு, அவிழ் சண்பகம்பெரிய விராலி

மலையில் விளங்கிய கந்த, என்று உனை
மகிழ்வொடு வந்தி செய் மைந்தன் என் தனை
வழிவழி அன்புசெய் தொண்டு கொண்டு அருள்
பெருமாளே.

பதவுரை

கர தலமும் குறி கொண்ட கண்டமும் = கைகளும் நககுறி கொண்ட கழுத்தும்,

விரவி எழுந்து சுருண்டு வண்டு அடர் = கலந்து எழுந்து சுருள்களுடன் வண்டுகள் மொய்க்கின்றதுமான

கனவிய கொண்டை குலைந்து அலைந்திட = பெருமை மிக்க கூந்தல் குலைந்து போக,

அதிபாரக் களப சுகந்தம் மிகுந்த கொங்கைகள் இளக முயங்கி = மிகுத்து பருத்துள்ளதுமான வாசனைத் திரவியங்கள் அதிகம் வீசும் தன பாரங்கள் நெகிழ்ந்து சோரும் படி கலவி புரிந்து,

மயங்கி அன்புசெய் கனி இத ழ் உண்டு துவண்டு பஞ்சணை மிசை வீழா = சிற்றின்பத்தில் மயங்கி பிரியமாக அளிக்கப்பட்ட கொவ்வைகனி போன்ற இதழ் அமுதம் உண்டு சோர்வுடன் பஞ்சு மெத்தையில் விழுந்து,

இரதம் அருந்தி உறும் கரும் கயல் = வாய் இதழைப்பருகி பொருந்திய கரிய மீன் போன்ற கண்கள்

பொருது சிவந்து குவிந்திடும் படி = ஒன்று சேர சிவந்த நிறம் அடைந்து குவியும் படி

இதவிய உந்தி எனும் தடந்தனில் உற மூழ்கி = சுகம் தரும் தொப்புள் தடத்தில் பொருந்தி மூழ்கி,

இனியதொர் இன்பம் விளைந்த திளைந்து = இனிமையான இன்பம் உண்டாக அதில் திளைத்து அனுபவிக்கும்,

பொய் வனிதையர் தங்கள் மருங்கில் இணங்கிய = பொய் நிறைந்த வேசியர் இடத்தில் சேர்ந்திருந்த,

இளமைகிழம்படும்முன்பதம்பெறஉணர்வேனோ = என் இளம் பிராயம் முதுமை அடைவதற்கு முன்னால் உனது திருவடிகளை தியானம் செய்யும் பேறு எனக்குக் கிடைக்குமா ???

பரதசிலம்புபுலம்பும்அம்பத=பரதநாட்டியத்திற்கு அணியும் சிலம்புகள் இனிமையாக ஒலிக்கும் பாதங்களை உடையோனே (இனிய நாத சிலம்பு புலம்பிடும் அருண ஆடக கிண்கிணி தங்கிய அடி)

வரி முக எண்கினுடன் குரங்கணி = கோடுகள் நிறைந்த முகம் உடைய கரடிக் கூட்டமும் வானரச் சேனையும்

பணிவிடை சென்று முயன்ற குன்று அணியிடையே போய் = உதவி புரிய யுத்தத்திற்குச் சென்றுமுயற்சித்து குன்றுகளின் வரிசைக்கு நடுவே போய், பகடி இலங்கை கலங்க வெளி வேசக்காரனான இராவணனின் இலங்கை கலங்குமாறு

அம்பொனின் மகுடசிரம் தசமும் துணிந்து = அழகிய தங்கக் கிரீடம் தரித்த அவனுடைய 10 தலைகளும் அறுபட்டுப் போக,

எழுபடியும் நடுங்க விழும் பனம்பழம் என ஆகும் = (அதைக் கண்ட) ஏழு உலகங்களும் அச்சப்பட அந்தத் தலைகளை பனம் பழம் போல கீழே விழச் செய்தவரும்

மருதம் உதைந்த முகுந்தன் அன்புறு மருக = ஆயர் பாடியில் மருத மரங்களை ஒடிந்து விழச்செய்தவரும் ஆகிய திருமால் அன்பு கொள்ளும் மருகனே,

குவிந்து மலர்ந்த பங்கய வயலியில் = இரவில் குவிந்து பகலில் மலரும் தாமரைக் குளங்கள் நிரம்பிய வயலூரிலும்,

வம்பு அவிழ் சண்பகம் பெரிய விராலி மலையில் விளங்கிய கந்த என்று = மணம் வீசும் சண்பகம் நிறைந்த பெருமை வாய்ந்த விராலி மலையிலும் விளங்கும் கந்தனே என்று,

உனை மகிழ்வொடு வந்திசெய் மைந்தன் என் தனை = உன்னை உள்ளக் களிப்புடன் வழிபாடுகளைச் செய்யும் பிள்ளையாகிய அடியேனுடைய

வழிவழி அன்பு செய் தொண்டு கொண்டு அருள் பெருமாளே = வழி வழியாகப் புரியும் பக்தித்தொண்டை (பாடல் தொண்டை ஏன்று கொண்டு அருளும் பெருமையனே

கரிபுராரி காமாரி

கரிபுராரி காமாரி திரிபுராரி தீயாடி
கயிலை யாளி காபாலி .... கழையோனி

கரவு தாச னாசாரி பரசு பாணி பானாளி
கணமொ டாடி காயோகி .... சிவயோகி

பரம யோகி மாயோகி பரிய ராஜ டாசூடி
பகரொ ணாத மாஞானி .... பசுவேறி

பரத மாடி கானாடி பரவ யோதி காதீத
பரம ஞான வூர்பூத .... அருளாயோ

சுருதி யாடி தாதாவி வெருவி யோட மூதேவி
துரக கோப மீதோடி .... வடமேரு

சுழல வேலை தீமூள அழுத ளாவி வாய்பாறி
சுரதி னோடு சூர்மாள .... வுலகேழும்

திகிரி மாதி ராவார திகிரி சாய வேதாள
திரளி னோடு பாறோடு .... கழுகாடச்

செருவி னாடு வானீப கருணை மேரு வேபார
திருவி ராலி யூர்மேவு .... பெருமாளே.

சொற்பிரிவு

கரி புராரி, காமாரி, திரிபுராரி, தீயாடி
கயிலையாளி, காபாலி, கழையோனி

கர உதாசனாசாரி, பரசு பாணி, பானாளி
கணமொடு ஆடி, காயோகி, சிவயோகி

பரம யோகி, மாயோகி, பரி அரா ஜ டாசூடி,
பகர ஒணாத மாஞானி, பசு ஏறி

பரதம் ஆடி, கானாடி, பர வயோதிக அதீத,
பரம ஞான ஊர் பூத அருளாயோ

சுருதிஆடி தாதா வி வெருவி ஓட, மூதேவி
துரக, கோப மீதோடி வடமேரு

சுழல, வேலை தீமூள, அழுத ளாவி வாய்பாறி
சுரதினோடு சூர்மாள, உலகேழும்

திகிரி மாதிர ஆவார திகிரி சாய, வேதாள
திரளினோடு பாறோடு கழுகு ஆடச்

செருவின் நாடு வானீப, கருணை மேருவே, பார
திருவிராலியூர் மேவு பெருமாளே.

பதவுரை

கரி புராரி = கயமுகாசுரனின் உடலை அழித்தவர் (கரித்துகிலைப் பரமாகத் தரித்து - குலைத்து திருப்புகழ்)

திரிபுராரி = முப்புரங்களை அழித்தவர், காமாரி = மன்மதனின் பகைவர்,

தீயாடி = ஊழி காலத்து வடமுகாக்கினியை அபிடேகம் செய்து கொள்பவர் (சேம வடவாம்புய= விருத்தம்), (கார்த்திகைப் பவுர்ணமியில் சிவனுக்கு அக்னி அபிடேகம் செய்ய வேண்டும். அதற்கு

பதிலாக பனை ஓலையில் ஆவாஹனம் செய்து அதைக் கொளுத்துகிறார்கள். இதுவே சொக்கப்பனை எனப்படுகிறது.)

கயிலையாளி = கயிலாயத்தின் அதிபர்,

காபாலி = பிரம கபாலம் ஏந்தி இருப்பவர்,

கழையோனி = மூங்கிலின் அடியில் காட்சி கொடுப்பவர், (திருநெல் வேலி, திருவலங்காடு எனும் திருப்பாசூர் ஆகிய தலங்களில் மூங்கிலடி தரிசனம். - பொருணைத்துறைவாய் பிறவாக்கடவுள் வேய்வயிற்றில் பிறந்த தொன்னகர் திருவிளையாடல் புராணம்)

கர உதாசனாசாரி = கையில் தீயை வைத்திருப்பவர்,

பரசு பாணி = மழு எனும் ஆயுதம் பிடித்திருப்பவர்,

பான் ஆளி = நள்ளிருளில் ஆடுபவர் (நள்ளிருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே - திருவாசகம்),

கணமொடு ஆடி = பேய் கணங்களோடு ஊழி நடனம் செய்பவர்,

காயோகி = யோகத்தில் இருந்து அகிலத்தைக் காப்பாற்றுபவர்,

சிவயோகி = சிவ யோகி

பரம யோகி = சிறந்த யோகி (நான்மறை பாடும் பரம யோகி = கல்லில் தேவாரம்)

மாயோகி = பெரிய யோகி,

பரி அரா ஜடா சூடி = பெரிய சர்ப்பத்தைச் சடையில் தரித்திருப்பவர்,

பகர ஒணாத மா ஞானி = சொலற்கரிய பெரிய ஞானி (ஞானத்திரளாய் நின்ற பிரான்),

பசு ஏறி = ரிஷப வாகனர் (பசு ஏறும் எங்கள் பரமன் -சம்பந்தர் தேவாரம்)

பரதம் ஆடி = பரதக் கூத்து ஆடுபவர் (பரதத்தை அடக்கி நடிப்பவர் புருவத்தை திருப்புகழ்),

கானாடி = காற்றில் ஆடுபவர் (காடு பேணி நின்றாடும் மருதர் - தேவாரம்)

பர வயோதிக அதீத = மேலானவரும் மூப்பைக் கடந்தவருமாகிய சிவ பெருமானின்

புத அருளாயோ = ஞான பீடமாகிய சிவ வோகத்தில் நான் புகும் படி அருள் புரியவேண்டும். (சிவலோகத்தின் சாவி முருகனிடமே உள்ளது என்பார் கந்தர் அந்தாதியில் - திறவா அனக புரி வாசல் நீக்க -)

சுருதி ஆடி தாதா = வேதங்களை நன்றாகப் பயின்ற பிரமன், வெருவி மிகுந்த அச்சத்துடன் ஓடவும்,

மூதேவி துரக = மூத்தாள் அகன்று போக, (இங்கு ஜேஷ்டா தேவியைக் குறிப்பிட்டிருப்பது கவனத்திற்குரியது. ஒரு பலனைக்கருதித்தான் அருணகிரியார் இப்பாடலைப் பாடி இருக்கவேண்டும். வறுமை நீங்க ஸ்ரீசுக்தம் பாராயணம் செய்வது வழக்கம். அதில் - அலக்ஷ்மி மே நஷ்டதாம்-இதன் பொருள் ஜேஷ்டா தேவி நீங்கட்டும். இந்தத் திருப்புகழில் இதே மந்திரம் வருகிறது)

கோப மீதோடி = மிகுந்த கோபத்துடன்

வடமேரு சுழல = வட திசையில் உள்ள மேரு மலை சுழன்று கலங்கவும்,

வேலை தீமூள = கடல் தீப்பற்றி எரிய, அழுது அளாவி வாய்பாறி சுரதினோடு சூர் மாள= அழுது வாயே கிழியும் படி பெரும் சப்தத்துடன் சூரபத்மன் இறக்கவும்,

உலகேழும் திகிரி மாதிர ஆவார திகிரி சாய = ஏழு உலகங்களும் வட்ட வடிவமுள்ளதும் திசைகளை மறைக்கின்றதுமான சக்ரவாளகிரி சாய்ந்து போக,

வேதாள திரளினோடு பாறோடு கழுகு ஆட = பேய்க் கூட்டங்களுடன் பருந்துகளும் கழுகுகளும் ஆட,

செருவின் நாடு வான் நீப கருணை மேருவே = போரை நாடிச் சென்ற தெய்வீக கடப்ப மாலை அணிந்துள்ள கருணை மேருவே,

பார திருவிராலியூர் மேவு பெருமாளே = மேன்மை பொருந்திய விராலி மலை ஊரிலிருக்கும் பெருமாளே

காமாத்திர மாகி

காமாத்திர மாகி யிளைஞர்கள்
வாழ்நாட்கொடு போகி யழகிய
காதாட்டிய பார இருகுழை .... யளவோடிக்

கார்போற்றவ ழோதி நிழல்தனி
லார்வாட்கடை யீடு கனகொடு
காலேற்றுவை வேலின் முனைகடை .... யமதூதர்

ஏமாப்பற மோக வியல்செய்து
நீலோற்பல ஆசில் மலருட
னேராட்டவி நோத மிடும்விழி .... மடவார்பால்

ஏகாப்பழி பூணு மருளற
நீதோற்றிமு னாளு மடிமையை
யீடேற்றுத லாலுன் வலிமையை .... மறவேனே

சீமாட்டியு மாய திரிபுரை
காலாக்கினி கோப பயிரவி
சீலோத்தமி நீலி சுரதிரி .... புவநேசை

சீகார்த்திகை யாய அறுவகை
மாதாக்கள்கு மார னெனவெகு
சீராட்டொடு பேண வடதிசை .... கயிலாசக்

கோமாற்குப தேச முபநிட
வேதார்த்தமெய்ஞ் ஞான நெறியருள்
கோதாட்டி ஸ்வாமி யெனவரு .... மிளையோனே

கோடாச்சிவ பூஜை பவுருஷ
மாறாக்கொடை நாளு மருவிய
கோனாட்டுவி ராலி மலையுறை .... பெருமாளே.

சொற்பிரிவு

காம அத்திரமாகி இளைஞர்கள்
வாழ் நாள் கொடு போகி அழகிய
காது ஆட்டிய பார இரு குழை அளவாடிக்

கார் போல தவழ் ஓதி நிழல்தனில்
ஆர் வாள் கடை ஈடு கன கொடு
கால் ஏற்று வை வேலின் முனை கடை எமதூதர்

ஏமாப்பற மோக இயல் செய்து
நீலோற்பல ஆசில் மலருடன்
நேர் ஆட்ட விநோதம் இடும்விழி மடவார் பால்

ஏகாப்பழி பூணும் மருளற
நீ தோற்றி முனாளும் அடிமையை
ஈடேற்றுதலால் உன் வலிமையை மறவேனே

சீமாட்டியுமாய திரிபுரை
கால அக்கினி கோப பயிரவி
சீலோத்தமி நீலி சுரதிரி புவநேசை

சீகார்த்திகையாய அறுவகை
மாதாக்கள் குமாரன் என வெகு
சீராட்டொடு பேண வட திசை கயிலாசக்

கோமாற்கு உபதேசம் உபநிட
வேதார்த்த மெய்ஞ் ஞான நெறி அருள்
கோதாட்டிய ஸ்வாமி என வரும் இளையோனே

கோடாச்சிவ பூஜை பவுருஷ
மாறாக்கொடை நாளும் மருவிய
கோனாட்டு விராலி மலை உறை பெருமாளே.

பதவுரை

காம அத்திரமாகி இளைஞர்கள் = மன்மத பாணம் போல இளைஞர்களின்,

வாழ்நாள் கொடு போகி = உயிரைப் பறித்துப் போய்

அழகிய காதாட்டிய பார இரு குழை அளவு ஓடி = அழகிய காதுகளில் ஆடுகின்ற கனத்த இரு குண்டலங்கள் வரை பாய்ந்து சென்று,

கார் போல் தவழ் ஓதி நிழல்தனில் = மேகம் போல் தவழ்ந்து விளங்கும் கூந்தலின் நிழலில்,

ஆர் வாள் கடை ஈடு கனகொடு = நிறைந்து நின்று வாள் முனை போல ஈடு கனம் கொண்டு

கால் ஏற்று வை வேலின் முனை கடை = சண்ட வாயு போல கூரிய வேலின் நுனி போன்று,

எம தூதர் ஏமாப்பற மோக இயல் செய்து = எம தூதர்களும் (இந்த குணத்தைப் பார்த்து) நாம் எந்த மூலைக்கு என இறுமாப்பை இழக்கவும், காமத்தை ஊட்டவும்,

நீலோற்பல ஆசில் மலருடன் நேர் = குற்றமற்ற நீலோற்பல மலருடன் ஒப்பானதாய்,

ஆட்ட விநோதமிடும் விழி மடவார் பால் = பல கூத்து வேடிக்கைகளைச் செய்யும் கண்களை உடைய பொது மாதர்களின் பால் (செல்வதால்),

ஏகாப்பழி பூணும் மருள் அற = நீங்காத அவலச் சொல்லுக்கு ஆளாகும் மயக்கம் நீங்க,

நீ தோற்றி முனாள் அடிமையை = நீ அடியேன் முன் தரிசனம் கொடுத்து பழைய இந்த அடிமையை

ஈடேற்றுதலால் உன் வலிமையை மறவேனே = கரை ஏற்றினதால் நின் அருள் பலத்தை மறக்க மாட்டேன்.

சீமாட்டியுமாய திரிபுரை = பெருமாட்டியுமாகிய திரிபுரை,

கால அக்கினி கோபப் பயிரவி = யுகாந்த தீ போல் கோபமுடைய பைரவி,

சீலோத்தமி = ஒப்பில்லாத ஒழுக்கமுடையவள்,

நீலி சுரதிரி புவநேசை = நீல நிறமுடையவள், மண், அந்தரிசம், சொர்க்கம் ஆகிய மூன்று புவனங்களுக்கும் தலைவி,

சீகார்த்திகை ஆய அறு வகை மாதாக்கள் = ஸ்ரீ கார்த்திகைப் பெண்களான அறுவரும்,

குமாரன் என வெகு சீராட்டொடு பேண = நம் குழந்தை என செல்லத்துடன் உன்னைச் சிறப்பாக பாராட்டி வளர்க்க,

கயிலாசக் கோமாற்கு உபதேசமும் வடதிசை = வடக்கில் உள்ள கயிலை மலையில் வீற்றிருக்கும் பரமேஸ்வரனுக்கு உபதேசமாக,

உபநிட வேதார்த்தம் மெய்ஞ் ஞான நெறி அருள் = உபநிடதங்கள், நால் வேதங்கள் இவைகளின்

உட்பொருளான மெய்ஞான மார்க்கத்தை அருளி விளங்க வைத்து,

கோதாட்டிய ஸ்வாமி என வரும் இளையோனே = அறியாமை இருளைப் போக்கிய குருநாதன் என்று புகழ் பெற்ற இளங்குமரனே,

கோடாச் சிவ பூஜை பவுருஷ மாறாக்கொடை நாளும் மருவிய = சாஸ்திர முறை தவறாத சிவபூஜையும், ஆண்மையும், என்றும் இல்லை என மறுக்காது வாரி வழங்கும் கொடையும் எப்போதும் விளங்கும்,

கோன் நாட்டு விராலி மலை உறை பெருமாளே = சான்றோர் வாழும் விராலி மலையில் வீற்றிருக்கும் பெருமாளே

கொடாதவனை

கொடாதவனை யேபு கழ்ந்து குபேரனென வேமொ
ழிந்து
குலாவியவ மேதி ரிந்து .... புவிமீதே

எடாதசுமை யேசு மந்து எணாதகலி யால்மெ லிந்து
எலாவறுமை தீர அன்று .... னருள்பேணேன்

சுடாததன மான கொங்கை களாலிதய மேம யங்கி
சுகாதரம தாயொ ழுங்கி .... லொழுகாமல்

கெடாததவ மேம றைந்து கிலேசமது வேமி குந்து
கிலாதவுட லாவி நொந்து .... மடியாமுன்

தொடாய்மறலி யேநி யென்ற சொலாகியது னாவ
ருங்கொல்
சொலேழுலக மீனு மம்பை .... யருள்பாலா

நடாதசுழி மூல விந்து நளாவிவிளை ஞான நம்ப
நபோமணி சமான துங்க .... வடிவேலா

படாதகுளிர் சோலை யண்ட மளாவியுயர் வாய்வ
ளர்ந்து
பசேலெனவு மேத ழைந்து .... தினமேதான்

விடாதுமழை மாரி சிந்த அநேகமலர் வாவி பொங்கு
விராலிமலை மீது கந்த .... பெருமாளே.

சொற்பிரிவு

கொடாதவனையே புகழ்ந்து குபேரன் எனவே
மொழிந்து
குலாவி அவமே திரிந்து புவிமீதே

எடாத சுமையே சுமந்து எணாத கலியால் மெலிந்து
எலா வறுமை தீர அன்று உன் அருள்பேணேன்

சுடாத தனமான கொங்கைகளால் இதயமே மயங்கி
சுகாதரமதாய் ஒழுங்கில் ஒழுகாமல்

கெடாத தவமே மறைந்து கிலேசம் அதுவே மிகுந்து
கிலாத உடல் ஆவி நொந்து மடியா முன்

தொடாய் மறலியே நி என்ற சொல் ஆகி அது உன்
நா வரும் கொல்
சொல் ஏழு உலகம் ஈனும் அம்பை அருள்பாலா

நடாத சுழி மூல விந்து நள் ஆவி விளை ஞான நம்ப
நபோமணி சமான துங்க வடி வேலா

படாத குளிர் சோலை அண்டம் அளாவி
உயர்வாய வளர்ந்து
பசேல் எனவுமே தழைந்து தினமே தான்

விடாது மழை மாரி சிந்த அநேக மலர் வாவி
பொங்கு
விராலிமலை மீது உகந்த பெருமாளே.

பதவுரை

ஏழு உலக மீனும் அம்பை அருள்பாலா = உலகம் ஏழையும் ஈன்று உதவி அருளிய உமையாள் பெற்ற செல்வமே,

நடாது = (இயற்கையாகவே அன்றி எவரும் நட்டு வைக்காதது எனப் பெயர் பெறும்,

சுழி = மேலிருக்கும் சுழி முனை,

மூலம் = கீழிருக்கும் மூலாதாரம்,

விந்து நள் = (மேலிரண்டின் நடுவில் இருக்கும்) ஒளி மயமான ஒரு சக்தி இவைகளின் நடுவில்,

ஆவி விளை ஞான நம்ப = ஆதி நல்ல ஆவி போல் எழுந்து நம்பி சரணடையத் தக்க நாதனே

நபோமணி சமான துங்க வடிவேலா = விண் மணி எனும் சூரியனுக்கு ஒப்பாக பிரகாசிக்கும் வித்தக ஞான வேல் இறைவா, (நவம் = ஆகாயம், மணி - சூரியன், துங்க = தூய)

படாத குளிர் சோலை அண்டம் அளாவி உயர்வாய் வளர்ந்து = என்றும் தளராத தண்மை பொழில்கள் வானம் அளாவி உயர்ந்து வளர்ந்து, (படாத = பட்டுப் போகாத (வாடாது வெயில் உள் நுழையாத அடர்ந்த சோலை என்றும் பொருள் கொள்ளலாம்.)

பசேல் எனவுமே தழைந்து = எங்கும் பசுமை எனுமாறு தழைந்து

தினமே தான் விடாது மழை மாரி சிந்த அநேக மலர் வாவி பொங்கு = ஒவ்வொரு நாளும் ஓயாது மேகங்கள் புனித மழை தூவல் புரிய, அளவில்லாத நீர் பூக்கள் நீர் ஓடைகளில் நிரம்பி மலரும்,

விராலி மலை மீது உகந்த பெருமாளே = விராலி மலை மேல் விரும்பி இருக்கும் பெருமிய இறைவா,

கொடாதவனையே புகழ்ந்து = புனிதக் கொடை அருமையை புரிந்து கொள்ளாதவனை பலப்பட புகழ்ந்து,

குபேரன் எனவே மொழிந்து = (நீ) குபேரனது அம்சமே தான் என்று வலியுறுத்திக் கூறி, குலாவி அவமே திரிந்து உலோபிகளான அவர்களுடனே உறவாடி,

புவிமீதே எடாத சுமையே சுமந்து = உலகில் ஒரு பயனும் காணாது உழன்று,

எணாத கலியால் மெலிந்து = எண்ணத் தகாத மிடுக்குடைய இடர்களால் உடல் இளைத்து,

எலா வறுமை தீர அன்று உன் அருள் பேணேன் = அவைகளால் விளைந்த துன்பம் வறுமைகள் யாவும் தொலைய பல அவதிகள் பட்ட அந்த நாளில் தூய உனது திருவருளை எண்ணி துதித்திலன்,

சுடாத தனமான கொங்கைகளால் இதயமே மயங்கி = உருக்கி வார்க்காத பசும் பொன் போன்ற மாதர்களின் குயங்களில் மனம் மயங்கி

சுக ஆதரமதாய் ஒழுங்கில் ஒழுகாமல் = சுகத்திற்கு ஆதாரமதான நலம் சிறந்த வழியில் நடவாமல்,

கெடாத தவமே மறைந்து கிலேசமதுவே மிகுந்து = அழிவற்ற மாபெரும் தவ நெறியையே (மனத்திற்கு புலனாகாமல் மறைந்து போய் பெரும் துக்கமே வர வர பெருகி,

கிலாத உடல் ஆவி நொந்து மடியா முன் = உரிய வன்மையை இழந்த உடம்பில் நலமுற இருந்த பிராணன் நலிந்து எளியேன் அதன் வழி இறந்து படும் முன்,

மறலியே நி தொடாய் என்ற சொல் ஆகி = கொடிய எம தூதா, நீ இவனைத் தொடாதே, என ஒரு மொழி உருவாகி,

அது உன் நா வரும் கொல் சொல் =அம்மொழி உமது உத்தம நாவில் இருந்து உதயமாகுமா? அருள்க ஐயா என்ற படி

விளக்கவுரை

கோயில் கோபுரம் போல்வது தேகம். ஆதாரம் பலவற்றின் மேல் கோபுரம் அமைகிறது. அது போல ஆதாரங்கள் ஆறு, அந்த உடம்பிற்கு ஆதாரங்களாய் இருக்கின்றன. பரமன் கோயில் ஆதாரங்களை பார்த்து அறியலாம். படித்தும் தெரிந்து கொள்ளலாம். ஆக்கையில் உள்ள ஆதாரங்களை உமை குமரா, நீ உணர்த்தினால் தான் எங்களால் உணர இயலும்.

முதல் ஆதாரம் மூலாதாரம், அதன் மேல் சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுக்தி, விசுக்தியின் மேல் இடம் ஆக்ஞை. ஆக்ஞையின் நிலமே சுழுமுனை. பயனான நாடிகள் பத்து. அவைகளில் ஒன்று சுழுமுனை. உடம்பில் உள்ள ஆதாரங்கள் தோறும் ஒளிமயமான விந்து சக்தி விளங்கி புகுந்து

விளையாடுகிறாள். இதனால் ஆறு ஆதாரங்களும் ஏகமான ஜோதிமயம். எந்தனுள் ஏக செஞ்சுடராகி என் கண்ணில் ஆடும் தழல் வேணி எந்தையர் தேடும் அன்பர் சகாய எங்கள் சுவாமி அருள் பாலா - என விந்ததினுறி திருப்புகழில் முன்னம் இதனை எண்ணியுளம்.

நலம் தரும் ஆதாரங்களை நட்டு வைத்தவர்கள் நாங்கள் அல்ல. அடியில் இருக்கும் மூல நிலம் உச்சியில் இருக்கும் சுழுமுனை இடையில் இருக்கும் விளக்கொளி சக்தி மூன்றும் தூய ஒளி வெள்ளைத் தம்பம் போல் தோன்றுகின்றன. ஆயினும் அவைகள் எங்கள் முயற்சியால் ஆனவை அல்ல. உண்மையில் அவைகள் ஈஸ்வர பிரசாதமான இடங்கள் என்று நீர் அருளோடு அறிவிக்க அறிந்துளம். - ஆவி சாவி ஆகாமல் நீ சற்று அருள்வாயே - என்று ஓதும் எங்களை உய்விக்க மேல் நிலை சுழுமுனை கீழ் மேல் ஆதாரங்கள் மேலும் கீழும் ஆன உயர்ந்த விந்து ஒளிகளின் நடுவில் ஊடுறுவி ஆன்ம இயற்கை அறிவால் அறியவொண்ணாதபடி ஏட்டுக் கல்வியின் செயற்கை அறிவிற்கு எட்டாதபடி அதிநுட்ப ஆவியாய் ஆடல் புரிகின்றீர்.

இம்மையை வெறுத்து, மறுமையை மறுத்து, உம்மில் ஒன்ற, அழுது கதறும் ஆன்மாக்களை அறிந்து அருளும் முதன்மை ஞான மூர்த்தி நீர். அவர்கள் நம்பி இருக்கும் நம்பர் நீர். அதனால் தான், நடாத சுழி மூல விந்து நள் ஆவி விளை ஞான நம்ப - என்று ஆவலித்து உம்மை அழைக்கிறோம். (நள் = நடு இடம்)

விண்ணில் ஒரு மணி விளங்குகிறது. அது எல்லை இட்ட ஒளி மயம். தோன்றும் மறையும். அம்மணி ப்ரகிருதியின் அக்னி பிழம்பு. அதை சூரியன் என்று சொல்லுகிறது. மற்றொரு ஆகாயம் மதிப்பிற்கு உரியது. அது ஞான ஆகாயம். புனித சுழுமுனையில் உணர்வு

புகுந்து விந்து தத்துவ விளக்கொளி பிறந்து அவ்வழியில் ஆதாரங்களை அறிந்து இம்மூன்றிலும் ஊடுறுவிய மேன்மை ஆவியான உமது மெய்மையை அறிந்தோம். அருள் மயமான அந்த ஞான ஆகாயத்தை அறிவார் அறிவர். அதை அறியும் சமயம், - உததியிடை கடவுமர கதவருண குலதுரக உபலளித கனக ரத சதகோடி சூரியர்கள் உதயமென அதிக வித கலபசுக மயிலின்மிசை யுகமுடிவின் இருளகல ஒரு ஜோதி வீசும் நவோமணி ஆகி ஆதி பரம அருளை ப்ரதிபலிப்பவர் நீர். (நவம் = ஞான விண், மணி = மாணிக்கமான சூரியன்)

அகண்டாகாயமாய் இருந்தே அதி நுண்மையான உம்மிடத்தில் நிக்ரக அனுக்ரக நியதி சக்தி ஒன்று நிலைத்து இருக்கிறது. வடமொழியில் அதன் பெயர் ஞானாசக்தி. தென் மொழி வடிவேல் என பெயரிட்டு அதை மனனம் செய்து மகிழ்கிறது. ஜோதிமயமான உபலளித சமானமானது வளரும் ஒளிமயமான அவ்வடிவேல். அதனால் தான் சமான துங்க வடிவேலா என்று அன்பால் கூவி அழைக்கிறோம்.

குளு குளுவென்று குளிர்ந்து ஆதித்தன் வெயில் நுழையாதபடி அடர்ந்து பசுமையைப் பரப்பும் சோலைகள் வானம் அளாவி வளர்ந்து இருத்தலால் கால மழை, என்றும் காலங்களில் பெய்யும். இதனால் நீரோடைகள் எங்கும் நிரம்பின. அவைகளில் பூத்த நீர் பூக்கள் பயனான மணத்தைப் பரப்புகின்றன. கோட்டுப் பூ, கொடிப்பூ, நீலப்பூ இவைகள் மாபெரும் சோலைகளில் அந்த மணத்தைப் பரப்புகின்றன. இயற்கை சிறப்புடைய இந்த விராலி மலையை உவந்துளீர் நீர். அதனால் விராலி மலை மீது உகந்த பெருமாளே என வினயம் காட்டி விளிப்பம்.

எங்கும் மணம் எழுப்பும் விராலி மலை மீது இருக்க உவந்த நீவிரும், அருள் மணமானவர். அதனால் விராலி மலை மீது கந்தப் பெருமாளே என ஓதினாலும் உய்தி உண்டு (கந்தம் = மணம்).

அம்பை அருள் பாலா, வடி வேலா, விராலி மலை மீது கந்தப் பெருமாளே கேண்மையேன் விண்ணப்பம் கேட்டு அருளும். கொடுப்பாரும் இல்லை கொள்வாரும் இல்லை என்பது கடந்த கால வரலாறு. இன்றைய உலகில் தாழ்மையைத் தருகின்ற ஏழ்மை நிலை, அறியாமையால் ஈவாரை அறிந்திலன். ஈயாத செல்வன் தான் கண் முன் எதிர்படுகிறான். ஈவார் எனும் எண்ணத்தில் அவர்களை உயர்த்தி புகழ்கிறது புத்தி. வாய்மையை மறந்த வாய், நீயே குபேரன் என வாழ்த்துகின்றது. ஈவார் ஈவார் என நம்பி பேதையாகி பலகாலும் அவரைப் பின் பற்றி உழன்று அலுப்பது உலக நடை. சும்மாடு எதையும் சுமப்பது இல்லை. அந்த சும்மாட்டையும் சேர்த்து சுமப்பது தான் தலை விதி.

ஏமாற வைக்கும் வாழ்க்கையில் எத்தனையோ கவலைகள். இருக்கும் இதயமோ சிறியது. அதில் சுமக்கும் கவலைக்கோ அளவில்லை. எங்கள் நிலையை கூவி அதை எண்ணிப்பார்ப்பது இல்லை. உக்ரமான அதன் சூழ்நிலையால் உடல் இளைப்பது தான் கண்ட பலன். பொருட்செல்வம் இல்லை என்பது தெரிந்த செய்தி. வறுமை வாழ்க்கையில் அறிவுச் செல்வமும் வறண்டது. பொருள் நலம் உணரும் கல்விச் செல்வமும் கரந்து தொலைந்தது. கொடாதவனையே புகழ்ந்து குபேரன் எனவே மொழிந்து குலாவி அவமே திரிந்து சுமையைச் சுமந்து மெலிந்து அவதிப்பட வைத்த தொல்லை வறுமை அடியோடு தொலைய இளம் பருவ அந்நாளில் பொன்னான உன் அருளைப்போற்றி இருக்கலாம். அதனால் இளமையில்

பல நலம் ஏறி இருக்கும். அடடா, ஒரு சிறிதும் உன் அருள் பேணேன். இப்படியா விதி சதி செய்யும் இந்த நிலையில் காமன் அம்பு தைக்க வரும், காளைப்பருவம் கல கல கதை பின்னி உடலை பிசைகிறது. பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசம் பிடித்திட்டு என்னைக் கண்ணால் மயக்கி முலையால் விரட்டி தடி தடத்து புண்ணாம் குழியில் தள்ளி என் போதப் பொருள் பறித்து எண்ணாது உன்னை மறந்தேன் கச்சி ஏகம்பனே - என்று முற்றும் துறந்த ஒரு முனிவர் புலம்பினார்.

தூய்மையை பேய்மையாய் நினைப்பது பெரும் தவறு. பயனான மனத்தை பலவீனமாக்கி சிருஷ்டி ரகசியத்தை சிந்திக்காமல் தன் குற்றத்தை உலக குற்றமாக உணர்வது முறையாகுமா?. இறை திருவருள் இருந்து தூய ஒரு சேய் எதிர்காலத்தில் தோன்றுமேல் அதன் பசி ஆற்றும் கலசங்கள் இவை. இயற்கை தந்த பிரசாதங்கள் இவை என எண்ணுவது அறிவுடைமை. அதற்கு மாறாக உருக்கி வார்க்காத பொன் உருண்டை என்று பாவையர் குயங்களை எண்ணி பல இளித்து மனம் மிக மயங்குவது மரபாகுமா?

இல்லறம் தான் வேண்டுமேல் மங்கை ஒருத்தியை மணந்து இயற்கை நெறியில் இன்பம் கண்டு இருப்பது தானே தர்ம நெறி. இதுதானே பேரின்ப சுகத்திற்கு ஆதாரமான பெரிய வழி. அதற்கு மாறாக கண்ட கண்ட இடங்களில் காமித்து இரவு பகல், நன்னாள், தீநாள் என அறிந்து சுகாதாரமான ஒழுக்கமுறை வாழ அறியாதாரை என்ன என்று இயம்புவது. மயங்கி சுகாதரமதாய் ஒழுங்கில் ஒழுகாமல் தவறு செய்யும் இவர்களால் அழிவற்ற மாபெரும் தவநெறி மறைகிறது. உடல் கெட்டு உள்ளம் கெட்டு உணர்வும் சிதைந்து வர வர கிலேசமே வளர்கிறது. அணு அணுவாக உடலின் பலமும் நலிகிறது.

சுவாச ஓட்டமும் சுகமில்லை. மூச்சு தாராளமாக விடமுடிவதில்லை. அந்தி காலம் அணுகுகிறது. அதை எண்ணும் போதே இதயம் அதிர்கின்றதே. ஆவி நொந்து மடியாமுன் தலை தொங்கும், கண்கள் கலங்கும், காதடைக்கும், கைகால்கள் செயலற்றுப் போகும். நாவில் ஈரம் வறண்டுவிடும். இதுதான் முடிவு என்பதா ?.

அட்டா, பருமை உலகம் மறைகிறது, நுண்மை உலகம் புரிகிறது. ஓ, எம தூதர்கள் தரிசனமா? என்ன பயங்கரமான தோற்றம். பாசம் வீசும் பரபரப்பு. "கபக்" என்று உயிரைப் பற்றுகிற நேரம். எண் சாண் உடம்பும் ஒரு சாண் ஆகி ஆன்ம இதயம் அலறுகிறது.

தொடாதே, ஏய் எம தூதா, உன்னைத் தான் சொல்லுகிறேன், என ஆபத்தான அந்த சமயத்தில் ஒரு வாக்கு உமது திருநாவில் இருந்து உதயமாகுமா?

ஏழை, மேலும் கோழை இவன், சூழ்நிலையால் அறிவு சுழிந்தவன், கற்பித்தார் இல்லை, மேலும் கை கொடுப்பாரும் இல்லை, அவனுக்கு இனி யாம் அருள்வம் எனும் பொருளில், தொடாய் மறலியே, நி என்ற சொல் ஆகி அது உன் நாவரும் கொல் என்று குழறி வருகிறது குரல்.

மக்கள் நிலையைத் தம் மேல் ஏற்றி, அவர் நம் பிரதிநிதியாகி உமைபாலா, வடிவேலா, மரண நாளில் மறலியைத் தடுக்க யாம் வருவம், அஞ்ச வேண்டா என்ற ஒரு வாக்கு அருளும். அதிரும் மனம் அதன் பின் அமைதி அடையும் என அருணை முனிவர் விழுந்து கதறி விண்ணப்பித்த திருப்புகழ் இது.

மாயா சொரூப

மாயா சொரூப முழுச்ச மத்திகள்
ஓயா வுபாய மனப்ப சப்பிகள்
வாணாளை யீரும் விழிக்க டைச்சிகள் .... முநிவோரும்

மாலாகி வாட நகைத்து ருக்கிகள்
ஏகாச மீது தனத்தி றப்பிகள்
வாரீ ரிரீரென் முழுப்பு ரட்டிகள் .... வெகுமோகம்

ஆயாத வாசை யெழுப்பு மெத்திகள்
ஈயாத போதி லறப்பி ணக்கிகள்
ஆவேச நீருண் மதப்பொ றிச்சிகள் .... பழிபாவம்

ஆமா றெணாத திருட்டு மட்டைகள்
கோமாள மான குறிக்க ழுத்திகள்
ஆசார வீன விலைத்த னத்திய .... ருறவாமோ

காயாத பால்நெய் தயிர்க்கு டத்தினை
ஏயா வெணாம லெடுத்தி டைச்சிகள்
காணாத வாறு குடிக்கு மப்பொழு .... துரலோடே

கார்போலு மேனி தனைப்பி ணித்தொரு
போர்போ லசோதை பிடித்த டித்திட
காதோடு காது கையிற்பி டித்தழு .... தினிதூதும்

வேயா லநேக விதப்ப சுத்திரள்
சாயாமல் மீள அழைக்கு மச்சுதன்
வீறான மாம னெனப்ப டைத்தருள் .... வயலூரா

வீணாள் கொடாத படைச்செ ருக்கினில்
சூர்மாள வேலை விடுக்கும் அற்புத
வேலா விராலி மலைத்த லத்துறை .... பெருமாளே.

சொற்பிரிவு

மாயா சொரூப முழு சமத்திகள்
ஓயா உபாய மன பசப்பிகள்
வாழ் நாளை ஈரும் விழி கடைச்சிகள் முநிவோரும்

மாலாகி வாட நகைத்து உருக்கிகள்
ஏகாசம் மீது தன திறப்பிகள்
வாரீர் இரீர் என முழு புரட்டிகள் வெகுமோகம்

ஆயாத ஆசை எழுப்பும் எத்திகள்
ஈயாத போதில் அற பிணக்கிகள்
ஆவேச நீர் உண் மத பொறிச்சிகள் பழிபாவம்

ஆமாறு எணாத திருட்டு மட்டைகள்
கோமாளமான குறி கழுத்திகள்
ஆசார வீன விலை தனத்தியர் உறவாமோ

காயாத பால் நெய் தயிர் குடத்தினை
ஏயா எணாமல் எடுத்து இடைச்சிகள்
காணாத வாறு குடிக்கும் அப்பொழுது உரலோடே

கார் போலு மேனிதனை பிணித்து ஒரு
போர் போல யசோதை பிடித்து அடித்திட
காதோடு காது கையில் பிடித்து அழுது இனிது ஊதும்

வேயால் அநேக வித பசுத்திரள்
சாயாமல் மீள அழைக்கும் அச்சுதன்
வீறான மாமன் என படைத்தருள் வயலூரா

வீணாள் கொடாத படை செருக்கினில்
சூர் மாள வேலை விடுக்கும் அற்புத வேலா
விராலி மலை தலத்து உறை பெருமாளே

பதவுரை

மாயா சொரூப முழுச் சமத்திகள் = மாயையே மனித உரு எடுத்தது போன்ற பெரிய மோசக்காரிகள்,

ஓயா உபாய மனப் பசப்பிகள் = முடிவே இல்லாமல் எப்போதும் தந்திர உள்ளத்தோடு ஏமாற்றுபவர்கள்,

வாழ் நாளை ஈரும் விழிக் கடைச்சிகள் = தன்னிடம் வரும் ஆடவர்களின் ஆயுள் நாட்களை கவர்ந்து அழிக்கும் கடைக்கண் பார்வையினர்,

முநிவோரும் மாலாகி வாட நகைத்து உருக்கிகள் = தவ சிரேஷ்டர்களும் மயங்கும் படி சிரித்து உள்ளத்தை உருக்க வல்லவர்கள், (தவநெறி குன்றாப் பண்பில் துறவினரும் தோற்று அஞ்ச)

ஏகாச மீது தனத் திறப்பிகள் = மேலாடையை நெகிழ்த்து தனபாரங்களைக் காட்டுபவர்கள், (ஏகாசம் = ஆடை)

வாரீர் இரீர் என முழுப் புரட்டிகள் = வாருங்கள் இன்று தங்குங்கள் என்றெல்லாம் கூறி மோசம் செய்பவர்கள்,

வெகுமோகம் ஆயாத ஆசை எழுப்பும் எத்திகள் = மிக்க இச்சையையும் ஆராய்ந்து பார்க்க இடம் கொடுக்காமல் ஆசைகளைக் கிளப்பும் கபடிகள்,

ஈயாத போதில் அறப் பிணக்கிகள் = பணம் தராத போது மிகவும் சண்டை இடுபவர்கள்,

ஆவேச நீர் உண் மதப் பொறிச்சிகள் = கள் உண்டு மதம் பிடித்து அலையும் மனத்திகள்,

பழிபாவம் ஆமா எணாத திருட்டு மட்டைகள் = பழி பாவம் முதலியவை சரியா என எண்ணியும் பார்க்காத திருட்டு குணமுடையவர்கள்,

கோமாளமான குறி கழுத்திகள் = விநோதமான நகக் குறி இடப்பட்ட கழுத்தை உடையவர்கள்,

ஆசார வீன விலை தனத்தியர் உறவாமோ = நல் ஒழுக்கம் அற்று கொங்கைகளை பணத்திற்காக விற்கும் வேசியர்களின் உறவு நல்லதாகுமா ???

காயாத பால் நெய் தயிர் குடத்தினை = காய்ச்சாத பச்சைப் பால், பால், நெய், தயிர் குடங்களை

ஏயா எணாமல் எடுத்து = கொஞ்சமும் தயக்கம் இல்லாமல் உறியில் இருந்து எடுத்து,

இடைச்சிகள் காணாதவாறு குடிக்கும் அப்பொழுது = கோபியர்களுக்குத் தெரியாத படி குடிக்கும் அப்பொழுது,

கார்போலும் மேனி தனை உரலோடே பிணித்து = (அதற்குத் தண்டனையாக அவரின் மேக நிறம் போன்ற திரு மேனியை உரலுடன் கட்டி,

ஒரு போர் போல = பெரிய சண்டை இடுவது போல,

அசோதை பிடித்து அடித்திட = கண்ணபிரானின் வளர்ப்பு தாயான அசோதை பிடித்து நையப்புடைக்க,

காதோடு காது கையில் பிடித்தழுது = (தோப்புக் கரணம் போடுவது போல இரு கைகளால் காதுகளைப் பிடித்துக் கொண்டு மன்னிப்புக் கேட்டு அழுவது போல மாயாஜாலம் காட்டியவரும்,

இனிது ஊதும் வேயால் அநேக விதப் பசுத்திரள் = புல்லாங் குழலில் இனிய இசையை எழுப்பி (விரல் சேர் ஏழ் துளைகள் படு கழை விரல் முறை தடவிய இசைகள் பலப் பல தொனி தரு கருமுகில்), பல வகையான பசுக் கூட்டங்களை,

சாயாமல் மீள அழைக்கும் அச்சுதன் வீறான மாமன் என படைத்தருள் வயலூரா = வழி தவறிப்போகாமல் திரும்ப ஆயர் பாடிக்குக் கூட்டி வந்த திருமாலை பராக்கரமம் பொருந்திய மாமனாகக் கொண்ட வயலூர்ப் பதியில் விளங்குபவனே,

வீணாள் கொடாத படைச் செருக்கினில் = ஒருநாளும் போரில் தளர்வு அடையாத படை தம்மிடம் இருக்கிறது என்று கர்வத்தோடு இருந்த,

சூர்மாள வேலை விடுக்கும் அற்புத வேலா = சூரபத்மன் மாளும் படி கடலில் அற்புதத்தைச் செலுத்திய வேலாயுதனே,

விராலி மலை தலத்து உறை பெருமாளே = விராலி மலைச் சேத்திரத்தில் விளங்கும் பெருமாளே

மாலாசை கோப

மாலாசை கோப மோயாதெ நாளு
மாயா விகார .... வழியேசெல்

மாபாவி காளி தானேனு நாத
மாதா பிதாவு .... மினிநீயே

நாலான வேத நூலாக மாதி
நானோதி னேனு .... மிலைவீணே

நாள்போய் விடாம லாறாறு மீதில்
ஞானோப தேச .... மருள்வாயே

பாலா கலார ஆமோத லேப
பாடீர வாக .... அணிமீதே

பாதாள பூமி யாதார மீன
பானீய மேலை .... வயலூரா

வேலா விராலி வாழ்வே சமூக
வேதாள பூத .... பதிசேயே

வீரா கடோர சூராரி யேசெ
வேளே சுரேசர் .... பெருமாளே.

சொற்பிரிவு

மால் ஆசை கோபம் ஓயாதெ நாளும்
மாயா விகார வழியே செல்

மாபாவி காளி தானு(ம்) நாத
மாதா பிதாவும் இனி நீயே

நாலான வேத நூல் ஆகம ஆதி
நான் ஓதினேனும் இலை வீணே

நாள் போய் விடாமல் ஆறாறு மீதில்
ஞான உபதேசம் அருள்வாயே

பாலா, கலார ஆமோத, லேப
பாடீர வாக அணி மீதே

பாதாள பூமி ஆதார, மீன
பானீய மேலை வயலூரா

வேலா, விராலி வாழ்வே, சமூக
வேதாள பூத பதி சேயே

வீரா, கடோர சூராரியே, செ
வேளே, சுரேசர்பெருமாளே.

பதவுரை

மால் ஆசை கோபம் ஓயாதெ =மயக்கம், ஆசை, கோபம் எவை சிறிதும் ஓய்வு இல்லாமல்,

நாளும் மாயா விகார வழியே செல் = உலக வாழ்க்கை சம்பந்தமாக தினமும் மாய வேறுபாடுகள் செலுத்தும் மார்க்கத்தில் போய்க்கொண்டிருக்கும்,

மாபாவி காளி தானேன் = மகா பாவி, விஷகுணமுடையவன் (காளம் = விஷம்) தான் என்று இருந்தாலும்,

நாத மாதா பிதாவும் இனி நீயே = என் உடலுக்கும் உயிருக்கும் தலைவனே, தாயும் தந்தையும் எனக்கு நீ மாறா மகாரில் தான், (மாதா பிதா அருள் நலம்மகாரில் எனை இனி மா ஞான போதம் அருள் செய நினைவாயே - ஆசார ஈனன திருப்புகழ்)

நாலான வேதநூல் ஆகம ஆதி = நான்கு வேதங்களையும் ஆகம சாஸ்திரங்களையும்,

நான் ஓதி னேனும் இலை = நான் படித்துத் தெரிந்து கொள்ளவில்லை,

வீணே நாள்போய் விடாமல் ஆறாறு மீதில் = என் ஆயுள் நாட்கள் வீணாகக் கழியாமல், விருதா அலைந்து உழலாமல் 36 தத்துவங்களுக்கு மேற்பட்ட நிலையில், (ஆறு ஆறையும் நீத்து அதன் மேல் நிலையை - அநுபூதி)

ஞான உபதேசம் அருள்வாயே = ஞானோபதேசம் அருள வேண்டும். பாலா - இளங் குமரனே,

கலார ஆமோத = கல்லார (செங்குவளை) மலரில் மிகுந்த விருப்பம் உடையவனே

அணிமீதே லேப பாடீர வாக = ஆபரணங்கள் மேல் சந்தனக் கலவையை பூசியுள்ள அழகனே,

பாதாள பூமி ஆதார = கீழ் உலகம் பூஉலகிற்கு ஆதாரமானவனே,

மீன பானிய மேலை வயலூரா = மீன்கள் நிறைந்த நீர் நிலைகள் சூழ்ந்த சிராப்பள்ளிக்கு) மேற்கில் உள்ள வயலூரனே,

வேலா விராலி வாழ்வே = வேலனே, விராலி மலைச் செல்வனே,

சமூக வேதாள பூதபதி சேயே = கூட்டமான பேய் பூதங்களுக்குத் தலைவனான சிவ பெருமானின் புதல்வனே,

வீரா கடோர சூராரியே = வீரனே, கொடூரம் மிக்க சூரபத்மனுக்கு பகைவனே,

செ வேளே சுரேசர் பெருமாளே = செவ்வேளே, தேவேந்திரர்க்கெல்லாம் தலைவனே,

தாமரையின் மட்டு

தாமரையின் மட்டு வாசமல ரொத்த
தாளிணைநி னைப்பி லடியேனைத்
தாதவிழ்க டுக்கை நாகமகிழ் கற்ப
தாருவென மெத்தி யவிராலி

மாமலையி னிற்ப நீகருதி யுற்று
வாவெனஅ ழைத்தென் மனதாசை
மாசினைய றுத்து ஞானமுத ளித்த
வாரமினி நித்த மறவேனே

காமனையெ ரித்த தீநயன நெற்றி
காதியசு வர்க்க நதிவேணி
கானிலுறை புற்றி லாடுபணி யிட்ட
காதுடைய அப்பர் குருநாதா

சோமனொ டருக்கன் மீனுலவு மிக்க
சோலைபுடை சுற்று வயலூரா
சூடிய தடக்கை வேல்கொடுவி டுத்து
சூர்தலை துணித்த பெருமாளே.

சொற்பிரிவு

தாமரையின் மட்டு வாச மலர் ஒத்த
தாள் இணை நினைப்பு இல் அடியேனை
தாது அவிழ் கடுக்கை நாக(ம்) மகிழ் கற்ப
தாரு என மெத்திய விராலி

மா மலையினில் நிற்ப நீ கருதி உற்று
வா என அழைத்து என் மனது ஆசை
மாசினை அறுத்து ஞான அமுது அளித்த
வாரம் இனி நித்தம் மறவேனே

காமனை எரித்த தீ நயன நெற்றி
காதிய சுவர்க்க நதி வேணி
கானில் உறை புற்றில் ஆடு பணி இட்ட
காது உடைய அப்பர் குருநாதா

சோமனொடு அருக்கன் மீன் உலவும் மிக்க
சோலை புடை சுற்று வயலூரா
சூடிய தட கை வேல் கொடுவிடுத்து
சூர் தலை துணித்த பெருமாளே.

பதவுரை

மட்டு வாச = தேனும் நறு மணமும் நிறைந்த,

தாமரையின் மலர் ஒத்த = தாமரை மலருக்கு நிகரான,

தாள் இணை நினைப்பு இல் அடியேனை = தேவரீரின் திருவடிகளின் தியானமே இல்லாத அடியேனாகிய என்னை (தாமரை மலரில் தேன் துளிர்க்கும் நறு மணம் கமழும். முருகப்பெருமானின் திருவடிகளில் கருணைத் தேன் துளிர்க்கும் ஞான வாசனைவீசும், கருணைகூர்ப்பன கழல்கள் ஆர்ப்பன)

தாது அவிழ் கடுக்கை நாக(ம்) மகிழ் = மகரந்தப் பொடி வெளியே கொட்டும் கொன்றை, சுரபுன்னை, மகிழ மரங்கள்,

கற்ப தாரு என = தேவ லோகத்து கற்பக விருட்சங்களைப் போல திகழும்,

மெத்திய விராலிமா மலையினில் நிற்பம் = பெருமை மிக்க விராலி மலையில் நாம் வீற்றிருக்கின்றோம்,

நீ கருதி உற்று வா = அத்தலத்தை நாடி நீ என்னிடம் வருவாயாக,

என அழைத்து = என்று என்னைக் கூப்பிட்டு (வயலூரில் தங்கி அருணகிரியார் பல பாடல்களை இயற்றும் போது விகட பரிமள எனத் தொடங்கும் அரிய பெரிய திருப்புகழைப்பாடினார். முருகப் பெருமான் மகிழ்ந்து நீ விராலி மலைக்கு வா என பணித்தார். அரிய பெரிய திருப்புகழ் விளம்பு என் முன் எழுந்தருள் குகா, விராலி மலையுறை குரவா)

என் மனது ஆசை மாசினை அறுத்து = என் மனத்தில் இருந்த ஆசைகளையும் ஆணவ முதலாய குற்றங்களையும் ஒழித்து (ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கி அனுபூதி அடைவித்ததொருபார்வைக் காரனும். ஆசாநிகளம் துகளாயினபின் பேசா அனுபூதி பிறந்தது)

ஞான அமுது அளித்த வாரம் இனி நித்தம் மறவேனே = ஞான அமுதை பிரசாதமாக வழங்கிய அன்பை இனி எப்போதும் மறக்க மாட்டேன். (அவமே பிறந்த எனை இறவாமல் அன்பர் புகும் அமுதாலயம் பதவி அருள்வோனே)

காமனை எரித்த தீ நயன நெற்றி = மன்மதனை எரித்த அக்னி நேத்திரம் உடைய நெற்றியும்,

காதிய சுவர்க்க நதி வேணி = உலகையே அழிக்கும் படி பாய்ந்து வந்த ஆகாய கங்கையை தரித்துள்ள சடையும், (விண்ணுக்கு அடங்காமல் வெற்புக்கு அடங்காமல், மண்ணுக்கு அடங்காமல் வந்தாலும் - பெண்ணை இடத்தில் வைத்த இறைவர் சடா மகுடத்திலே கங்கை அடங்கும்- காள மேகப்புலவர். குடில சடில மிசை வெகு

முகு வெள்ளத்தை ஏற்ற பதி -திருப்புகழ்,)

கானில் உறை புற்றில் ஆடு பணி இட்ட = காட்டில் காணப்படும் புற்றில் படமெடுத்து ஆடும் பாம்பை அணிந்துள்ள,

காது உடைய அப்பர் குருநாதா = செவிகளை உடைய சிவபெருமானுக்கு (புற்று நாகம் அணிந்தவன் - தேவாரம்) குருநாதனே,

சோமனொடு அருக்கன் மீன் உலவும் = சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் உலவுகின்ற (அவ்வளவு)

மிக்க சோலை புடை சுற்று வயலூரா = உயர்ந்த சோலைகள் சூழ்ந்துள்ள வயலூர் பெருமானே,

சூடிய தட கை வேல் கொடுவிடுத்து = அகன்ற கரத்தில் ஏந்திய வேலை எடுத்துச் செலுத்தி,

சூர் தலை துணித்த பெருமாளே = சூரபதுமனின் சிரத்தை வெட்டிய பெருமையனே.

குருதி கிருமிகள்

குருதி கிருமிகள் சலமல மயிர்தசை
மருவு முருவமு மலமல மழகொடு
குலவு பலபணி பரிமள மறுசுவை
.... மடைபாயல்

குளிரி லறையக மிவைகளு மலமல
மனைவி மகவனை யநுசர்கள் முறைமுறை
குனகு கிளைஞர்க ளிவர்களு மலமல
.... மொருநாலு

சுருதி வழிமொழி சிவகலை யலதினி
யுலக கலைகளு மலமல மிலகிய
தொலைவி லுனைநினை பவருற வலதினி
.... யயலார்பால்

சுழல்வ தினிதென வசமுடன் வழிபடு
முறவு மலமல மருளலை கடல்கழி
துறைசெ லறிவினை யெனதுள மகிழ்வுற
.... அருள்வாயே

விருது முரசுகள் மொகுமொகு மொகுவென
முகுற ககபதி முகில்திகழ் முகடதில்
விகட இறகுகள் பறையிட அலகைகள்
.... நடமாட

விபுத ரரகர சிவசிவ சரணென
விரவு கதிர்முதி ரிமகரன் வலம்வர
வினைகொள் நிசிசரர் பொடிபட அடல்செயும்
.... வடிவேலா

மருது நெறுநெறு நெறுவென முறிபட
வுருளு முரலொடு தவழரி மருகசெ
வனச மலர்சுனை புலிநுழை முழையுடை
.... யவிராலி

மலையி லுறைகிற அறுமுக குருபர
கயலு மயிலையு மகரமு முகள்செநெல்
வயலி நகரியி லிறையவ அருள்தரு
.... பெருமாளே.

சொற்பிரிவு

குருதி கிருமிகள் சல(ம்) மல(ம்) மயிர் தசை
மருவும் உருவமும் அலம் அலம்
அழகொடு குலவு பல பணி பரிமளம்
அறு சுவை மடை பாயல்

குளிர் இல் அறை அகம் இவைகளும் அலம் அலம்
மனைவி மகவு அ(ன்)னை அநுசர்கள்
முறை முறை குனகு கிளைஞர்கள் இவர்களும்
அலம் அலம்

ஒரு நாலு சுருதி வழி மொழி சிவ கலை அலது
இனி உலக கலைகளும் அலம் அலம்
இலகிய தொலைவு இல் உனை நினைபவர்
உறவும் அலது

இனி அயலார் பால் சுழல்வது இனிது என
வசமுடன் வழிபடும் உறவு அலம் அலம்
அருள் அலை கடல் கழி துறை செல் அறிவினை
எனது உளம் மகிழ்வுற அருள்வாயே

விருது முரசுகள் மொகு மொகு மொகு என முகுற
ககபதி முகில் திகழ் முகடு அதில் விகட இறகுகள்
பறை இட அலகைகள் நடமாட

விபுதர் அரகர சிவ சிவ சரண் என
விரவு கதிர் முதிர் இம கரன் வலம் வர
வினைகொள் நிசிசரர் பொடிபட
அடல் செயும் வடிவேலா

மருது நெறு நெறு நெறு என முறிபட
உருளும் உரலொடு தவழ் அரி மருக
செவ் வனசம் மலர் சுனை புலி நுழை முழை உடைய

விராலி மலையில் உறைகிற அறு முக குருபர
கயலும் மயிலையும் மகரமும் உகள்
செ(ந்)நெல் வயலி நகரியில் இறையவ
அருள் தரு பெருமாளே.

பதவுரை

குருதி கிருமிகள் சல(ம்) மல(ம்) மயிர் தசை = இரத்தம், புழுக்கள், நீர், மலம், மயிர், சதை ஆகிய இவை

மருவும் உருவமும் அலம் அலம் = பொருந்திய உருவை உடைய இந்த உடல் எடுத்தது போதும் போதும்

அழகொடு குலவு பல பணி பரிமளம் = அழகோடு விளங்கும் பலவிதமான நகைகளும், நறு மணமுள்ள வாசனைப் பொருள்களும்,

அறு சுவை மடை பாயல் = ஆறு சுவைகள் கூடிய உணவும், படுக்கையும்

குளிர் இல் அறை அகம் இவைகளும் அலம் அலம் = குளிர் இல்லாத அடக்கமான அறைகள் கொண்ட வீடும் - இவைகள் யாவும் போதும் போதும்.

மனைவி மகவு அ(ன்)னை அநுசர்கள் = மனைவி, குழந்தைகள், தாயார், உடன் பிறந்தவர்கள்,

முறை முறை குனகு கிளைஞர்கள் இவர்களும் அலம் அலம் = உறவு முறைகளைக் கூறி குலவும் சுற்றத்தினர் இவர்களும் போதும் போதும்.

ஒரு நாலு சுருதி வழி மொழி சிவ கலை அலது = ஒரு நான்கு மறைகளின் வழியை எடுத்துக் கூறும் சைவ சித்தாந்த நூல்களைத் தவிர

இனி உலக கலைகளும் அலம் அலம் = வேறு உலக சம்பந்தமான நூல்களை ஓதுவதும் போதும் போதும்.

இலகிய தொலைவு இல் உனை நினைபவர் உறவும் அலது = விளங்கி நிற்பவனும், அழிவில்லாதவனுமாகிய உன்னை நினைப்பவர்களது நட்பைத் தவிர,

இனி அயலார் பால் சுழல்வது இனிது என = இனி பிறரிடத்தே திரிவது நல்லது என்று

வசமுடன் வழிபடும் உறவும் அலம் அலம் = அவர்கள் வசப்பட்டு, அவர்களை வழிபடுகின்ற நட்பும் போதும் போதும்

அருள் அலை கடல் கழி துறை செல் அறிவினை = நின் திருவருள் அலை வீசும் கடலின் சங்கமத் துறை வழியில் செல்லும் அறிவை

எனது உளம் மகிழ்வுற அருள்வாயே = என் மனம் மகிழும் பொருட்டு நீ அருள்வாயாக.

விருது முரசுகள் மொகு மொகு மொகு என முகுற = வெற்றிச் சின்னமான பறைகள் மொகு மொகு மொகு என்று பேரொலி செய்ய,

ககபதி முகில் திகழ் முகடு அதில் விகட இறகுகள் பறை இட = கருடன் மேகம் விளங்கும் உச்சி வானத்தில் அகன்ற இறகுகளைக் கொண்டு வட்டமிட,

அலகைகள் நடமாட = பேய்கள் நடனம் செய்ய,

விபுதர் அரகர சிவ சிவ சரண் என = தேவர்கள் அரகர சிவசிவ உன் அடைக்கலம் என்று ஒலி செய்ய,

விரவு கதிர் முதிர் இம கரன் வலம் வர = பொருந்திய சூரியனும், குளிர்ச்சி நிறைந்த கிரணங்களை உடைய சந்திரனும் வலம் வர,

வினைகொள் நிசிசரர் பொடிபட = தீச்செயலைக் கொண்ட அசுரர்கள் பொடிபட்டு அழிய,

அடல் செயும் வடிவேலா = போர் செய்த கூர்மையான வேலாயுதனே.

மருது நெறு நெறு நெறு என முறிபட = இரண்டு மருத மரங்கள் நெறு நெறு நெறு என்று முறிபடும்படி

உருளும் உரலொடு தவழ் அரி மருக = உருண்டு சென்று (இடுப்பில் கட்டிய) உரலுடனே தவழ்ந்திட்ட கண்ணனாம் திருமாலின் மருகனே,

செவ் வனசம் மலர் சுனை புலி நுழை முழை உடைய = செந்தாமரை மலர்கின்ற சுனையும், புலி நுழையும் குகையும் கொண்ட

விராலி மலையில் உறைகிற அறு முக குருபர = விராலிமலையில் வீற்றிருக்கும் ஆறு முகனே, குருபரனே.

கயலும் மயிலையும் மகரமும் உகள் = கயல் மீன்களும், மயிலை என்னும் மீன்களும், மகர மீன்களும் தாவித் திரிகின்ற

செ(ந்)நெல் வயலி நகரியில் இறையவ = செந்நெல் வயல்களைக் கொண்ட வயலூர்ப் பதியில்* அமரும் இறைவனே,

அருள் தரு பெருமாளே. = திருவருள் பாலிக்கும் பெருமாளே.

முற்றிற்று
விராலிவித்தகனுக்கு
ஹரஹரோஹரா!